கழக வெளியீடு—உசடு

# சூரனும் வேலனும்

579

MADURAI UNIVERSITY LIBRARY
12 DEC 197
MADURAI-2

ஆசிரியர் :

திரு. P. K. தெய்வநாயகம் பிள்ளை யவர்கள்

எழுதியது.

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

★

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
30750
மதுரை-1

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

First Edition November 1939

(Copy-right)

*Published by* :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI, & MADRAS.

*September*, *1945*

The T. V. C. Press, Madras, Q.H. MS 95-B, 2000-C.

# முன்னுரை

முருகப் பெருமான் சரித்திரத்தை யாவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை மிகுதியால் என் தகுதி நோக்காது இந்த நூலை எழுதினேன். இதில் குற்றங்கள் கண்டால் அவைகளைப் பாராட்டாது, இந்த நூலை எழுதும்படி தூண்டிய என் அன்பைமட்டுமே கொள்ளும்படி பெரியோர்களை வேண்டிக்கொள்கிறேன்.

இந்த நூலை எழுதி முடிப்பதில், எனக்குப் பேருதவி செய்த மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை யாசிரியர், திருவாளர் சு. நல்லசிவன்பிள்ளை யவர்களுக்கும், 'செந்தமிழ்' உதவிப் பத்திராசிரியர் திரு. T. K. இராமானுஜையங்கார் அவர்களுக்கும், இந்த நூலைத் தங்கள் வெளியீடாக வெளியிட்டுதவிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும், அதன் வெளியீட்டுக்கழக உறுப்பினரும், பாளையங்கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியருமாகிய வித்வான் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் உரைநடையைப் பார்வையிட்டு இன்றியமையா இடங்களில் திருத்தஞ் செய்தமைக்காக அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி. கே. தெய்வநாயகம்

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# பொருளடக்கம்


| தொடர் எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சூரன் பிறப்பு | 1 |
| 2. | சுக்கிராச்சாரியார் அறவுரை | 2 |
| 3. | சூரன் முடி-சூட்டு விழாவும் திருமணமும் | 4 |
| 4. | சூரன் இந்திராணியைக் கவர எண்ணுதல் | 5 |
| 5. | இந்திரன் கைலைக்குச் செல்லுதல் | 7 |
| 6. | காம தகனம் | 7 |
| 7. | உமையம்மையார் திருமணம் | 8 |
| 8. | இந்திரன் முறையீடு | 11 |
| 9. | முருகப்பெருமான் திருவவதாரம் | ,, |
| 10. | துணைவர் தோற்றம் | 12 |
| 11. | முருகப்பெருமான் கைலையை அடைதல் | 13 |
| 12. | முருகன் திருவிளையாடல் | 14 |
| 13. | பிரமனைச் சிறை யிட்டது | 15 |
| 14. | முருகக்கடவுள் திருமால் புதல்விகளுக்கு அருளியது | ,, |
| 15. | முருகப்பிரான் போருக்குப் புறப்படுதல் | 16 |
| 16. | தாரக வதம் | ,, |
| 17. | முருகப்பெருமான் தென்திசைக்குச் செல்லல் | 18 |
| 18. | முருகப்பெருமான் வீரவாகு தேவரைத் தூதனுப்புதல் | 19 |
| 19. | சயந்தன் புலம்பல் | 21 |
| 20. | வீரவாகு தேவர் சூரனைச் சந்தித்தல் | 24 |
| 21. | வீரவாகுதேவர் சூரன் படை வீரரை அழித்தல் | 28 |

| | | |
|---|---|---|
| 22. | வீரவாகு தேவர் முருகப்பிரானை அடைதல் | 29 |
| 23. | சூரன் மந்திராலோசனை | ,, |
| 24. | ஆலோசனைச் சபையினர்கள் | 30 |
| 25. | முருகப்பெருமான் சூரனேடு போருக்குச் செல்லுதல் | 36 |
| | வரவு கேள்வி | 38 |
| | முதல் நாள்—பானுகோபன் போர் | ,, |
| | இரண்டாம் நாள்-சூரன் போர் | 40 |
| | மூன்ரும் நாள்-பானுகோபன் போர் | 44 |
| | இரணியன் போர் | 46 |
| | அக்கினி முகன் போர் | ,, |
| | மூவாயிரவர் போர் | 47 |
| | தரும கோபன் போர் | 48 |
| | பானு கோபன் இறுதிநாட் போர் | ,, |
| | சிங்க முகன் போர் | 50 |
| | சூரன் கடைநாட் போர் | 51 |
| 26. | தெய்வயானை யம்மை திருமணம் | 58 |
| | வள்ளி யம்மை திருமணம் | 61 |
| | தக்கன் வரலாறு | 69 |
| | உமையம்மையார் தக்கன் மகளானது | 72 |
| | பிரமன் வேள்வி | 75 |
| | தக்கன் வேள்வி | 76 |
| | ததீசிமுனிவர் உபதேசம் | ,, |
| | சலந்தரன் வரலாறு | 81 |
| | கயமுகன் வரலாறு | 82 |
| | கந்த விரதம் | 88 |

# பாயிரம் :

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத் தலைவராகிய
**ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்**
இயற்றியது

நந்தேய்வ நாயகப்பேர் நம்பி நவின் றுய்ந்தான்
கந்தவேள் காதை கவினுறவே —சந்ததமும்
வேலு மயிலும் விளங்குறா வன்செவ்வேள்
காலுங் கலந்தவுளன் காண்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர்
**திரு. கி. இராமானுஜ ஐயங்கார் அவர்கள்**
இயற்றியது

வள்ளி மணாளன் வரலாற் றினைச்சுருக்கித்
தெள்ளு தமிழ்நடையிற் செய்தளித்தான்-புள்ளிமயி
லேறும் பெருமா னிணையடிக்கீழ்ப் பத்திமிக
வீறுதேய்வ நாயகனும் வேள்.

சென்னை திருப்புகழ் உயர்திரு.
**கிருபானந்தவாரி அவர்கள்**
இயற்றியது

வள்ளி மணவாள வள்ளல் சரிதைதனை
உள்ளியைபு மன்பால் உவந்துரைத்தான்—புள்ளி
திகழ்மயிலைக் கூரயிலைச் சிந்திக்கும் பூபன்
புகழ்தெய்வ நாயகன்மெய் பூண்டு.

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை ஆசிரியர் உயர்திரு.

## சு. நல்லசிவன் பிள்ளை அவர்கள்

### இயற்றியது

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செந்தமிழ் நாட்டின் றிருமுக மென்னத்
திகழ் நெல்லைப் பதியின்றெக் கணத்தில்
சந்தனப் பொதியத் தென்றல்வந் துலவு
தமனிய மாடமுந் தடமும்
பைந்துணர்ப் பொழிலும் கூபமும் யாறும்
பழனமும் பார்ப்பவர் விழியைச்
சிந்தையைக் கவரும் படலையார் குளப்பேர்
திருநகர் வாழ்ந்திடு செம்மல்; 1

மழைவளங் குன்றும் ஞான்றினுந் தமது
வண்மைகுன் றுதுள மகிழ்ந்து
விழைவொடு முணவுப் பொருளினை விளைத்து
மேதினிப் பசிப்பிணி விலக்கும்
தழைவுறு மேழிச் செல்வர்தம் மரபிற்
றருமமோ ருருவெடுத் தன்னான்
உழைதவழ் கரத்தோன் பத்திமை மிகுந்த
வுத்தமன் முத்தமி ழுணர்ந்தோன்; 2

மன்னவர் மதிக்குங் கந்தப்ப நாம
வரோதயன் றவத்தினால் வந்து
தென்னவர் தமிழும் ஆங்கில மொழியும்
சிறப்புறப் பயின்றுளந் தெளிந்தோன்

நன்னில மனைத்தும் புகழ்ந்திடுந் தேய்வ
நாயக நாமவேள் நாளும்
பின்னென வுரையா தடைந்தவர்க் கன்றே
பெரிதுநன் றூற்றுறு பெரியோன்; 3

விலங்குநோய் தவிர்க்குஞ் சாலைச்சில் லாவின்
மேதகு தலைமைசேர் மேலோன்
நலங்கிளர் நெல்லை நகர்வண்ணார் பேட்டை
நற்பதி வதிதரு நரேந்த்ரன்
பொலங்கிரி நிகர்த்தெண் டிசையினுந் தனாது
புகழ் நிறைந் தோங்கிடு புனிதன்
இலங்குவேற் கரத்துக் கடவுளை யிறைஞ்சி
யெண்ணிய வெவையுமெய் திடுவோன்; 4

வேறு

வந்தவென் போன்ற கவிஞரைக் கண்டால்
மாமதி மானும் வதனம லர்ந்து
பைந்தமிழ் போலுநல் லின்சொல் வழங்கிப்
பாலனந் தூசு பசும்பொ னளிப்போன்
சிந்தனை முற்று மெழிற்கடம் பர்க்கே
சேர்த்திய பத்தித் திருத்தகு செல்வன்
றந்ததன் மக்களெ லார்க்கு மவன்பேர்
தந்து மகிழ்ச்சி தழைக்கு முளத்தன்— 5

மாமலை போன்ற பிணியுறு போழ்தும்
மாசறு சிந்தை வருந்துறு போழ்தும்
மாமலை வின்றி யவன்றிரு நீறே
வன்பிணி துன்பிவை மாற்று மருந்தென்

றேமுற வின்றி யருந்தி யவன்றாள்
　　ஏத்தி யிறைஞ்சி யினிது ஞூவப்போன்
நாமகள் பூமகள் ஒன்று நலஞ்சேர்
　　நற்றமிழ் நாவலர் நாடு நிந் நல்லோன் 6

ஆறு முகப்பெரு மான்வர லாற்றை
　　யந்தமிழ் நாட்டினர் யாரு முணர்ந்து
பேறு மிகப்பெற லெய்தியவ் வேள்சீர்
　　பேணி யிறைஞ்சு பெரும்பய னெய்த
வேறு சரித்திரம் வந்து கலந்து
　　வேள்கதை தன்னை மிகுந்து படிப்போர்
வீறு மிகுத்த நலத்த வுளத்தை
　　விஞ்ச மலைக்கும் விதம்புரி யாமல்— 7

எத்தனை நாட்செலு மோவிது கற்றற்
　　கென்றுள மெண்ணுந ரெண்ண மகற்றி
உத்தமர் போற்றுறு காந்த மெனும்பே
　　ருற்ற பெருங்கட லொப்பெனு நூல்சொல்
வித்தக வேலன் வியன்கதை தன்னை
　　வேட்டொரு நாளில் விரைந்து படிக்கக்
கத்திய மொன்று சுருக்கி வரைந்தான்
　　கற்பவ ருள்ளங் களித்திட மாதோ— 8

என்னுயி ருக்குயி ராகிய கேண்மை
　　யேயுமிவ் வள்ள லினும்பல நூல்கள்
சென்னியொ ராறுறு வேளரு ளாலே
　　செய்துல கோர்க்குச் சிறப்புட னல்கி
அன்னவ னீடிய செல்வநன் மக்க
　　ளாயுளொ லாந்தர வாங்கினி தெய்திப்
பொன்னன தேவி யுடன்மகிழ் பூத்துப்
　　பொற்பொடு வாழி புவியினில் மாதோ— 9

சூரனும் வேலனு மென்னுரை சான்ற
தூய்துறு பேரொடு தோன்றுமிந் நூலைத்
தாரணி தன்னின்மெய்ப் பத்திமை பூண்டு
சந்தத மோர்ந்திடு தன்மையர் யாரும்
மாரனை வென்ற வனப்புறு மைந்தர்
மாநிதி யாயுள் வளந்தரு கல்வி
சீரணி சீர்த்தி சிறந்துநல் வாழ்க்கைத்
தேவி யுடன்மகிழ் சேர்ந்துறை வாரே—

# சூரனும் வேலனும்

---

## காப்பு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவார்தம் கை.

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

உ

திருச்சிற்றம்பலம்

# சூரனும் வேலனும்

## 1. சூரன் பிறப்பு

அசுரேந்திரன் என்பவன் அசுரருக்கு அரசன். அவன் மனைவி மங்கலகேசி எனப்படுவள். இவ்விருவர்களுக்கும் ஒரு பெண்மகவு பிறந்தது. அப்பெண் மகவிற்கு சுரசை எனப்பெயரிட்டனர். அசுரரின் குலகுரு சுக்கிராச்சாரியார். இவர், சுரசைக்குப் பலவகையான மாயவித்தைகளைக் கற்பித்து அவளுக்கு மாயை என்னும் பட்டப்பெயரும் இட்டனர்.

சுக்கிராச்சாரியார் ஒரு நாள் மாயையிடத்தில் அசுர குலம் வலிகுன்றி யிருப்பதையும், அதை முன்னேற்ற வேண்டிய வழிவகைகளையும் எடுத்துக் கூறினர். மாயை அதன்படி தன் தந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு மேருமலையின் வடபுறத்தை யடைந்தாள். அங்கு காசிப முனிவர் தவம் செய்துகொண்டிருக்கும் இடத்திற்கருகில் குளம், பூஞ்சோலை, செய்குன்று, மண்டபம் முதலியவைகளை உண்டாக்கினள்.

அவற்றைக் கண்டு தவஞ் செய்துகொண் டிருந்த காசிபமுனிவரின் மனம் அவற்றில் ஈடுபட்டது. அவர் தம் மனத்தைத்திருப்பித் தவஞ்செய்ய நினைக்கும்பொழுது அங்கிருந்த செய்குன்றின்மேல் அழகுமிக்க மாயையைக் கண்டார். கண்டதும், அவளை அணுகி அவள் வரலாற்றை வினவினர். அதற்கு அவள் முனிவரை நோக்கி, "நீர் தவத்தைவிட்டு என்னிடம் தனித்துவருதல் தகுதியன்று" என்ருள். முனிவர், பலவாறு வேண்டியபின் இருவருங் கூடிக் கலந்தனர். அதன் பயனாய் இவர்களுக்கு மக்கள் பலர் பிறந்தனர். அவர்களுள் சூரபன்மன், சிங்கமுகன்,

தாரகன் என்பவர்கள் முதன்மையானவர்கள். இவர்க ளுடன் ஒரு பெண் மகவும் பிறந்தது. அப்பெண் மகவின் பெயர் அசமுகி என்ப. பிள்ளைகளுக்குத் தகுந்த பருவம் வந்ததும், மாயை அவர்களுக்குத் தவத்தின் வலிமையை யும், பெருமையையும், எடுத்துக்கூறிச் சிவபிரானை நோக் கித் தவஞ்செய்யும்படி வற்புறுத்தினள். அதன்பின் அவ் வாறே அவள் விருப்பத்திற்கிணங்கி அப்பிள்ளைகள் தவஞ் செய்தார்கள். தவத்தில் பல ஆண்டுகள் கழிந்தன. ஆயினும் அவர்கட்குச் சிவபிரான் காட்சி தந்தருளினு ரில்லை. அதுகண்டு, சூரன் தன் உடம்பின் ஒருபகுதியைத் துணித்து ஓமகுண்டத்திலிட்டனன். இட்டும் அப்பெரு மானைக் காணுததால் தானே ஓமகுண்டத்தில் குதித்து விட்டான். அதன்பின். அவன் தம்பிமார் அதனை நோக் கிப் பெரிதும் வருந்தித் தாங்களும் அவ்வாறே ஓமகுண் டத்தில் விழத்துணிந்ததும் சிவபிரான் தோன்றி அவர்கள் வருந்தும் விவரத்தை வினவ, அவர்கள் நடந்ததைக் கூறினுர்கள். உடனே சிவபிரான் கங்கைநீரை ஓமகுண் டத்திற் பெய்து சூரனைத் தோற்றுவித்து, அவன் விரும்பிய பல வரங்களை அருளி நூற்றெட்டு யுகம் வாய்வாயாக வென்று பணித்தனர். அவன் எல்லா அண்டங்களுக்கும் தானே அரசனுக இருக்கவும், விரும்பிய அண்டத்துக்குப் போக்குவரவு புரிவதற்குரிய வாகனம் பெறவும், என்றும் அழியாத உடம்பைப் பெறவும், எவரோடு போர்புரிய நேரினும் அப்போரில் வெற்றிபெறும் பேராற்றலமையவும் வரங்களை அவரிடம் பெற்றுன்.

## 2. சுக்கிராச்சாரியர் அறவுரை

சூரனும், அவன் தம்பிமார்களும் தாங்கள் விரும்பிய படி பல வரங்களைப் பெற்றபின், தங்கள் தந்தையாகிய காசிபமுனிவரை வணங்கினுர்கள். காசிபர், தம் மக்களை நோக்கி அசுரகுல குருவாகிய சுக்கிராச்சாரியரை வணங்கி அறவுரை பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிட, அவர்கள் சுக்கிராச்சாரியரை யடைந்தார்கள். சூரன், சிங்கமுகன்

தாரகன் முதலியோருக்குச் சுக்கிராச்சாரியர் பின் வரும் அறவுரை கூறினர். "பதி, பசு, பாசம் (கடவுள், உயிர், தளை) இல்லை. நல்வினை, தீவினை இல்லை. அவை காரணமாக வரும் பிறப்பும் இன்ப துன்பங்களும் இல்லை. ஒரு பிறப்பிலன்றி வரும் பிறப்புக்களிலும் நல்வினை தீவினை தொடரு மென்றும், நல்வினை தீவினையை யறிந்து அவற்றிற்கு ஏற்ப இன்பதுன்பங்களைத் தப்பாது பதி கூட்டு மென்றும், பசுவும் பதியும் ஒன்றெனில் பதிக்குக் குற்றமுண்டென்றுங் கூறுவது உண்மையன்று. பாசமில்லை, பதியும் பசுவும் இரண்டல்ல, ஒன்றே. சிவபெருமான் திருவிளையாட்டில் இச்சைகொண்டு தம் மாயையால் பூதங்களையும் பிறவற்றையும் உண்டுபண்ணி உடம்புகள் தோறும் குடத்துள்ளிருக்கும் ஆகாயம்போலக் கலந்திருப்பர். அவ்வுடமபுகள் அழியும்போது தாம் முன்போலவே அழியாதிருப்பர். முத்தி என்று ஒன்று உண்டென்பதும் அதற்காக முயலவேண்டும் என்பதும் பொய். புலனும் பொறியும் பொய். இவைகள் ஈசுர மாயையிற் றோற்றுமென்றால் அச்செயலில் வரும் இன்ப துன்பம் மெய்யாகுமா? இவ்வினைகள் உடம்புள்ளவரை அவ்வுடம்பைச் சாரலாம். உயிர்கள்தோறுமிருக்கும் ஈசன் வேறுபாடின்றி ஒரு தன்மையாகவே இருப்பர். தருமம் நமக்குத் துணையாகு மென்றும், அதனைத் தப்பாது செய்யவேண்டும் என்றும், பாவத்தைச் செய்யலாகாது என்றும் அஞ்சுவது அறியாமை. ஏதேது செய்யும்படி நேரினும் அதனை அவ்வப்போது செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் மேல் வருவதொன்றுமில்லை. புண்ணிய பாவங்கள் மறு பிறப்புக்குப் பயன்படுவதில்லை. மறு பிறப்பை நம்ப வேண்டாம். பொய்யில் உண்டாவது மெய்யாகுமா? இவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு உன் சேனைகளைப் பல பக்கங்களிலும் நடத்திப் புகழ்பெற்று வாழ்வாயாக" என்று முடித்தார்.

இவ்வாறான உரைகளை மனதில் வைத்துக்கொண்டு சூரனும் அவன் தம்பிமார்களும் பல அண்டங்களிலுஞ்

சென்று *திக்விஜயம் செய்து யாவரையும் தமக்குக் கீழ்ப் படுத்தி மீண்டனர்.

அதன்பின்பு, சூரன், தானும் தன் தம்பிமார்களும் வாழத் தக்க நகரங்களை யமைத்துத் தரும்படி தெய்வத் தச்சனுக்குக் கட்டளையிட, அவன் தென்கடல் நடுவில் பலரும் புகழும்படியான ஒரு நகரைச் சூரன் வாழும்படி அமைத்து அதற்கு வீரமகேந்திரபுரம் என்று பெயரிட்டான். வடகடலில் சிங்கமுகனுக்கு ஒரு நகரைத் தோற்று வித்து, அதற்கு ஆசுரம் என்று பெயரிட்டான். மேரு மலைக்குத் தென்பக்கமுள்ள நாவலந்தீவில் ஏமகூட மலைச் சாரலில் தாரகன் வாழும்படி ஒரு நகரை உண்டுபண்ணி அதற்கு மாயபுரம் என்று பெயரிட்டான். மூவரும் அவ ரவர் நகரங்களில் வாழ்ந்து வருவாராயினர்.

## 3. சூரன் முடிசூட்டு விழாவும் திருமணமும்

சூரன் இவ்வாறு புகழ் பெற்று வந்ததும் அசுரேந்திர னுக்குப்பின் மகேந்திரபுரத்தில் முடிசூட்டப் பெற்றான். முடிசூட்டு விழாவில் தேவர்களும் தாழ்மையோடு கூடி நின்றார்கள். சூரன் புகழைத் தேவர்கள் மன நடுக்கத் தோடு புகழ்ந்தார்கள். தேவர்கள் பலரும் சூரனிட்ட பணி யைச் செய்து வந்தார்கள்.

பின், சூரனுக்கும் அவன் தம்பிமார்களுக்குந் திரும ணங்கள் நடந்தேறின. சூரன் தெய்வத் தச்சன் மகள் பதும கோமளையை மணந்து கொண்டான். சிங்கமுகன் எமன் மகள் விபுதையையும் தாரகன் நிருதியின் புதல்வி சவுரி யையும் மணந்துகொண்டனர். சூரன் வீரமகேந்திரத்தில் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். சூரனின் மனைவி பதுமகோமளைக்குப் பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்ற நான்கு புதல்வரும்; சிங்க முகன் மனைவி விபுதைக்கு அதிசூரன் என்னும் புதல்வ

* திக்விஜயம் - எட்டுத் திக்கிலும் வெற்றிபெறுதல்.

னும்; தாரகன் மனைவி சவுரிக்கு அசுரேந்திரன் என்னும் புதல்வனும் பிறந்தார்கள். தேவர்கள் அடிமைப்பட்டு சூரன் இட்ட பணிகளைச் செய்து வந்தனர். ஒவ்வொரு கிரக நாயகர்களும் சூரனுடைய தலைமையை மன நடுக்கத்தோடே ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் எவ்வகை இடுக்கணும் சாராத தலைமை பெற்ற அரசனாகிய சூரனின் ஆணையை ஏற்று நடக்க வேண்டியதாயிற்று.

## 4. சூரன் இந்திராணியைக் கவர எண்ணுதல்

சூரன் இவ்வாறு அரசு செலுத்தி வரும்போது,

"போதம், தனம், கல்வி பொன்றவருங் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்"

என்றபடி இந்திரனைச் சிறைசெய்து இந்திராணியைக் கவர நினைத்தான். தன் சேனையை அனுப்பி இந்திராணியைக் கொண்டு வரும்படி ஆணையிட்டனன்.

அச் செய்தியைக் கேட்ட இந்திரன் தன் மனைவியோடு சூரனுக்கு ஒளித்து உருக்கரந்து மண்ணுலகடைந்து சீகாழி என்னும் தலத்தில் தங்கினன். இந்திரனையும் அவன் மனைவியையுங் கொண்டுவரச் சென்ற சேனைகள், தேவலோகத்தில் அவர்கள் இல்லாததைத் தெரிவித்தார்கள்.

இந்திரன் தேவருலகத்தை விட்டு நீங்கியபின், அவன் மகன் சயந்தன் பட்டமேற்று ஆண்டு வந்தான். தேவர்களிற் சிலர் இந்திரனை அவன் கரந்துறையும் தலத்திற்கண்டு தங்கள் குறைபாட்டைத் தெரிவித்தார்கள். இந்திரன் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து தன் பழைய நிலைமையை அடையவேண்டுமென்று உறுதிகொண்டு, கயிலையங்கிரிக்குச் செல்ல நினைத்துத் தன் விருப்பத்தை இந்திராணிக்குத் தெரிவித்தான். இந்திராணி தனிமையாக

இருக்க வருந்தினாள். அவள் வருத்தந் தீர இந்திரன் *சாத்தாவை அவட்குத் துணைவைத்துப் போவதாய்க் கூறி, சாத்தாவின் பெருமையையும் அவர் காவற்றிறத்தின் தகுதியையும் அவட்கு எடுத்துக் கூறினான். அதன்பின் இந்திராணி தனித்திருக்க இசைந்ததும் இந்திரன் சாத்தாவை வழிபட்டான். சாத்தாவுந் தோன்றினார். இந்திரன் அவரிடம் தன் விருப்பத்தைக்கூறி இந்திராணியை ஒப்புவித்துக் கயிலைக்கு ஏகினன். ஐயனார் தம் படைத்தலைவர் மாகாளரை அவளுக்குக் காவலாக இருக்கப் பணித்துச் சென்றார்.

அப்பக்கங்களில் திரிந்துகொண்டிருந்த, சூரன் உடன் பிறந்தாளாகிய அசமுகி தன் தோழியோடு அங்கு வந்தாள். சீகாழியின் சோலைவனப்பு அவளைக் கவர, அவள் அதைப் பார்க்க விரும்பி உள்ளே சென்றாள். அங்கு இந்திராணியைக் கண்டாள். தன் தமையன் அவளைத் தேடிக்கொண்டிருப்பதை நினைத்து அவளைச் சூரனிடம் சேர்க்க விரும்பினாள். சூரன் வல்லமைகளை அவளிடம் புகழ்ந்து கூறி அவளைத் தன்னுடன் வரும்படி வேண்டினாள். அவள் அதற்கு இணங்காமை கண்டு வலிதிற் கொண்டுபோக முயன்றாள். அப்பொழுது இந்திராணி ஐயனாரைநினைத்துத் தொழுது வேண்டினள். வேண்டவே மாகாளர் தோன்றி அசமுகியின் கையைத் துணித்தார். அசமுகி வெட்டுண்ட கையோடு சூரன் முன்னிலையில் வந்து, சூரனையும் அசுரர்களையும் கோபமூட்டும் வண்ணம், நடந்த வரலாறுகளைக் கூறி வருந்தினாள். அவற்றைக் கேட்ட சூரன் மகன் பானுகோபன் சினந்தெழுந்து அவளைத் துன்புறுத்தியவர்களை நாடிச் சென்றான். அவர்கள் அங்கே காணப்படவில்லை. பின், தேவர்களையும் இந்திரன் மகன் சயந்தனையும் சிறைப்படுத்தித் தன் தந்தைமுன் கொணர்ந்து நிறுத்தினான்.

*சாத்தாவை ஐயனாரென்பர்.

## 5. இந்திரன் கைலைக்குச் செல்லுதல்

தேவர்களோடு கைலை சென்ற இந்திரன்; தன் குறைகளைச் சிவபிரான் திருமுன்னிருக்கும் நந்தி தேவரிடம் முறையிட்டு, வாயிலின் ஒரு பக்கம் சிவபிரானது சமயம் நோக்கிக் காத்துக்கொண் டிருந்தான். அச்சமயம் சிவபிரான் சனகாதி முனிவர்களுக்கு மறைவிளக்கஞ் செய்து கொண்டிருந்தார். நாரதர் கைலை வந்து இந்திராணிக்கு நேர்ந்த துன்பத்தைத் தெரிவித்தார். இந்திரன் அதனைக் கேள்வியுற்றுக் கவலைகொண்டு திருநந்திதேவரிடம் விடை பெற்றுச் சீகாழியில் வந்து தன் மனைவியோடும் உடன் வந்த தேவர்களோடும் தவஞ்செய்யும் பொருட்டு மேரு மலைச்சாரலை யடைந்தான்.

அங்கு, அவன் சிவபிரானை நோக்கி நெடுங்காலம் கடும் தவம் புரிந்தான்..அத்தவத்தின் பயனாகச் சிவபிரான் அவன் விருப்பம் விரைவில் நிறைவேறும்வண்ணம் திருவருள் புரிந்தார். பின் இந்திரன் மேருமலையிலிருந்து நீங்கி மனோவதியை யடைந்தான். அங்குத் தன் குருவாகிய வியாழபகவானுடைய மனைவியிடம் இந்திராணியை ஒப்பு வித்தான். அதன்பின் பிரமாவின் கோயிலிற் சென்று சூரன்செய்யுந் துன்பத்தையும் அதற்காகத் தான் சிவ பிரானை நோக்கித் தவஞ் செய்ததையும், அதற்குச் சிவ பிரான் அருளிய செய்தியையும் பிரமாவுக்குத் தெரிவித்தான். பிரமனும் இந்திரனுக்கு வேண்டுந் தேறுதல் கூறி மேல் நடக்கவேண்டியவைகளை விரைந்து செய்யவேண்டி இந்திரனுடன் திருமாலைக் காணுமாறு வைகுண்டத்திற்குச் சென்றான்.

## 6. காம *தகனம்

திருமால், பிரமா, இந்திரன் முதலிய மூவரும் தங்களுக்குச் சூரனால் நேரும் இடுக்கண்களை நினைத்து வருந்தி அவை தாங்கள் தக்கனுடன் சேர்ந்து சிவபிரானை இகழ்ந்ததால் நேர்ந்தன வென உணர்ந்தார்கள். அவ் இடுக்கண்

* தகனம்-எரித்தல்.

களைச் சிவபிரானிடம் பிறக்குங் குழந்தையே நீக்கியருளும் என்று துணிந்தனர். ஆனால், சிவபிரான் சனகாதி முனிவர்கள் பொருட்டு யோகநிலையி லிருந்ததால், மன்மதனை அவரிடம் அனுப்பி அவர் யோகத்தைக் கலைக்கும்படி வேண்டினார்கள். மன்மதன் முதலில் சிவபிரான் அருகே செல்ல அஞ்சினான். பின் பிரமா முதலியோர் வற்புறுத்த இணங்கினான். தன் மனைவி இரதிக்குத் தான் சிவபெருமானிடம் செல்லவேண்டியதைத் தெரிவித்தான்; அவள் தடுத்தனள். ஆயினும் அவளை மறுத்து அவன் சிவபிரானை அணுகி மலரம்புகளை அவர்மீது தொடுத்தான். உடனே சிவபிரான் தம் நெற்றிக் கண்ணைத் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பலாயினன்; பின்னும் சிவபிரான் மௌன நிலை கலையாதிருந்தார். அதுகண்டு பிரமா முதலியோர் அவரிடஞ் சென்று குறையிரந்தனர். சனகாதி முனிவர்களுந் தொழுது நின்றார்கள். இரதி ஒரு புறம் வருந்தி நின்றாள். சிவபெருமான் மௌனநிலையகற்றி முனிவர்களை நோக்கி, "மௌனத்தோடிருந்து தம்மையறிவதே யோகநிலை'' யென்று கூறினார். பின் பிரமன் முதலியோர் குறைநீக்க விரும்பி, மேருமலைச் சாரலில் தவஞ் செய்துகொண்டிருக்கிற உமாதேவியை மணக்க இசைந்து கொண்டார். திருமணவிழாவில் இரதிக்கு அவள் நாயகனை உயிர்ப்பித் தருளுவதாகச் சொல்லியனுப்பினார்.

## 7. உமையம்மையார் திருமணம்

இமயமலையரசன் மலையரையன் என்பான் ஒரு பெண் மகவு பெற்று, அப்பெண்ணைச் சிவபிரானுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று தவங்கிடந்தான். அவன் தவத்துக் கிரங்கி உமாதேவியார் ஒரு பெண்மகவாகத் தோன்றி அம்மலைச்சாரலில் அவன் கண்ணெதிர்ப் பட்டாள். அம் மகவினைக் கண்ட மலையரையன் அதனை விரைந்தெடுத்து, தன் வீடு சென்று தன் மனைவி மேனையிடம் கொடுக்க, அவளும் அதனை அன்போடு வாங்கி வளர்த்து வந்தாள்.

குழந்தை ஐந்தாண்டு நிரம்பியதும், சிவபிரானை நோக்கித் தவஞ் செய்யப் புறப்பட்டது. அதன் தாய் தந்தையர் தடுத்தும் இணங்காது, தான் விரும்பியவாறே தவம்புரியக் கருதிற்று. பின், மலையரையன் தன் மகள் கருத்திற் கிணங்கி ஒரு தவச்சாலையை யமைத்து அங்கு அவளைக் கன்னியர் பலரோடு அனுப்பினான். குழந்தை கடுந்தவம் புரிந்துவந்தது.

தாய் தந்தையரும் நாடோறும் குழந்தையைப் போய்ப் பார்த்து வந்தார்கள். இவ்வாறு தவம் புரிந்து வரும் உமாதேவியைக் காண விரும்பிச் சிவபிரான் ஒரு கிழவேடத்தோடு வந்தார். உமாதேவியைக் காத்துவந்த கன்னிப்பெண்கள் அப்பெரியாரை வணங்கி, அவர் அங்குப் போந்த காரணம் யாதோ வெனப் பணிவுடன் வினவினார்கள். அதற்கு அப்பெரியார் தாம் பார்வதியம்மையின் தவத்தைக் காண வந்ததாகக் கூறியருளினார். உடனே அவர்கள் அப்பெரியவர் வரவை அம்மையாரிடம் தெரிவித்து, அம்மையார் கட்டளைப்படி அவரை அம்மையார் முன் அழைத்துச் சென்றனர்.

பெரியார் அம்மையைக் கண்டதும், அவர் புரிந்து வரும் தவத்தின் நோக்கத்தைக் கேட்டார். அம்மையார் தாம் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்வதாகக் கூறவும், பெரியார் பலவகையாகச் சிவபிரானைக் குறித்துக் குறை பேசினார். உமாதேவியார் அக்குறையினைக் கேட்க மனம் பொறுது அவரைக் கடிந்து சிவபிரானுடைய அளப்பரிய பெருமைகளை எடுத்துக் கூறினார். கூறியதும், அப்பெரியார் புன்முறுவலுடன் தாம் அம்மையாரை மணக்க விரும்பி வந்ததாகத் தெரிவித்தார். அதுகேட்ட அம்மையார் அவரை இகழ்ந்து ஒருபுறமாகச் சென்றார். இச்சமயத்தில் சிவபிரான் தம் உண்மை வடிவத்தைக் காட்ட, அம்மையார் நாணமுற்றுத் தாம் கூறியதையெல்லாம் மன்னிக்கும்படி வேண்டினார். சிவபிரானும் அம்மையார் பல அன்பான மொழிகளால் தம்மைப் புகழ்ந்ததாக எண்

ணித் தாம் ஏற்றுக்கொண்டதாகவும், மறுநாள் தாம் அம்மையாரை மணந்துகொள்வதாகவும் கூறி மறைந்தருளினார். தவச்சாலையில் நிகழ்ந்தவை யனைத்தும் தோழிப் பெண்கள் மூலமாக அறிந்த மலையரையனும் மேனையும் உமாதேவியை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் இருக்கை சென்றதும், சிவபிரான் முனிவர் பலர் மூலமாகத் தம் விருப்பத்தை மலையரையனுக்குத் தெரிவித்தார். தக்கன் தன் பெண்ணைச் சிவபிரானுக்குக் கொடுத்து நேர்ந்த துன்பங்கள் தங்களுக்கும் வந்துவிடக் கூடாதே என்று, மேனை அஞ்சினாள். பின் தன் கணவனும் வந்த பெரியார்களும் தேற்றத் தெளிந்து, சிவபிரான் விருப்பப்படி தன் பெண்ணை அவர்க்கு மணம் புரிவிக்க இசைந்தாள்.

திருமணத்திற்கு வேண்டும் ஏற்பாடுகள் பலவும் நடந்தன. மலையரையன் ஆணைப்படி ஏவலர்கள் அழகிய மண்டபங்கள் அமைத்தார்கள். நகரமெங்கும் அலங்கரித்தார்கள். வருபவர்களின் பெருமைக்கு ஏற்றபடி வரவேற்புக்கு வேண்டும் பொருள்களெல்லாம் மலையரையன் முதலியோர் தொகுத்துவைத்துச் சிவபிரான் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிவபிரானும் தம் கணங்கள், முனிவர்கள், பிரமா, திருமால், இந்திரன் முதலியோர் புடைசூழ மலையரையன் திருநகர் வந்தடைந்தார். அப்பிரானை மலையரையன் தன் சுற்றத்தோடு எதிர்கொண்டழைத்தான். அங்குத் திருமணத்திற்காக அமைத்திருக்கும் பற்பலவகையான காட்சிகளைத் திருநந்திதேவர் காட்டச் சிவபிரான் முதலியோர் கண்டு மகிழ்ந்தார்கள். அதுகாலை, வடதலை தாழ்ந்தது; தென்தலை யுயர்ந்தது. அதனைச் சமப்படுத்த அகத்தியர் தென்பால் அனுப்பப்பட்டார். பின் திருமணம் இனிது நடந்தேறியது. சிவபிரான் அங்கு நடந்த சிறப்புகள் பலவற்றையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். இம்மகிழ்வான சமயத்தில், இரதி தோன்றித் தன் கணவனை உயிர்ப்பித்துத் தரும்படி

சிவபிரானை வேண்டினாள். மன்மதன் அவள் கண்களுக்கு மட்டுந் தோன்றும் நிலைமையில் சிவபிரான் அவனை உயிர்பித்தருளினார். பின் சிவபிரான் உமாதேவியாரோடும் கைலைமலையை யடைந்தார்.

## 8. இந்திரன் முறையீடு

சிவபிரானும் உமாதேவியும் கைலை சென்று சிறிது காலம் கழிந்தபின் பிரமா, திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் அப்பிரானைக் காணவந்தார்கள். வந்து திருநந்தி தேவரிடம் தங்கள் வரவைத் தெரிவித்தார்கள். அவர் சிவபிரானுக்கு அவர்கள் வரவைத் தெரிவித்து விடைபெற்று அவர்களை அவர் திருமுன் அனுப்பினார். அவர்கள் சிவபிரானைக் கண்டு,

நோக்கினு நுழைகிலா நுவலு கின்றதோர்
வாக்கினும் அமைகிலா மதிப்ப வொண்கிலா
நீக்கரு நிலைமையி னிற்றி யெந்தை நீ
யாக்கிய மாயமீ தறிகி லேமரோ.

—கந்தபுராணம் திரு அவதாரம்-32

எனத் துதித்துச் சூரன் முதலிய அசுரர்களால் தாங்கள் படுந் துன்பத்தைத் தெரிந்து, ஒரு குமரனை அருளித் தங்கள் குறையை நீக்கித் தரும்படி வேண்டினர்.

## 9. முருகப்பெருமான் திருவவதாரம்

சிவபிரான், அவர்களைத் தேற்றி அவர்கள் குறைதீர ஒரு திருக்குமரனைத் தந்தருளுவதாகக் கூறினார். அக்கணமே அப்பெருமானுக்கு ஆறுமுகங்கள் தோன்றின. ஆறுமுகங்களிலுமுள்ள நெற்றிக்கண்களிலிருந்தும் அக்கினிப் பொறிகள் புறப்பட்டன. அப்பொறிகளைக் கண்டதும் சகலரும் அஞ்சினார்கள். பொறிகள் உலகமெங்கும் பறந்தன.

ஆதலால் உலகெல்லாம் நிலைகுலைந்தன. உடனே தேவர்கள் சிவபிரானை வணங்கி,

வெந்திற லவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை யருள்கென வந்து வேண்டினேம்
அந்தமி லழலினீ யருள்தல் செய்தனை
யெந்தையே யெவ்வனம் யாங்க ளுய்வதே.

—கந்த. திருவவ. 56

எனக்கூறிப் பொறிகளின் வெப்பத்தைத் தெரிவித்தார்கள். சிவபிரானுக்குப் புதிதாகத் தோன்றிய ஐந்து முகங்களும் மறைந்தன. பொறிகளும் பெருமான் திருமுன் அடைந்தன. பெருமான் திருவுளப்படி பொறிகள் வாயு, அக்கினிகளோடு கலந்து கங்கையில் சேர்ந்து கங்கையிலிருந்து இமயமலைச் சாரலிலுள்ள சரவணப்பொய்கையிற் போய்த் தங்கின. தம்மை வணங்கி நின்ற தேவர்களிடம் அப்பொறிகள் ஒரு குமரனாகத் தோன்று மென்று சிவபிரான் அருளினார். அவர் அருளியபடியே,

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினா லளக்கொணா
நிறையுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி [மல்
அறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடுசரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளினானே.

—கந்த. திருவவ. 16

மேற்கூறியபடி ஆறு பொறிகளும் சரவணப் பொய்கை சென்றதும் ஆறு குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்கள் அறுவர், அக்குழந்தைகளை வளர்த்து வந்தார்கள்.

## 10. துணைவர் தோற்றம்

அக்கினிப் பொறிகளின் வெம்மை ஆற்றாது, உமாதேவியும் சிவபிரானைப் பிரிந்து ஓடும் வேகத்தில், அம்மையின் காற்சிலம்பினின்று ஒன்பது மணிகள் உதிர்ந்தன. பொறிகளின் வெம்மை நீங்கியபின் அம்மையார் சிவபிரானை அடைந்தார். ஒன்பது மணிகளும் திருமுன் வந்தன. சிவபிரான் ஆணையால், அம்மணிகள் ஒவ்வொன்

றிற்கும் ஒவ்வொரு சத்தியாக நவசத்திகள் தோன்றினர். அவ்வொன்பது சத்திகளும் அம்பிகையின் திருவுருவங்கள் போல விளங்கினர். அச்சத்திகள் மாணிக்கவல்லி, முத்து வல்லி, புட்பராகவல்லி, கோமேதகவல்லி, வயிடூரியவல்லி, வச்சிரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி எனப் பெயர் பெறுவர். இவர்களுள் மாணிக்கவல்லி யிடத்து வீரவாகுவும், முத்துவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீரமாமகேந்திரனும், கோமேதக வல்லியிடத்து வீரமாமகேச்சுரனும், வயிடூரிய வல்லி யிடத்து வீரமாபுரந்தனும், வச்சிரவல்லியிடத்து வீரராக்க தனும், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டனும், பவள வல்லியிடத்து வீராந்தகனும், இந்திரநீலவல்லியிடத்து வீரதீரனும் தோன்றினர்.

## 11. முருகப்பிரான் கைலையை யடைதல்

அதன்பின், சிவபிரானும் அம்பிகையும் சரவணப் பொய்கையை யடைந்தார்கள். பொய்கையை யடைந்த தும் கைலாசபதி அம்பிகையை நோக்கி, "உன் குழந்தை யைக் கொண்டு வருக" என்று பணித்தருள,

சரவ ணந்தனிற் றனதுசே யாறுருத் தனையும்
இருக ரங்களா லன்புட னெடுத்தனள் புல்லித்
திருமு கங்களோ ராறுபன் னிருபுயஞ் சேர்ந்த
வுருவ மொன்றெனச் செய்தன ளுலகமீன் றுடை
[யாள்.

எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவொன் றாகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவமொன் றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கௌரிதன் குமரன்.

மேற்கூறியவாறு, அம்பிகை சென்று ஆறு உருவங் கொண்ட முருகப்பிரானைத் தம் இரண்டு கைகளாலும் மகிழ்வுடன் எடுத்துத் தழுவியதும் ஆறு உருவங்களும் ஒருருவமாயின. அதுகண்டு, அம்மையார் 'கந்தா' என்

றழைத்து அன்புடன் எடுத்து முத்தமிட்டார். உடனே பால் சுரந்தது. அதனை அருள்சுரந்து ஊட்டினார். பின் அம்மையார் அக் குழந்தையைக்கொண்டு சிவபிரான் திருமுன் வைத்தார். பெருமான் அன்போடு குழந்தையை எடுத்துத் தம் பக்கத்து இருத்தியருளினார். இக் காட்சியைக் கண்ட தேவர்கள், பிரமா, திருமால், இந்திரன் முதலியோர் ஆரவாரித்தார்கள். அக்குழந்தையோடும் அம்பிகையோடும் சிவபிரான் கைலையை யடைந்தார்.

## 12. முருகன் திருவிளையாடல்

பின் முருகப்பிரான் பற்பல திருவிளையாடல்கள் செய்து உலகங்களை மயக்குவித்துக்கொண் டிருந்தார். அசுரர்களும் இத்திருவிளையாடல்களைக் கண்டு மயங்கிக் கொண்டிருந்தார்கள். தேவரும் அறிய முடியாமல் திகைத்துக்கொண் டிருந்தார்கள். முருகப்பிரான் ஒருநாள் மேரு மலையில் தவஞ்செய்துகொண்டிருக்கிற இந்திரனுக்கு முன் ஒருகுழந்தை வடிவத்தோடு வந்து, சிலமலைகளை எடுத்துத் தாமரை இதழ்போல வீசிக்கொண் டிருந்தார். இந்திரன் அதுகண்டு அவரோடு போருக்கு எதிர்த்தான். போரில் தோல்வியுற்று மயங்கி விழுந்துவிட்டான். அவனோடுகூட எதிர்த்த தேவர்களில் பலர் இறந்துவிட்டார்கள். இது கண்ட நாரதர், அவர்கள் குருவாகிய வியாழபகவானிடம் தெரிவித்தார். குரு விரைந்து சென்று முருகப்பெருமான் தனியேநின்று போர்புரிந்துகொண் டிருப்பதைக்கண்டார். அவரிடம் சென்று, இந்திரன் முதலிய தேவரின் அறியாமையைப் பலவாறு எடுத்துக்கூறி இரங்கினார். பின் முருகப்பிரான் கைலை சென்றார். இந்திரனும் பின் சென்று கைலை மலைக்கு அண்மையில் கந்த வெற்பில் ஒரு கோயில் அமைப்பித்து அதில் முருகப்பிரானை எழுந்தருளும்படி வேண்டினன். வேண்டியவாறே அங்கு முருகப்பிரான் எழுந்தருள இந்திரன் முருகனை வழிப்பட்டு மனைவியை யடைந்தான். மற்றத் தேவர்களும் அவரவர் இடத்தை யடைந்தார்கள்.

நாரதர், பூமியில் ஒரு வேள்வி செய்தார். அதினின் றும் ஓர் ஆட்டுக்கடா தோன்றிப் பலரை அழித்தது. நாரதர் தேவர்களுடன் முருகப்பிரானை யடைந்து அதனை யடக்குமாறு விண்ணப்பித்தார். முருகக்கடவுள் வீரவாகு தேவரை அனுப்பி அந்தக் கடாவைக் கொண்டுவரச் செய்து, அதைத் தமக்கு ஊர்தியாக (வாகனமாக) வைத்துக்கொண்டு நாரதர் முதலியோரை வேள்வியை முடிக்கும்படி பணித்தருளினர்.

## 13. பிரமனைச் சிறையிட்டது

பிரமாவினிடம் முருகப்பிரான் '**ஓம்**' என்ற பதத்திற்குப் பொருள் கேட்க, அவர் சொல்ல முடியாது திகைக்க, அவரைச் சிறைசெய்து அவருடைய படைத்தற்றொழிலைத் தாமே செய்து வந்தார். அதை யறிந்த திருமால் சிவபிரானிடம் முறையிட, சிவபிரான் திருமால் விருப்பின்படி முருகனை வேண்ட, அவர் பிரமனைச் சிறையினின்றும் விடுவித்தருளினர்.

## 14. முருகக்கடவுள் திருமால் புதல்விகளுக்கு அருளியது

திருமாலின் புதல்விகளாகிய அமிர்தவல்லி, சுந்தரவல்லி இருவரும் முருகக் கடவுளின் மனைவிகளாக வேண்டுமென்று சிரவணப் பொய்கையில் தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். முருகப்பிரான் அவர்கள்மீது அன்பு கொண்டு, அவர்களுக்கு முன் தோன்றி, அமிர்தவல்லியை இந்திரன் மகளாகவும் சுந்திரவல்லியை நம்பி ராஜன் மகளாகவும் தோன்றி வளர்ந்து வரும்படியும், அவ்வாறு வளர்ந்து வருங்கால் தாம் வந்து அவர்களை மணஞ்செய்து கொள்வதாயும் அருளிச் செய்தார். அவர்களும் அப்படியே தோன்றி வளர்ந்து வந்தார்கள்.

## 15. முருகப்பிரான் போருக்குப் புறப்படுதல்

சில நாட்கள் சென்றன. இந்திரன் முதலிய தேவர்கள் துன்பம் நீங்கும் வழி பிறக்கவில்லை. பின்னும் அவர்கள் கைலையை யடைந்து தங்கள் குறைபாட்டைச் சொல்லி, சிவபிரானை வேண்டி வணங்கினார்கள். சிவபிரானும் அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, “உங்களுக்கு அருள்செய்யுங் காலம் கிட்டியது; முருகனை அனுப்புகிறோம்” என்று விடை கொடுத்து முருகப் பெருமானுக்கு வேண்டும் படைக்கலத்தையும், பூத சேனைகளையும் கொடுத்து அனுப்பினார். படைக்கலங்களில் முதன்மையானது **வேலாயுதம்**. அஃது எல்லா வல்லமையும் பொருந்தியது. முருகனும்; சிவபிரான், அம்மையார் இருவருடைய அருள்பெற்று வீரவாகு தேவர் முதலிய நவவீரரோடும், வேறு நாறாயிரம் வீரரோடும், பூத சேனைகளோடும், நாரதர் இந்திரன் முதலியவர்களோடும் புறப்பட்டார்.

## 16. தாரக வதம்

முருகப்பிரான் வரும்பொழுது தாரகனுடைய கிரௌஞ்சமலை எதிர்ப்பட்டது. நாரத முனிவர் அம்மலையின் கொடுமையையும் தாரகனுடைய வீரத்தையும் மாயத்தையும் பெருமானுக்குத் தெரிவித்தார். அது கேட்டு, முருகப் பெருமான் அவனை அழிக்க உடன்பட்டு வீரவாகு தேவரையும் படைகளையும் அனுப்பினார். படைகள் தாரகனோடு நெடுங்காலம் போர் புரிந்தும் அவனை வெல்ல முடியவில்லை. வீரவாகு தேவர் முதலியோர் எதிர்த்துச் சென்றார்கள். தாரகன் கிரௌஞ்ச மலைக்குள் நுழைந்தான். வீரவாகுதேவர் முதலிய வீரர்களும் பின் தொடர்ந்தார்கள். ஆனால், கிரௌஞ்ச மலையின் மாயத்தால் வெளியே வர முடியாமல் மலை மூடிக்கொள்ள, அதனுள்ளேயே அவர்கள் மயங்கி விழுந்தனர். வீரர்கள் மலையினுள்ளே மயங்கிக் கிடந்ததைத் தாரகன் அறிந்து, எஞ்சி நின்ற பூத சேனைகளை அழித்துச் சிதறியோடும்படி

செய்துவிட்டான். இது கண்ட நாரதர், முருகப் பெருமானிடம் வந்து அங்கு நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தார். உடனே பெருமான் புறப்பட்டு வந்தார். சிவகுமாரன் வருஞ் செய்தியைத் தாரகனுக்கு அவன் தூதர்கள் தெரிவித்தார்கள். அவனும் சிவகுமாரனை வந்து கண்டான். குமாரசுவாமியைக் கண்டதும் சுவாமியின் திருவுருவம் அவனை மயக்கிவிட்டது.

'முழுமதி யன்ன வாறு முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறு மணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்

தற்பம துடைய சிந்தைத் தாரக னினைய வாற்றுற் [றோ?
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு வனைத்து நோக்கி
யற்புத மெய்தி நம்மே லமர்செய வந்தா னென்றூற்
கற்பனை கடந்த வாதிக் கடவுளே யிவன்கொ லென்றான்.

இவ்வாறு கூறிச் சுவாமியின் அருளை மெச்சினான். சுவாமியிடம் தன்மேல் போருக்கு வருவது தகுதியல்ல என்று கூறினான்.

' அறவினை புரிந்தே யார்க்கு மருளொடு தண்டம் செய்யும்
இறையவ னுகுமீச னிமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை திருவுளங் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தன னெம்மை யென்றான்.'

அது கேட்ட முருகப்பிரான்; உயிர்கள் செய்யும் வினைக்கு ஏற்ப அருளும் தண்டமுஞ் செய்யும் முழுமுதற் கடவுள் அசுரர்கள் தேவர்களுக்குச் செய்யும் இடுக்கண்களை மனத்திற் கொண்டு அசுரர்களை அழிக்கும் பொருட்டுத் தம்மை அனுப்பி இருக்கிற செய்தியைத் தெரிவித்தார். அது கேட்டதும், தாரகன் போரைத் தொடங்கினான். முருகக் கடவுளும் எதிர்த்து வேலாயுதத்தை அவன் மேற் செலுத்தினார். உடனே தாரகன் மாய்ந்தான். கிரௌஞ்ச மலையும் பிளந்தது. வீரவாகு தேவர் முதலியோர் வெளியே வந்து பெருமானை யடைந்தார்கள். இது

முடிந்ததும், பெருமானும், வீரர்களும், தேவர்களும், தென் திசையை நோக்கிப் புறப்பட்டுத் தேவகிரியை அடைந்தார்கள். அங்குத் தேவர்கள், பெருமானுக்கு ஒரு கோயில் அமைத்துப் பல வழிகளில் தங்கள் அன்பைக் காட்டி வழிபட்டார்கள். தாரகன் உயிர் நீத்த போது அவன் மகன் அசுரேந்திரன் அங்கு இல்லை; சிங்கமுகனிடம் போயிருந்தான். பின், அவன் வந்து சேர்ந்து தன் தகப்பனுடைய ஈமக் கடன்களை முடித்தான். அவனுடைய தாயும் தாரகனுடைய மற்ற மனைவிகளும் நெருப்பிற் பாய்ந்து உயிர் நீத்தார்கள்.

பின், அசுரேந்திரன் வீரமகேந்திரத்தை யடைந்து சூரனிடம் தன் தந்தை இறந்த விவரத்தைத் தெரிவித்தான். சூரனும்; தன் தம்பி சிவகுமரனால் கொல்லப்பட்டதைக் கேட்டுப் பெரிதும் வருந்தினான். பின் அசுரேந்திரனைத் தேற்றித் தான் தன் தம்பியைக் கொன்றவனைக் கொல்லக் கருதிப் புறப்பட்டான். அச்சமயம் சூரன் மந்திரிகளில் ஒருவனான அதிமோகன் அவனைத் தடுத்துப் பின்வருமாறு சொன்னான்:—"பகைவர்கள் தங்கள் நகரத்தைச் சூழினும் அரசராக இருப்பவர்கள் தம் நகரைவிட்டுச் செல்லலாகாது. ஒற்றரால் அவர்கள் தன்மைகள் முற்றும் அறிந்து, பின் தம் படைத்தலைவர்களைக்கொண்டு வெல்ல வேண்டு"மென்று தெரிவித்துக்கொண்டான். சூரனும் ஒருவாறு சினந் தணிந்து, தம் ஒற்றர்களுள் சிறந்த ஆறுபேர்களை முருகனுடைய இயல்புகளைத் தெரிந்து வரும்படி அனுப்பினான்.

## 17. முருகப்பெருமான் தென்திசைக்குச் செல்லல்

முருகப்பெருமான் தேவகிரியை விட்டு நீங்கி, தேவர்களோடுந் தம் சேனைகளோடுந் தென் திசை நோக்கிப் புறப்பட்டுத் திருக்கேதாரத்தை யடைந்தார். பின் திருப்பருப்பதம், திருவேங்கடம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருக்காஞ்சி, திருவண்ணாமலை, திருவெண்ணெய்நல்லூர்,

விருத்தாசலம், சிதம்பரம் முதலான தலங்களுக்கு வந்து அங்கிருந்து குமாரபுரியாகிய சீகாழியை யடைந்தார். அங்குச் சிறிதுகாலந் தங்கி, சிவபெருமானை ஓர் இலிங்க வடிவு செய்து வழிபட்டார்.

'இருவரு முணர்கிலா திருந்த தாள்களைச்
சரவண மிசைவரு தனயன் பூசனை
புரிதலு முமையொரு புடையிற் சேர்தர
வருள்விடை மீமிசை யண்ண லேன்றினன்.'

குமரன் பூசைக் கிரங்கிச் சிவபெருமான் தோன்றி அவருக்கு உருத்திர பாசுபதத்தைக் கொடுத்தார். பாசுபதத்தைப் பெற்றுக்கொண்டு வேறு தலங்கட்குப் புறப்பட்டார். மாயூரம், திருவிடைமருதூர், திருவாரூர் என்ற தலங்களுக்குச் சென்றார். அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில், திருப்பரங்குன்றில் தவஞ் செய்துகொண் டிருந்த பராசரமுனிவரின் புதல்வர் அறுவரும் பெருமான் வருகையை அறிந்து வந்து எதிர்கொண்டு வணங்கினார்கள். அவர்களும் உடன்வரப் பெருமான் திருச்செந்தூரை நோக்கிப் புறப்பட்டார். திருச்செங்குன்றை வழிபட்டு * அலைவாயை அடைந்து அங்கு ஒரு கோயில் அமைப்பித்து அதில் எழுந்தருளினர்.

## 18. முருகப்பெருமான் வீரவாகுதேவரைத் தூதனுப்புதல்

திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்த முருகப்பெருமான் அசுரர்கள்மேல் படையெடுத்துச் செல்லுமுன் சூரனிடம் ஒரு தூதனுப்பி அறநெறியைக் கைக்கொண்டு தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து அவனைப் புகழோடும் எல்லாச் செல்வத்தோடும் நீடூழி வாழ்ந்திருக்கும் படியும், அதை அவன் ஏற்றுக்கொள்ளாவிடின் தேவர்கள் சிறையை விடுவித்து அறத்தை நிலை நிறுத்த வேண்டுமென்றும் சிந்தித்து வீரவாகு தேவரைச் சூரனிடம்

* அலைவாய்—திருச்செந்தூர்.

சென்று தம் கருத்தைத் தெரிவித்து வரும்படி கட்டளை யிட்டார். அவரும் பெருமான் திருவுளக் கருத்தை ஏற்றுப் புறப்பட்டார். இந்திரன், தன் புதல்வன் சயந்தனைப் பார்த்துத் தேறுதல் சொல்லிவரும்படி வீரவாகு தேவரை வேண்டிக்கொண்டான். வீரவாகுதேவர் கந்தமாதனம் என்னும் மலையை யடைந்து அதன் உச்சிக்குச் சென்றார். அச்சமயம் மலை பிளந்து பூமியில் ஆழ்ந்துவிட்டது.

வீரவாகுதேவர் ஒரு பெரிய உருவத்தைக் கொண்டு நின்று முருகக்கடவுளை நினைந்து அருட்பார்வையால் நோக்கினார். நோக்கவே, சூரனுடைய நகரம் தோன்றியது. அதன் சிறப்புக்களைக் கண்டு வியப்பெய்தினார்.

தேவர்கள் சிறையிற் கிடைப்பதைக் கண்டதும் அவருக்குச் சினம் எழுந்தது. முருகப்பெருமானை நினைந்து கொண்டு வீரமகேந்திரத்தை நோக்கி விண்வழிப் புறப்பட்டார். கடலைக் கடந்து வீரமகேந்திரத்திற்கு வடபுறமுள்ள இலங்கையைச் சேர்ந்தார். அது யாளிமுகனால் காவல் செய்யப்பட்டுவந்தது. யாளிமுகனுடைய சேனைத்தலைவன் சினத்தோடு வீரவாகு தேவரை யாரென்று வினவினான். அவரும் தம்மை அறிவித்துக்கொண்டார். இருவருக்கும் போர் நிகழ்ந்தது. சிங்கமுகனை வென்று இலங்கையுட் சென்றார்.

யாளிமுகன் மகன் அதிசூரன் அதை யறிந்து, தான் நேரே வந்து அவரோடு போர் புரிந்தான். நடந்த சண்டையில் வீரவாகுதேவர் அதிசூரனைக்கொன்று வான் வழியாக எழுந்து விரைவில் மகேந்திரபுரியின் வடக்கு வாயிலை யடைந்தார். கோரன், அதிகோரன் என்னும் வீரர்கள் அதைக் காவல் செய்துகொண் டிருந்தார்கள். அவர்களுக்குத் துணையாக அளவில்லாத அவுணப் படைகள் உடன் இருந்தன. பின், கிழக்கு வாயிலை யடைந்தார். அங்கும் காவல் வலிமையாய் இருந்தது. பின் தெற்கு வாயிலை நோக்கிச் செல்லும்போது அவ்வாயிலை, வானிலிருந்து காத்துக்கொண் டிருந்த கயமுகன் அறிந்து வீரவாகு

தேவரை எதிர்த்தான். இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப்போரில் கயமுகன் இறந்துவிட்டான். பின் வீரவாகு தேவர் தம் இயற்கை வடிவத்தோடு செல்வத்தாலுண்டாகும் காலத்தாழ்ச்சியையும் துன்பங்களையும் நினைத்து, ஒரு அணு வடிவெடுத்து அந்நகர் முழுதும் பார்த்தார். நகரத்தின் அழகும் அமைப்பும், படைகளின் திறமையும், அவரைப் பெரிதும் வியப்படையச் செய்தன. பின், சூரனுடைய கோயிலை நோக்கிச் சென்றார். வழியில் பானுகோபன், வச்சிரவாகு, முதல் மந்திரியாகிய தருமகோபன் முதலியோருடைய மாளிகைகளைக் கடந்து, தேவர்கள் சிறைப்பட்டிருக்கும் உறையுளையுங் கண்டார். அச்சமயம் சயந்தன் புலம்பிக்கொண் டிருக்கும் சொற்கள் அவரை இழுத்தன.

## 19. சயந்தன் புலம்பல்

சயந்தன் சிறையில் அதிகமாக வருந்திக்கொண்டிருந்தான். தன் பழைய நிலையை நினைப்பான். தேவர்கள் அசுரர்களால் மெலிய நேர்ந்ததைச் சொல்வான். தன் தந்தையும் தாயும் அசுரர்களுக்குப் பயந்து ஓடியதையும், அவர்களின் நிலைமை எப்படி இருக்கிறதோ வென்பதையும், நினைத்துப் புலம்புவான். அசுரர்கள் நிலை என்று குறையும், தேவர்கள் தங்கள் பழைய நிலையை என்று அடைவார்கள் என்று எண்ணிப் புலம்புவான். இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்கும் சயந்தனையும் தேவர்களையும் சிறைக்காவலர்கள்; இந்திரனும் இந்திராணியும் மறைந்திருக்கும் இடத்தைத் தெரிவிக்கும்படி பலவாறு வருத்தினர்கள். சயந்தன் யாதொரு புல்லும் சொல்ல முடியாததைக் கண்டு இவர்கள் ஓய்ந்தார்கள்.

இவ்வாறு துன்பப்பட்ட சயந்தன் சிவபெருமானை நினைத்தான். அவர் திருவிளையாடல்கள் பலவற்றைக்கூறிப் புகழ்ந்தான். நினைப்பவர் பாவங்களை மாற்றுபவரே! சிந்தைக்கு எட்டாத சிவனே! அருண் மூர்த்தியே!

செழுஞ் சுடரே! அடியேங்கள் வருந்துவதை அறியீரா? யானைக்கும் கரிக்குருவிக்கும், நாரைக்கும், பாம்புக்கும் பேரருள் புரிந்த பெருமானே! கங்கையும் திங்களையும் சடையி லணிந்தவரே! நெற்றிக்கண்ணரே! காளகண்டரே! சிவனே! சிவனே!! எங்கள் அழுகையைக் கேட்டிலீரா? பாசப்பிணியில் உழலவிட்டீரா? அல்லது அதை நீக்கும் பொருட்டு வருந்துகின்றோமா? முழுமுதலே! உம்முடைய அருளன்றி வேறு யாதொரு கதியுங் காணேமே, முன்னா ளில் தேவரை வருத்திய அந்தகா சூரனை வதைத்து அருளினீரே! குரண்டகா சூரன் சிறகைக் குறைத்தீரே, பாற்கடலில் எழுந்த நஞ்சை யுண்டு உலகத்தைக் காத் தீரே! காளி உலகத்தை அழிக்க வந்ததை யறிந்து அவ ளொடு ஊர்த்துவ தாண்டவஞ் செய்தீரே! சலந்தரனைக் கொன்று தேவரைக் காத்தீரே! கயா சூரன் முனிவர்களை வருத்த அவனைக் கொன்று அவன் தோலைப் போர்த்துக் கொண்டீரே! பத்துத் தலையும் இருபது கரங்களுங் கொண்ட பஞ்ச ராவணர்கள் கொடுமையையறிந்து அவர் களைக் கொன்று உலகத்தைக் காத்தீரே! முன், ஓர் இந்தி ரன் தக்கனைப்போல உம்மை மதியாது யாகஞ் செய்ய, அவனை யழித்தீரே! அதுபோல இச் சூரனையும் அழித்து எங்கட்கு அருளலாகாதா? எங்கள் அன்பின் குறைவால் யாங்கள் உம் அருளை எப்படிப் பெற முடியும்? எங்கள் தகுதி நோக்காது, வந்து அருளினால் மட்டுமே எங்கள் துன்பம் நீங்கும், ஆதியே! நும் அருளால் இத்துன்பம் நீங்கினால் விண்ணுலக வாழ்க்கையை விரும்பேன், கடுந் தவஞ் செய்து உம்முடைய திருவடிகளையே பெறுவேன். செய்த தீவினையின் பயனாக அரக்கர் முதலியோரால் தண் டிக்கப்படுகிறேன். தேவருலகச் செல்வத்தை விரும்பேன். தில்லையில் நடனஞ் செய்கின்ற தேவரே! உம் திருவடி களைத் தந்தருளும். சிவமாயும், சிவமும் சக்தியுமாயும், பஞ்ச சாதாக்கியமாயும், இருபத்தைந்து கேவல மூர்த் தங்களாயும் நின்ற மூர்த்தி! என்னை இந்தப் பேரிடரினின் றும் காத்தருளும். நீர் நின்ற தன்மைகளெல்லாம் உயிர்

களைக் காததருளவனரோ? என்று பலவாறு புலம்பி வருத்தமும் எய்ப்பும் அடைந்து மயங்கிச் சோர்ந்தான். உடன் இருந்த தேவர்களும், சயந்தன் நிலையை யடைந்தார்கள்.

தோன்றாத் துணையாக இருந்து அருள் புரியும் பெருமான்; ஒரு குமரனைப்போல்

'வீறு சேதனம் வச்சிர மங்குசம் விசிக
மாறி லாதவே லபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
ஆறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்.'

என்றபடி வலப்பாகத்தில் கொடி, வச்சிரம், அங்குசம், பாணம், வேல், அபயம்; இடப்பாகத்தில் வரதம், தாமரை மலர், மணி, மழு, தண்டு, வில் முதலியனவும் கொண்ட பன்னிரண்டு கைகளோடும் சயந்தன் கனவிலே தோன்றினார். சயந்தனும் அவரை வணங்கி யார் என்று வினவினன். முருகப்பெருமான் தம்மைச் சிவகுமாரன் என்று அறிவித்துச் சயந்தனைத் தேற்றினார். சயந்தனும் நடந்த செய்திகள் அனைத்தையும் அறிந்தான். முருகப் பெருமானும் அசுரர்கள் பத்துநாட்களில் அழிந்துவிடுவார்கள் என்றும், வீரவாகு தேவர் சூரனிடம் தூது சென்றிருக்கின்றனரென்றும் சொன்னார். சயந்தனும் அறியாமை நீங்கி இன்பவெள்ளத்தாழ்ந்தான். சயந்தன் கண்ட கனவு போல உடனிருந்த தேவர்கள் அனைவருங் கண்டு, ஒருவருக்கொருவர் சொல்லி மகிழ்ந்தார்கள்.

தூதாகச் சென்ற வீரவாகு தேவர் இந்திரன் விருப்பின்படி, சிறையி லிருந்த சயந்தனையும் தேவர்களையும் பார்த்துத் தேறுதல் சொல்ல விரும்பிச் சிறைக்களத்தை யடைந்தார். காவலாளர்கள் அறியச் செல்வது தகாதென்று கண்டு, அவர்களை ஒரு மந்திரத்தால் அறிவு மயங்கச் செய்து, சிறைக்களத்துட் சென்று சயந்தனைக் கண்டு முருகப்பெருமான் சூரனைக் கொன்று தேவர்களை விடுவிக்க வந்திருக்கும் செய்தியையும், போர் தொடங்கு

முன் தம்மைத் தூதாக அனுப்பியிருக்கும் செய்தியையுஞ் சொல்லித் தேற்றினர். சயந்தனும் தன் தாய் தந்தையர்கள் நலங்களை விசாரித்தான். திருவருளை நினைத்து நினைத்துச் சயந்தனும் தேவர்களும் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

## 20. வீரவாகு தேவர் சூரனைச் சந்தித்தல்

வீரவாகு தேவர், பின் சூரன் அவையை நோக்கிச் சென்றார். மாளிகையின் வளங்களனைத்தையும் இமை கொட்டாது பார்த்து மகிழ்ந்தார். பின், சூரன் அத்தாணி மண்டபத்தில் ஒளிமணிக் கற்களமைத்த அரியணையின் மேல் வீற்றிருக்குஞ் சிறப்பையுங் கண்டார். அத்தாணி மண்டபம் மிக அழகாக அமைக்கப்பெற்றிருந்தது. அரியணை, (சிம்மாசனம்) வைரத்தால் உடலும், வைடூரியத்தால் பற்களும், முத்துக்களால் பிடரி மயிரும், நீலமணிகளால் கண்களும் அமைக்கப்பெற்றிருந்தது. அழகிய பெண்கள் பலர் சாமரமும் குடைகளும் தாங்கி நின்றார்கள். பலர், அடைப்பை, கெண்டி, பூந்தட்டு, வாள் முதலியவற்றைத் தாங்கி நின்றார்கள். ஒற்றர்களும், சேனைத் தலைவர்களும் அரசியற் பெருமைக்குப் பொருந்த ஆண்மையும் அச்சமும் தோற்றுவிக்கும் நிலையில் நின்றுகொண்டிருந்தார்கள். பெண்கள் நடித்தார்கள், வீணை வாத்தியங்களுடன் சூரனின் புகழ்பாடுவோர் ஒரு பக்கம் நின்றனர்.

சூரன் ; மணிமுடி ஒளிவீச, காதுகளில் குண்டலம் விளங்க, மார்பில் மதாணி மிளிர, சந்தனக்குழம்பு அணிந்த மார்பும் விளங்க, பீதாம்பரமும் மணிகளும் அணிந்து தன் மைந்தர் சூழ்ந்திருக்க வீற்றிருந்தான்.

வீரவாகு தேவர் மிகுந்த அன்போடும் வியப்போடும் பார்த்து மகிழ்ந்தார். சூரபன்மன் செய்த கடுந்தவத்தையும், சிவபிரானல் கொடுக்கப்பட்ட அளவுகடந்த வரங்களையும் நினைத்தார். சூரனுடைய சிறிய குற்றத்தால் அவனுக்கு வரப்போகிற பேரிடரை நினைத்து வருந்தினர்.

பின் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு, கொலு மண்டபத்தில் சூரன் காண அவன் முன் தோன்றினர்.

அவன் முன் தோன்றியதும் நின்று பேசிகொண்டிருக்கவேண்டியதை எண்ணி முருகப் பெருமானை வேண்டினர். ஒளிவீசும் ஓர் இருக்கை வீரவாகுதேவர் முன் தோன்றியது. அதன்மீது வீற்றிருந்து தாம் சிவகுமாரன் தூதுவர் என்றும் அவர் விருப்பப்படி தேவர்களைச் சிறைவிடுத்துப் பல்லாண்டு வாழ்ந்திருக்கக் கடவா யென்றும் தெரிவித்தார்.

"நிறையு மிந்துவைப் படவராக் கவர்ந்தென நிகளச்
சிறை படுத்தியே யமரரை வருத்தினை செய்யு
மறை யொழுக்கமு நீக்கினை யுலகமாண் மன்ன
ரறமு மன்றிது வீரர்தஞ் செய்கையு மன்றால்.

மெய்மை நீங்கியே கொலைகள வியன்றுமேலுள்ள
செம்மை யாளரைச் சீறியே யணங்குசெய் தீயோர்
தம்மி லாற்றரும் பழிசுமந் தொல்லையிற் றமரோ
டிம்மை வீடுவ ரெழுமையுந் துயரினு டிருப்பார்.

இங்ங னந்திரு நீங்கியே துயருழந் திறப்ப
ரங்ங னம்பெரி தாரிருண் மூழ்குவ ரதற்பி
னுங்ங னம்பிறந் தயருவ ரென்றுமீ துலவா
ரெங்ங னுய்வரோ பிறர்தமக் கல்லல்செய் திடுவோர்."

எனச் சூரனிடம் அவன் செயல் அரச அறமன்றென்றும், நீதியோடு ஆளுவதே அரச அறமென்றுஞ் சொன்னர். பக்கலிருந்த பலர், அவர் யாரென்று தெரியாது திகைத்து நின்றார்கள்.

சூரன் இவற்றைக்கேட்டதும் மிகுந்த சினங்கொண்டு முருகப்பெருமான் வீரவாகு தேவர் இவர்களின் குறைந்த ஆண்டினையும், அவர் சொல்லும் அறியாமையையும் வெறுத்துத் தங்கள் கூட்டத்திற்கும் தேவர் கூட்டத்திற்கு மிருக்கும் நீண்ட பகையையும் ஒருவர்க்கொருவர் வலி யுறுங் காலத்துச் செய்கிற துன்பம் புதிதல்ல வென்ப

தையுங் கூறித் தேவர் சிறையை நீக்க முடியாதென்றுஞ் சொன்னான்.

வீரவாகு தேவருக்குச் சினம் மிகுந்தது. முருகப் பெருமானுடைய பெருமையை யறியாது கூறும் சொற்கள் அவரைப் பெரிதும் புண்படுத்தின. வீரவாகு தேவர் முருகப்பெருமானின் பெருமைகளை வியந்து;

மண்ண ளந்திடு மாயனும் வனசமே லவனும்
எண்ண ரும்பக லேடியுங் காண்கிலா திருந்த
பண்ண வன்னுதல் விழியிடைப் பரஞ்சுட ருருவாய்
உண்ணி றைந்தபே ரருளினான் மதலையா யுதித்தான்.

முன்ன வர்க்குமுன் னாகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா தீசனுந் தனிப்பெயர் தாங்கி
பின்னு யிர்க்குயி ராயரு வுருவமா யெவர்க்கும்
அன்னை தாதையா யிருந்திடும் பரமனே யவன்காண்.

ஈச னேயவ னாடலான் மதலையா யினன்காண்
ஆசி லாவவ னறுமுகத் தண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

ஆதியாகிய குடிலையு மைவகைப் பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பன்மையும் வேறு
வோத நின்றிடு கலைகளு மவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா வுருவம்.

என்று கூறிச் சூரனே! முருகப் பெருமானைச் சிறுபாலன் என்று நினையாதே. முதலும் முடிவும் இல்லாது அருள் உருவாய் யார்க்கும் தாயுந் தந்தையுமாக இருக்கும் ஒப்பில்லாத சிவபெருமானே இக் குழந்தையாக வந்திருக்கின்றார். முன், அவரை வணங்கி உன் செல்வம் அனைத்தும் பெற்றாய். அவர் தந்த வரங்களை அவரே மாற்ற முடியாதா? எங்கும் நிறைந்து நின்று அருள் செய்கின்ற அறுமுகக் கடவுளுக்கு,

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணும் கரங்கள்

எங்க ணுந்திருக் கழலடி யெங்க ணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

தாம ரைக்கணூன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமு றப்படு மறைக்கெலா மாதிபெற் றியலும்
ஓமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றுமவன் றன்மையார் வகுப்பார்.

ஈட்டு மன்னு ரெவற்றிற்கு மிருவினைப் பயனைக்
கூட்டு வானவ னுங்கவை தூலயெனக் கூடின்
வேட்ட மேனிலைக் கதிபுரி வானவன் மேலாய்க்
காட்டு வான்முதற் றிறமெலா மாங்கவன் கண்டாய்.

சிறுவன் போலுறுங் குரவனே போலுறுந் தினையிற்
குறியன் போலுறு நெடியவ னுகியுங் குறுகு
நெறியி னின்னணம் வேறுபல் லுருக்கொடு நிலவும்
அறிவர் நாடருங் கந்தவே ளாடலா ரறிவார்.

என்றபடி "எங்குந் திருமுகங்கள், எங்குந் திருக்கண்கள், எங்குந் திருச்செவிகள், எங்குந் திருக்கரங்கள் உடைய ஞான மூர்த்தியாகிய அப்பெருமானின் பெருமையை நீ நன்கு அறிக. அப் பரம்பொருள் தேவர்களைச் சிறையி னின்று விடுவிக்கும்படி சொன்னல் நீ மறுத்தல் தகுதி யன்று. நீ மறுத்தால் அவருடைய வேற்படை உன்னையும் உன் சுற்றத்தையும் அழிக்கும். நீ இவைகளை நன்கு அறிந்து நடந்து கொள்க" என்றூர்.

சூரனும் "பல அண்டங்களையும், பல தேவர்களையும் வென்ற நான், நீ சொல்லுகிற பாலனுக்கு அஞ்சுவேனே? நீ பேசும் இறுமாப்பான வார்த்தைகளுக்கு உன்னைக் கொன்றிருப்பேன்; ஆனல் தூதுவன் என்ற தன்மை கருதி உன்னை விடுத்தேன்" என்று சொல்லித் தன் அருகிலிருந்த வீரர்களை நோக்கி, வீரவாகு தேவரைச் சிறையிலிடும்படி பணித்தான். அவர்கள் வீரவாகு தேவரை அணுகினூர் கள். வீரவாகு தேவர் அவர்களை விரைவிற் கொன்று சூரன் முன் எறிந்து, அவனை நோக்கி ;

உறுதி யின்னமொன் றுரைக்குவ நீயுமுன் கிளையும்
இறுதி யின்றியே யெஞ்சுதல் வேண்டுமே லிமையோர்
சிறைவி டுக்குதி யிகலினைத் தவிருதி செவ்வேள்
அறைக ழற்றுணை பரணமென் றுன்னியே யமர்தி.

அன்று கந்தவே ளமைந்ததோர் பெருவடி வதனுள்
ஒன்று ரோமத்தி னிருந்ததற் காற்றிடா தனதாய்த்
துன்று மாயிரத் தெட்டெனு மண்டமாந் தொகையும்
இன்று நீயது தெரிகிலை சிறுவனென் றிசைத்தாய்

வாழி யானநின் றயுளும் வன்மையும் வரமுஞ்
சேழில் சுற்றமும் படைகளும் வான்றொடக் கிளர்ந்து
சூழியாலுயர் மால்வரைச் சூழலிற் புகுந்த
வூழி மாருதம் போலடு மெம்பிரா னொருவேல்,

எனக் கூறி, " நீ வேற்படைக்கு இரையாவது திண்ணம். நீ இறக்குமுன் உன் புலன்கள் விரும்புவதை அனுபவித்துக் கொள்" என்று சொல்லிச் சபையினின்றும் நீங்கினர்.

## 21. வீரவாகுதேவர் சூரன் படைவீரரை அழித்தல்

சூரன் சேனைகள் வீரவாகுதேவரைப் போகவிடாமல் எதிர்த்தன. அப்பொழுது வீரவாகு தேவர் முருகப்பெருமானை நினைத்து வழிபட்டு, அவர் அருளால் எதிர்த்த சேனைகள் அத்தனையுங் கொன்று அங்நகரையும் அழித்தார். அச் சமயம் சூரனுடைய போர் வீரர்கள் வீரவாகு தேவரை எதிர்த்தார்கள். வீரவாகுதேவர் அவர்களையுங் கொன்றார். பின் சூரனுடைய மகன் வச்சிரவாகு அவரை எதிர்த்துப் போர் செய்தான். அதிலும் வீரவாகுதேவர் அவனைக் கொன்று வீழ்த்தினர். இவ்வாருக, அவர் மகேந்திர புரியை அழித்து முருகப்பெருமானிடந் திரும்பினர். வரும் வழியில் மகேந்திர புரிக்கு வடபாலுள்ள இலங்கை மலைக்கு வர, அங்கு யாளிமுகன் இவரை எதிர்த்தான். அப்போரில் யாளிமுகன் கொல்லப்பட்டான்.

## 22. வீரவாகு தேவர் முருகப்பிரானை அடைதல்

அதன் பின், வீரவாகு தேவர் கடலைத் தாண்டி கந்த வெற்பினருகே கடற் கரையிலுள்ள திருச்செந்தூர் வந்தடைந்தார். அவருடைய வரவைக் கண்டதும் அங்குள்ளாரனைவரும் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். வீரவாகு தேவர் அன்புமீதூர இன்பக்கண்ணீர் பொழிய முருகக்கடவுளின் திருவடிகளை வணங்கினார். பின் தாம் சூரபன்மனிடம் சென்றதையும், பெருமான் நோக்கப்படி தேவர்களைச் சிறை நீக்க வேண்டுமென்று அவனிடம் தெரிவித்ததையும், அவன் அதைப் பொருட்படுத்தாததையும் மேல் நிகழ்ந்தவைகளையும் தெரிவித்தார். உடனே முருகப்பிரான் பகைவர்களாகிய அவுணரால் நீ மிகவும் வருந்தினைபோலும்? என்று கூறி மிக்க அன்போடு அவர் முதுகைத் தடவினார்.

முருகப்பெருமான் தம் அருகிருந்த திருமால், இந்திரன், நான்முகன் முதலியோரை நோக்கிச் சூரனுடைய பதிலையும், மேல் அவனொடு போருக்குப் போகவேண்டிய முதன்மையையுந் தெரிவித்தார். அதன்பின் வீரவாகு தேவர் சயந்தனைக் கண்டதையும் அவன் நிலைமையையும் இந்திரனிடம் தெரிவித்தார்.

## 23. சூரன் மந்திராலோசனை

வீரவாகுதேவர் தன்னைவிட்டு நீங்கியபின் சூரன் தன் நகரைச் சுற்றிப் பார்த்தான். தன் அரண்மனைக்கும் நகரத்திற்கும் நேர்ந்த இன்னல்களைக் கண்டு பெரிதும் வருந்தினான். தக்கவர்களைக் கொண்டு அழிந்த இடங்களைத் திருத்தி யமைத்தான். தன் மகன் வச்சிரவாகு இறந்த துயர் அவனைப் பெரிதும் வருத்தியது. தானே போருக்குப் போய் சிவகுமாரனையும் அவர் தூதனாகிய வீரவாகு தேவரையும் கொன்று விடுவதாகத் தீர்மானித்துக் கொண்டு தன் மந்திராலோசனை சபையை யடைந்தான்.

பகன், மயூரன் முதலிய ஒற்றரும், தாங்கள் சிவகுமாரனை யும் பூதகணங்களையும் கண்டதைத் தெரிவித்தார்கள். மேல் நடக்கவேண்டிய செய்திகளுக்கு ஆலோசனைச் சபையினருள் ஒவ்வொருவருடைய கருத்தையும் அறிய விழைந்தான்.

## 24. ஆலோசனைச் சபையினர்கள்

அக்காலை, அவ்வவைக்களத்தில் (1) மகுடன் (2) துர்க் குணன் (3) தருமகோபன் (4) பானுகோபன் (5) இர ணியன் (6) சிங்கமுகன் முதலியோர் கூடியிருந்தனர். மகுடன்: சூரபன்மன் கூறிய சொற்களைக் கேட்டுக் "கிரௌஞ்ச மலையையும், திருமாலை வென்ற உன் தம்பி யாகிய தாரகனையும் ஒரு நொடிப்பொழுதில் அழித்த வீரனைப் பாலகன் என்று சொல்வது தகாது. இங்கு வந்த தூதுவனும் எளிதானவனல்லன். அவன் உன் தம்பியைக் கொன்ற அன்றே நீ சிவகுமாரனோடு போர்புரிந்து அழிந் திருக்கவேண்டும். அக்காலத்தில் நீ உடனே போர் புரியா ததால் இத்தனை இன்னல்கள் நேர்ந்தன. ஆகையால் நீ இப்பொழுதே போருக்குச் சென்று அவனை அழிக்க வேண்டுவதே தக்க செயல்" என்றான்.

இவ்வாறு மகுடன் கூறவே, துர்க்குணன் என்னும் அடுத்த மந்திரி பின்வருமாறு கூறினான்: "திருமாலையும் மற்றத் தேவர்களையும் உன் ஏவலரைக் கொண்டு வெற்றி பெற்ற வீரனாகிய நீ, ஒரு பாலகனோடு போர் புரியப் புறப் படுவது தகுதியன்று; உன் வீரர்களைக் கொண்டே அவனை வெல்லல்வேண்டும்" என்றான். அவன் அவ்வாறு சொல்லி முடிக்குமுன், தருமகோபன் என்னும் பிறிதொரு மந்திரி எழுந்து "அரசனே! நீ சிறு பாலகனோடு போர் புரிதல், பொற்கலப்பையைக் கொண்டு புன்செயை உழுதாற் போலும். ஆதலின் இது தகுதியன்று. சிவகுமாரனும் அவன் சேனைகளும் உன் புதல்வர் அக்கினி முகன், இரணி யன் இவர்களுள் ஒருவருக்கு எதிர்நிற்க முடியுமா! நீயே

போருக்குச் சென்றால் நம்மவர் நாணுவர், தேவர்கள் நகைப்பர், ஆதலால், எவற்றையும் நீ நன்காராய்ந்து செய்யவேண்டும் என்றான்.

இதன்பின், பானுகோபன் தான் முன்பே போருக்குப் போகச் சூரபன்மன் தனக்கு விடையளிக்காததைப் பற்றி வருந்தி, இப்பொழுதாயினும் தான் போருக்குச் செல்லத் தனக்கு விடையளிக்குமாறு சூரபன்மனிடம் கேட்டு, அவனைப் போருக்குப் போகவேண்டாம் என்று தடுத்தான். பின் இரணியன், தன் தமையன் பானுகோபன் கூறியவாறே தன் தந்தை போருக்குச் செல்வதை நிறுத்தித், தன்னைப் போருக்கு அனுப்புமாறு வேண்டினான். இவர்கள் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கச் சிங்கமுகன் தன் எண்ணத்தைக் கூறி இவர்களைக் கண்டிக்கலாயினான். "மந்திரிமார்களும் படைத் தலைவர்களும் உன் புதல்வர்களும் தத்தம் வலிமைகளைச் சொன்னார்களேயன்றி உனக்குத் தக்க அறிவுரைகளை எடுத்துரைத்தார்கள் இல்லை" என்று பின்வருமாறு கூறுவானாயினன்.

பெற்றிடு திருவினிற் பிறந்த வெஞ்சினங்
கற்றவ ருணர்வையுங் கடக்கு மன்னது
முற்றுறு கின்றதன் முன்ன மன்பினோர்
உற்றன கூறியே யுணர்த்தல் வேண்டுமால்.

மன்னவர் செவியழன் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவ ரமைச்சர்க டுணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே.

"செல்வத்திற் பிறக்குங் கடுஞ்சினம், கற்றவர்கள் அறிவையுங் கடக்கும். அது வலியுறுமுன் அறிவுடையார் இதன் உண்மையை யறிந்து தெளிதல் வேண்டும். தம் சொல் எரியைப் போலச் சுடத்தக்கதாயினும், வேண்டுங் காலத்தில் உண்மையையும் நடுவு நிலையையும் உரைப்பவர்களே அமைச்சர்களும் துணைவர்களும் மேலோர்களு

மாவர். நீ தேவர்களுக்குத் துன்பஞ் செய்யும் புல்லிய இன்பத்தை மட்டும் நினைத்தாயே தவிர, அதனால் ஏற்படும் துன்பத்தை எண்ணுகின்றாயில்லை. நீ தேவர்களுக்குச் செய்த துன்பம் போதும். முருகப்பெருமானின் கருத்துப்படி தேவர்களைச் சிறைநீக்கி நீடு வாழ்ந்திருப்போம். நீ அவ்வாறு செய்யாதிருந்தால் நமக்கு வருவது துன்பமேயன்றி வேறில்லை. திரிபுரம் அழிந்ததுபோலவே நாமும் நங்குலமும் அழிவோம். எனக்குத் தோன்றியதையும் உனக்கு உறுதியானதையுஞ் சொன்னேன். சிவபெருமான் உனக்கு வரங் கொடுத்தபோது, நீ நூற்றெட்டு யுகமிருப்பாய் என்றதையும் அவர் சக்தி யுன்னைக் கொல்லுமென்பதையும் நினைவில் வை. அக்காலமும் இப்போது கிட்டியதென் றறிக. முருகப்பெருமான் வேல் சிவபெருமான் சத்தியே'' என்றும் சொல்ல, சூரன் இதைக் கேட்டுப் பெருமூச்செறிந்து, தம்பியைத் தேற்றினன். "தாரகனும் வச்சிரவாகுவும் இறந்ததற்கு வருந்தாதே. அவர்கள் தக்கபடி போர் புரியவில்லை. சிவபெருமானும் சக்தியும் வேறில்லை. அவர் கொடுத்த வரத்தை அவர் மாற்றமாட்டார். நூற்றெட்டு யுகம் மட்டும் வாழ்வா யென்று சொன்னதை நான் கேட்டதில்லை. தனியே பாலகன் என்னைப் போர்செய்து வெல்லுவான் என்பதை மறந்துவிடு. இடருற்ற காலை அஞ்சி ஒதுங்குவது சூரர்களின் செயலாகுமா? என் தம்பியாயிருந்தும் நீ இப்படிச் சொல்லுதல் தகாது'' என்று சொல்லச் சிங்கமுகன் மேலும் கூறுவான்.

வாலி தாமதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியு முக்கணு நாற்பெரும் புயமு
நீல மாமணிக் கண்டமுங் கொண்டுநின் றனனால்
மூல காரண மில்லதோர் பராபர முதல்வன்.

தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக் கொண்ட
தென்ன காரண மென்றியே லைந்தொழி லியற்றி
முன்னை யாருயிர் பாசங்கண் முழுவது மகற்றிப்
பின்னை வீடுபே றருளுவா னினைந்தபே ரருளே.

அப்ப ரன்றனை யுன்னியே யளவைதீர் கால
மெய்ப்பெ ருந்தவ மியற்றினை யதுகண்டு வெளிப்பட்
டொப்பி லாவர முதவியே யாங்கதற் கொழிவுஞ்
செப்பி வைத்தனன் தேர்ந்திலை போலுமத் திறனே.

பிறபிறப் பில்லாதவராயும் தூயராயும் மாயையைக் கடந்தவருமான சிவபெருமான், இளந்திங்களைத் தரித்த சடைமுடியும், பவளம்போன்ற திருமேனியும், மூன்று கண்களும், நான்கு தோள்களும், நீலமிடறும் கொண்டு ஐந்தொழில் புரிவது, உயிர்களை; ஆணவ மலக் கவிப்பி னின்று விடுவித்து வீடுபெறும் பொருட்டேயாம் அவர் உன் தவத்துக் கிரங்கி அளவிலாத வரங்களைக் கொடுத்து அதன் முடிவையுஞ் சொன்னார். மேலும்,

பெறல ருந்திரு வுடையநீ யறத்தினைப் பேணி
முறை புரிந்திடா தாற்றலா லமரரை முனிந்து
சிறையில் வைத்தனை யதுகண்டு மின்வலி சிந்தி
யிறுதி செய்திட வுன்னினன் யாவர்க்கு மீசன்.

வரம ளித்தயா மழிப்பது முறையன்று வரத்தாற்
பெருமை பெற்றுள சூரனை யடுவது பிறர்க்கும்
அரிதெனப்பர னுன்னியே தன்னுரு வாகும்
ஒரு மகற்கொடு முடித்துமென் றுன்னின னுளத்தில்.

செந்நி றத்திரு மேனியுந் திருமுக மாறும்
அன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக
முன்ன வர்க்குமுன் னாகிய பராபர முதல்வன்
றன்னு தற்கணா லொருதனிக் குமரனைத் தந்தான்.

மானு டத்தரின் விலங்கினிற் புட்களின் மற்றும்
ஊன முற்றுழல் யாக்கையிற் பிறந்துளா ரொப்ப
நீநி னைக்கலை பரஞ்சுடர் நெற்றியந் தலத்தே
தானு தித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்.

சீல மில்லவர்க் குணரவொண் ணுதசிற் பரனைப்
பால னென்றனை யவனிடத் திற்பல பொருளு
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையு மொடுங்கியே யவதரித் ததுபோல்.

அருவு மாகுவ னுருவமு மாகுவ னருவு
முருவு மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம் னுடைலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்துமென் றாலஃ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை.

இன்ன தன்மைசேர் முதல்வனைச் சிறுவனென் றிகழ்ந்து
பன்னு கின்றனை யவுணர்தங் கிளையெலாம் படுத்து
நின்னை யுந்தடிந் திடுவனே ரிமைப்பினி னிரப்புந்
தன்ன ருட்டிறங் காட்டுவான் வந்தனன் சமர்மேல்.

அற்ற மில்வகை யாயிரத் தெட்டெனு மண்டம்
பெற்ற னம்மென வியந்தனை தத்துவ பேத
முற்று ணர்ந்திலை தரணியோ வளப்பில வுளகாண்
மற்றை யண்டங்கள் கேட்டியேன் மருளுதி மன்னே.

வச்சி ரத்தனி யாக்கைபெற் றனமென மதித்தா
யிச்சி ரத்தையை விடுமதி யிருவினைக் கீடா
வச்செ டுத்திடு முயிர்கண்மாய்ந் திடுமென வறிஞர்
நிச்ச யித்தனர் துடிவுறு திருத்திகொ ணீயே.

பெருமை பெற்றிடு வானத்தி னிலத்திடைப் பிறந்
திருமை பெற்றிடு காயமு மிறந்திடுந் திண்ணம் [தோ
பருமி தத்துநின் வச்சிர யாக்கையும் பாரின்
உரிமை பெற்றுள தாதலா னழிவின்றி யுறுமோ?

அழிவின் மெய்வரம் பெற்றன மென்றனை யதற்கு
மொழித ரும்பொருள் கேண்மதி முச்சகந் தன்னுட்
கெழிய் மன்னுயிர் போல்சில வைகலிற் கெடாது
கழிபெ ரும்பக லிருந்திடு பான்மையே கண்டாய்.

கெடுத லில்லதோர் வளனொடு நீயுநின் கிளையும்
படுத லின்றியே வாழ்தியென் றின்னன பகர்ந்தேன்
இடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரை யின்னே
விடுதல் செய்குதி யென்றன னறிஞரின் மிக்கான்.

"நீதியில்லாத உன் செயல்களைக் கண்டு வெறுத்து, வரமளித்த அவரே உன்னை யழிப்பது முறையன்றென்று கருதி, உன்னையும் உன் செல்வங்களையும் அழிக்க நினைத்துத் தம் நெற்றிக்கண்ணினின்றும் ஆறுமுகங்களையும் பன்னிரண்டு தோள்களையுமுடைய ஒரு குமாரனைத் தோற்றுவித்திருக்கின்றார். கருவாய்ப் பிறக்குஞ் சிறுவர்களைப்போல அவரை நினையாதே. அவர் ஞானிகளாலும் அறியமுடியாதவர். சமயத்திற்கேற்ப அவர் உருவமும் அருவமுங்கொள்ள வல்லார். ஞானமே அவரை அறிய முடியாது. அவர் உன் அறிவை மயக்குதலால் நீயும் அவரைப் பாலன் என்று நினைக்கின்றாய் பூவுலகம் முழுதும் பெற்றோ மென்று இறுமாப்படைகின்றாய். உன் பொருள்களின் (தத்துவ பேதம்) ஒற்றுமை வேற்றுமைகளை நீ உணர்ந்தாயில்லை. வச்சிர யாக்கை பெற்றோமென்று நினையாதே, இருவினைக்கீடாய் உன் உடம்பு மாறுதலடையும். வச்சிரயாக்கையைப் பெற்றதனால் நீ நெடிது வாழ்ந்தாயே தவிர வேறில்லை. ஆயினும் உன் உடம்பு அழிவது திண்ணம். இதனை நினைவில் வை. முருகப்பெருமான் விரும்பியவாறு தேவர்களைச் சிறைவிடுத்து மேலும் வாழ்ந்திருக்க முயலவேண்டுவதே உனக்குத் தகுதி" எனச் சிங்கமுகன் அறிவுரை கூறி முடித்தான்.

இவ்வாறு சிங்கமுகன் சொல்லக்கேட்ட சூரபன்மன் சினந்து, "தீயினாலும் காற்றினாலும் நீரினாலுந் தாக்குண்டு சரவணப் பொய்கையில் அலையுண்டு தாயல்லாத பல

பெண்களின் முலையுண்ட பாலகனையா பரம்பொருள் என்கின்றாய்! சூரியன் ஒருவனே எண்ணில்லாத குடங்களிலுள்ள நீர்கள் தோறும் தன் ஒளியைக் காட்டுதல்போல, பரம்பொருள் ஒன்றே, உயிர் என்னும் பெயருடன் எண்ணில்லாத உருவங்களைப் பெற்றுத் தன் மாயையினால் பற்பல வினைகளைச் செய்கிறது. வெற்றியும் வலியுமுடையவர்க்கே உயர்வு. அறுமுகன் சிறியன். அவனை வெல்வது உறுதி. இனி, அவன் உயர்வைச் சொல்லும் மொழிகளை விட்டுவிடு. தேவர்களைச் சிறைசெய்தது கொடுங்கோன்மையன்றி வேறில்லை. சிவபிரான் வந்து சொன்னாலும் அவரோடு எதிர்த்துப் போராடுவேன். உன்னிடம் வீரம் என்பது இல்லை. நீ பேடிபோல அஞ்சுகின்றாய், மயங்காதே. நானே சென்று சிவகுமாரனோடு போர் புரிந்து வெற்றி கொண்டு மீளுவேன்" என்று சொல்லச், சிங்கமுகன் விதியை நினைத்து வருந்தித் தன் தமையனுக்கு முன்பே தான் போரில் மாண்டுவிடவேண்டும் என்று துணிவு கொண்டு, தன் தமையன் அடிகளிற் பணிந்து தானும் போருக்குச் செல்ல இசைந்து தன் நகரத்துக்குப் போய்த் தன் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு வரும்பொருட்டுச் சென்றான். சூரனும் அன்போடு வாழ்த்தி யனுப்பினான்.

## 25. முருகப் பெருமான் சூரனோடு போருக்குச் செல்லுதல்

திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான், சூரனோடு போர் புரிந்து அவனை அழிப்பதே தகுதி என்பதை உடனிருந்த பிரமா, விட்டுணு, இந்திரன் முதலியோருக்குத் தெரிவித்து, இரண்டு நூறாயிரம் வெள்ளம் சேனையோடும் 1. சுப்பிரர், 2. மேகமாலி, 3. சுவேதகிரிடர், 4. கபாலி, 5. அப்பிரசித்து, 6. சித்திராங்கர், 7. சுவாலதாலு, 8. வச்சிரர், 9. வீமர், 10. உக்கிரர், 11. உக்கிரேசர், 12. பிப்பலர், 13. நந்திசேனர், 14. சாமானர் 15. பிரமசர், 16. பிரமசேனர், 17. பதுமர், 18. கரானர்,

19. தண்டர், 20. பத்திரர், 21. பரிகணேமி, 22. உதவகர், 23. புட்பதந்தர், 24. உருத்திரகாரர், 25. வீரர், 26. மதிசயர், 27. கேதுமாலி, 28. வக்கிரர், 29. பிரமகேசர், 30. அதிபதி, 31. கலிங்கர், 32. கோரர், 33. அச்சுதர், 34. அசலர், 35. சாந்தர், 36 சித்திரசேனர், 37. பூரி, 38. சுசீலர், 39. மாசயர், 40. சிங்கர், 41. உருத்திரசிங்கர், 42. உபதிட்டர், 43. சயர், 44. ஈசர்,45. மத்தகர், 46. மதங்கர், 47. சண்டி, 48. மகாபாலர், 49. சுவேதர், 50. நீலபத்திரர், 51. சுவாகு, 52. அண்டாபரணர், 53. காகபாதர், 54. பிங்கலர். 55. மாயர், 56. நிகும்பர், 57. கும்பர், 58. சங்கபாலர், 59. விசாகர், 60. சதநாவர், 61. அயக்கிரீவர், 62. சகத்திரவாகு, 63. அயுதாக்ஷர், 64. அநந்தர், 65. வாமர், 66. மங்கலகேசர், 67. சோமர், 68. வச்சிரமாலி, 69. சண்டர். 70. அசமுகர். 71. சரபர், 72. குந்தர், 73. ஆடகர், 74. கவந்தர், 75. மேகர், 76. விசயர், 77. வித்துருமர், 78. தண்டி, 79 வியாக்கிரர், 80. காலபாசர், 81. தசமுகர், 82. குமுதர், 83. பானு, 84. தனஞ்செயர், 85. இடரூபர், 86. சுசிமுகர் 87. அனலகேசர், 88. சுபத்திரர், 89. கேது, 90. மோகர், 91. மத்தர், 92. உன்மத்தர், 93. நந்தி, 94. மனோபவர், 95. வாயுவேகர், 96. சகத்திரபாதர், 97. பானுகம்பர், 98. பதல்கர், 99. சுத்தர், 100. அனிகர், 101. சிதர், 102. சுனுதர், 103. சுமாலி, 104. மாலி, 105. அத்திரி, 106. அசுரகாலர், 107. அரிகேசர், 108. சுவாலகேசர் ஆகிய நூற்றெட்டுப் படைத்தலைவர்களோடும் புறப்பட்டார். பேரிகை, கரடிகை, துடி, காளம் முதலிய போருக்குரிய இசைக் கருவிகள் முழங்கின. முருகக் கடவுளும் சேனைகளும் மகேந்திரபுரியை நோக்கிச் சென்றார்கள். இலங்கை மலையைக் கடந்து மகேந்திரபுரியையடைந்ததும், பிரமா, விட்டுணு, இந்திரன் முதலியோர் முருகப் பெருமானிடம் சூரனுடைய ஊருக்குச் செல்லாது, அதையடுத்த எல்லையில் கோயில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்கள். முருகப் பெருமானும் அதற்கிணங்க, வீரமகேந்திரத்து எல்லையில்

ஒரு பாசறை அமைத்து ஏமகூடம் என்று பெயரிட்டு அங்கு வீற்றிருந்தார்கள்.

## வரவு கேள்வி

நாரதர் சூரபன்மனிடம் சென்றார். அவரை யார் என்று சூரன் வினவ, "நான் வடகயிலாயத்தில் வாழ்பவன். உங்கள் குலம் பெருகும்படி தவஞ்செய்து வருபவன். வஞ்சகம் பேசேன். காமம் முதலிய குறும்புகள் நீங்கிய தவங்கள் பல செய்தேன். தேவர்களுக்குப் பகைவன். சுக்கிரனுக்கு நண்பன்; நாரதர் என்னும் பேருடையேன். உன்னிடம் ஒருசெய்தி தெரிவிக்க வந்தேன்; சிவபெருமான் நெற்றிக் கண்ணினின்றும் கந்தன் என்று ஒரு புதல்வன் தோன்றியுளன். உன் பகைவர்களாகிய இந்திரன் முதலிய தேவர்கள் அவனை வணங்கி உன்னால் தங்களுக்கு நேர்ந்த இன்னல்களைத் தெரிவித்தார்கள் அவன் அவர்களுக்கு 'அஞ்சற்க' என்று கூறி அவர்களோடு உங்களை நோக்கி வந்து உன் தம்பி தாரகனையும் கிரௌஞ்ச மலையையும் அழித்துப் பின் உன்னிடம் அனுப்பிய தூதன் திரும்பியபின் உன்னை நோக்கி வந்து உன் நாட்டின் வடபால் ஒரு பாடிவீட்டில் தங்கியிருக்கின்றான்" என்று கூறினார். இவ்வண்ணமே சூரர்களின் ஒற்றர்களும் தெரிவித்தார்கள்.

சூரன் தன் எல்லைக் காவலர்களைக் கடிந்து, நாணமும் வியப்பும் மனத்தை உறுத்தத் தன் சேனைத் தலைவர்களைப் போருக்கு ஆயத்தமாகும்படி கட்டளையிட்டுத், தன் மகன் பானுகோபனை அழைத்துவரச் சொன்னான்.

## முதல் நாள்—பானுகோபன் போர்

பானுகோபனும் தன் தந்தைமுன்வந்தான். சூரன் அவனை நோக்கிச் "சிவகுமாரன்; பிரமா, விட்டுணு, இந்திரன், நந்திதேவர், பூதங்கள் முதலியோர் சூழப் போருக்கு வந்திருப்பதைத் தெரிவித்து, சிவகுமாரனோடு என் குமார

னாகிய நீயே சென்று போர் செய்து வென்று வருக" என்று சொல்ல, பானுகோபன் வீரமும் சினமுங் கொண்டு, தந்தையிடம் விடைபெற்றுத் தன் மாளிகையை யடைந்து போர்க்கலங்களைப் பூண்டு, தன் சேனைகள் சூழ்ந்துவரப் போருக்குப் புறப்பட்டான். பேரிகை முதலிய இசைக் கருவிகள் ஒலிக்கத் தன் தேரை முருகப் பெருமான் பாசறையை நோக்கிச் செலுத்தினான். அதை அறிந்த நாரதர் முருகப்பெருமானிடஞ் சென்று பானு கோபன் போர் புரிய வருவதையும், அவன் புகழையும் பின்வருமாறு முருகப்பெருமானுக்குத் தெரிவித்தார்.

"பிரம விட்டுணுக்களை வென்றவன். பல போர்களில் பகைவரை வென்று புகழ் பெற்றவன். மாயங்களில் வல்லவன். சிவபிரான் அளித்த படைக்கலத்தை யுடையவன். வருணனுடைய பாசத்தையும் இயமனுடைய சூலத்தை யுங் கவர்ந்தவன். இவனை மற்றவர்களைக்கொண்டு வெல்லுதல் அரிது. தேவரீரே எதிர்த்துப் போர் புரியவேண்டு" மென்று தெரிவித்தார். முருகக் கடவுள் வீரவாகுதேவரை நோக்கி, "நீ சேனைகளோடு சென்று பானுகோபனோடு போர் புரிக" என்று கட்டளையிட்டுப் பின் நாரதரை நோக்கி, "முனிவரரே! சரபப் புட்களை நோக்கிச் சென்ற சிங்கம் தானே அழிவுறும். அதுபோல் நம்மை எதிர்த்து வரும் பானுகோபன் தானே அழிவுறுவன்" என்று கூறினார்.

வீரவாகு தேவர்; திமிலை, பேரி, காளம் முதலிய இசைக்கருவிகள் ஒலிக்கப் போருக்குப் புறப்பட்டார். ஒற்றர்கள் இச்செய்தியை அரசகுமாரனாகிய பானுகோபனுக்குத் தெரிவித்தார்கள். இருதிறத்துச் சேனைகளும் கலந்து போர்புரிந்தன.

அனலி, சண்டன், மாயன், அசமுகன் முதலிய அவுண வீரருக்கும்; சிங்கன், நீலன், நீரன், மது முதலிய வீரவாகு தேவருடைய படைவீரருக்கும் போர் நிகழ்ந்தது. இருதிறத்தாரும் கடும்போர் புரிந்தனர். அவுண

வீரர்கள் மாண்டார்கள்; சேனைகளும் அழிந்தன. இவற்றைக் கண்ட பானுகோபன் தானே முன்னணியில் நின்று போர் புரிந்தான்; பூதவீரர்கள் பலரைக் கொன்றான். அசுரசேனைகள் பல திக்கிலும் சிதறி ஓடின. வீரவாகு தேவர் தாமும் முன்னணியில் நின்று போர் புரிந்து பானுகோபன் சேனைகள் எல்லாவற்றையும் அழித்தார். தாமே தனித்து நின்று பானுகோபனுடன் போர் புரிந்தார். இறுதியில் பானுகோபன் ஒரு மோகக் கணை ஏவி வீரவாகு தேவரையும் அவர் படைகளையும் மயங்கி விழும்படி செய்தான். இச்செய்தி யறிந்த முருகக் கடவுள் இவர்கள் மயக்கந் தீரும்படி பெருமோகக் கணையால் அவர்களைப் பழைய நிலையி லாக்கினர். வீரவாகுதேவர் பழைய நிலையடைந்ததும் சிவன் படைக்கலத்தை அவன்மேற் செலுத்த முயற்சித்தார். பானுகோபன் வான் வழியாகத் தன் அரண்மனையை யடைந்தான். அதுசமயம் பகலவனும் மறைந்தான். ஆதலால் போர் நிறுத்தப்பட்டது. பானுகோபன் தன் தந்தையின் அரண்மனைக்குச் செல்லவில்லை. நிகழ்ந்த செய்திகளை ஒற்றர்கள் வாயிலாய்ச் சூரன் தெரிந்து, மறுநாள் போர் புரியத் தானே புறப்படுதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலானன்.

## இரண்டாம் நாள்—சூரன் போர்

பகலவன் தோன்று முன்பே, சூரபன்மன் தன் நாட் கடன்களை முடித்துக்கொண்டு போர் புரிதற்கான முயற்சிகள் செய்யலானன். சூரபன்மன் தூதர்களால் செய்தி தெரிந்த படைவீரர்கள், பல பக்கங்களிலுமிருந்து சூலம், கணிச்சி, தண்டம், குலிசம் முதலிய போர்க்கருவிகளோடு வந்து கூடினார்கள். கூடினதும் தொண்டகம், துடி, பம்பை, முருகு, கொம்பு, பரடு முதலிய இசைக் கருவிகள் முழங்க, சிங்கமுகன் குமாரன் அதிசூரனும், தாரகன் மகன் அசுரேந்திரனும் தன் சேனைத் தலைவர்களாக அமைந்து நிற்க, சூரபன்மன் போருக்குப் புறப்பட்டான். சூரன் போர் புரிய வருவதை இந்திரன் அறிந்து முருகப் பெருமா

னிடம் அதனைத் தெரிவித்தான். வீரவாகுதேவர், எண்மர், நூறாயிரம் வீரர், பூதசேனைகளும் சூழ முருகப்பெருமான் புறப்பட்டார். வாயுதேவர், தேர்ப்பாகனாய் அமர்ந்து தேரைச் செலுத்தினார். அக்காலை தேவர்கள் பலரும் மகிழ்ச்சியாற் கூத்தாடினார்கள். இருதிறத்துச் சேனைகளும் நெருங்கிக் கடும்போர் புரியத் தொடங்கின. அவுணர் சேனையில் பலர் மாண்டதை யறிந்து சிங்கமுகன் மகன் அதிசூரனும், சேனைத் தலைவர்கள் பலரும் சினமிகுந்து தேவர்களின் சேனையை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். எதிரணியில் பூதப்படைத் தலைவன் உக்கிரன் என்பவன் அவனோடு எதிர்த்துப் போர் நிகழ்த்தினான். இறுதியில் அதிசூரனை உக்கிரன் கொன்றுவிட்டான். இச்செய்தி யறிந்த தாரகன் மகனாகிய அசுரேந்திரன் முன்னணியில் வந்தான். அவனைப் பூதர்கள் பலர் எதிர்த்துப் போர் நிகழ்த்தினார்கள். அக்கடும்போரைக் கண்டோரெல்லாம் மனக்கலக்க முற்றனர். வீரவாகுதேவர் அசுரேந்திரனுடைய கைகளில் ஒன்றை வெட்டி வீழ்த்தினார். வெட்டுண்டும் அசுரேந்திரன் ஒற்றைக் கையனாய் நெடுநேரம் போர் புரிந்தான். இறுதியில் வீரவாகுதேவர் அவன் தலையையும் துணித்தனர். அத்துடன் போர் முடிந்தது. இவைகளை யறிந்த சூரன் தானும் போருக்குப் புறப்பட்டான். வடவைத் தீயைப் (வடவாமுகாக்கினி) போன்ற சினத்தோடு போர்க்களத்தைவந்து சேர்ந்தான். பூதசேனைகளையும் சேனைத் தலைவர்களையும் விரைவில் எதிர்த்து அழித்தான். எஞ்சிய பூதப்படைகள் அச்சமுற்றுப் பல திக்குகளிலும் ஓடத் தொடங்கின. அதிபலர், வக்கிரர், வச்சிரர், கபாலி, உன்மத்தர், அச்சுதர், மாபலர், மதிசயர், மேகர், அண்டாபரணர், மேகமாலி, சுப்பிரர், காகபாதர், உதவகர், அசலர், கவந்தர், அத்திரி, பத்திரர், பதுமர், வியாக்கிரர், தனஞ்செயர், மத்தர், பிஞசி, சித்திராங்கர், கனகர், மாலி, நீலர், கும்பர், நிகும்பர், சண்டி, தண்டி, வாமர், சோமர், உக்கிரர், சிங்கர், சுவேத சிரிடர், சங்க பாலர், நந்தி, பிங்கலர், உரோம

சர் முதலான படைத்தலைவர்கள் அவனோடு எதிர்த்துத் தோல்வியுற்று ஓடினார்கள். நூறாயிரம் வீரரும் அவனோடு எதிர்த்துத் தோல்வியுற்று வருந்தி இளைத்து வீழ்ந்தார்கள். பின்னர், வீரமார்த்தாண்டர் வீரராக்கதர், வீரமகேந்திரர், வீரதீரர், வீரகேசரி, வீரமா புரந்தரர், வீராந்தகர் முதலிய வீரர்கள் வந்து சூரனை எதிர்த்துப் போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனர்.

பின் வீரவாகுதேவர் சூரனை எதிர்த்து நெடுநேரம் போர் புரிந்தார். இறுதியில், சூரன் விடுத்த அம்புகளால் அவர் மயங்கி வீழ்ந்தார். இச்செயல்களைக்கண்ட முருகப்பிரான் தம் தேரைச் சூரன்முன் செலுத்தப் பாகனுக்குக் கட்டளையிட்டார். பாகன் விரைந்து தேரைச் செலுத்தினான். ஞானவடிவணுகிய முருகப் பெருமான், போர்க்களத்தில் சூரன்முன் தோன்றுதலும், பலகோடி சூரியர்கள் தோன்றியதுபோன்ற ஒளிமிக்கதோர் தோற்றத்தைச் சூரன் கண்டான். அப்பெருமானின் தாமரை மலர் போன்ற திருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கண்களையும், குண்டலங்கள் அணிந்த செவிகளையும், செம்பொன் மணிமுடிகளையும், அழகிய விரிந்த மார்பினையும், பன்னிரு திருக்கைகளையும், அவைகளிலே அமைந்துள்ள படைக்கலங்களையும், தண்டை சிலம்புகளுடன் இலங்கும் திருவடிகளையுங் கண்டான். கண்டதும், அவன் செய்த தீவினையெல்லாம் நீங்கியது. முருகப்பெருமான் அவனோடு போர் புரிவது, தந்தை யொருவன் தன் சிறு குழந்தையோடு விளையாடுவதை யொக்கும்.

ஆனால், சூரனுக்கு ஆணவம் நீங்கவில்லை; முருகக்கடவுளோடு போர் புரிந்தால் வெற்றி தனக்கே வருமென்று நினைத்தான். முருகக் கடவுளிடம் தான் பூத சேனை, சேனைத் தலைவர், வீரவாகுதேவர் முதலியோரை வென்று சேனைகளைச் சிதறச் செய்த வீரப்பாட்டை விளம்பி, மேலும் தனக்கே வெற்றி வருமென்று சொன்னான். முருகக்கடவுள் புன்முறுவலுடன் "நீ உன் அகந்தையை

ஒழி. அகந்தையினாலேயே நீ அழியப்போகின்றாய்'' என்று கூறினார். அதனையும் பொருட்படுத்தாது சூரன் போர் தொடங்கினான். தன் சிறந்த படைக்கலங்களால் மிக்க வீரத்தோடு பலரும் வியக்கத்தக்கவாறு போர் புரியலாயினன். முருகக் கடவுளும் அவைகளை அழித்துத் தம் சக்கரப் படையால் சூரனுடைய சேனைகள், தேர், கொடி, முடி முதலிய யாவற்றையும் அழித்தார். பின் சூரன் தனியனாயினன். அதன்பின், சூரன் பிரம, விட்டுணு படைக்கலங்களை முருகன்பால் விடுத்தனன். முருகன் தன் வேற்படையால் அவைகளை அழித்தார். மேலும் சூரன் சிவப்படைக்கலத்தை ஏவ அதனை முருகப்பிரான் தம் திருக்கையை நீட்டி ஏந்தி நின்றார். அப்பொழுதுதான் முருகன் சிவபிரானின் திருக்குமரன் என்பதைச் சூரன் உணர்ந்தான். உணர்ந்ததும் "இவன் வலி பெரிது! பெரிது!! இவன் சிறப்பைப் பல வழியிலுங் கண்டேன். மேல் நடப்பதைக் காண்போம்'' என்றெண்ணிச் சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தான். முருகக் கடவுள் அவன் நிலைமையைக் கண்டு "சூரபன்மனே! இந்திர குமாரனாகிய சயந்தனையும், தேவர்களையும் அளவில் காலம் சிறையில் இட்டாய். அவர்களை விடும்படி ஒரு தூதனுப்பியும் கேட்டாயில்லை. அதனால் இவைகள் நேர்ந்தன. நீயும் தனித்து நிற்க நேர்ந்தது. தேவர்களைச் சிறை நீக்கி வாழ்வாயாக! மறுப்பின் உன் உயிர் இழப்பாய்'' என்று சொல்ல, சூரனால் ஒன்றும் பேச முடியவில்லை. சூரன் மனத்தில் தன் வலிமையையும் வீரத்தையும் நினைத்து, "இவன் பாலகன், பிள்ளைமையினால் இது சொல்கின்றான். இவன் என்னைக் கொல்லுதல் அரிது. இப்பொழுது இவனை வெல்ல முடியாது. இன்னும் சில நாட்கள் இவனோடு போர் புரிய வேண்டு''மென்று தீர்மானித்துக்கொண்டு, ஒரு மாய மந்திரத்தினால் மறைந்து, அவ்விடத்தைவிட்டு மகேந்திரபுரியிலுள்ள தன் அரண்மனையை அடைந்தான். சூரன் மறைந்ததும் தேவர்கள் பெருமானைப் பலவாறாக வாழ்த்தி வெற்றி கொண்டாடினார்கள். இதுவரை தோல்வியடை

யாத சூரன், பெருமானிடம் அன்று முதன் முதலாகத் தோல்வியடைந்ததை யுன்னித் தேவர்கள் கொண்டாடினர்கள். சூரன் புரிந்த போருக்குத் தோற்று ஓடிய பூத சேனைகள் திரும்பி வந்து சூரன் மதிலைக் கடந்து சென்றன. கடந்து சென்று காவல் வீரர்களைக் கொன்றன. பெருமான் கட்டளையின்றி நெடுந் தொலை செல்லலாகா தென்று மீண்டார்கள். பானுகோபனிடம் தூதர்கள் பலர் சூரன் திரும்பியதைத் தெரிவித்தார்கள். பானுகோபன் தந்தையின் மாளிகையை யடைந்து சூரன் தக்க துணைவர்களோடும் தன்னோடும் போருக்குச் செல்லாததைக் குறித்து வருந்தினன். மறுநாள் தானே போருக்குச் செல்ல எண்ணித் தந்தையிடம் விடைபெற்றுத் தன் இருக்கை நோக்கித் திரும்பினன். சூரனுக்கும் வேறு செய்திகளில் மனம் செல்லவில்லை. மேல் நடக்க வேண்டியதை ஆராய்ந்துகொண்டிருந்தான்.

## மூன்றும் நாள்—பானுகோபன் போர்

பானுகோபன் போருக்குப் புறப்படுமுன் மாயையை மனதில் வழிபட்டான். மாயை தோன்றி அவன் வேண்டுவதை வினவினள். பானுகோபன் முதல்நாட் சண்டையில் தன் தெய்வப் படைக்கலங்கள் பயனற்றுப் போனதைத் தெரிவித்தான். மாயை, அவர்கள் செய்கை அறமல்லாதவை எனத் தெரிவித்து, அவன் வேண்டியபடியே ஒரு மாயப் படைக்கலத்தைக் கொடுத்து அன்று வெற்றி அவனதேயென்று அருளினள். மாயப் படைக்கலத்தைப் பெற்று, பானுகோபன் போர்க்களம் நோக்கினன். ஒற்றர் மூலமாக வீரவாகு தேவருக்குத் தான் போர்புரிய வந்துள செய்தியைத் தெரிவித்தான். வீரவாகு தேவரும் முருகக் கடவுளை வணங்கிப் பானுகோபன் போர் புரிய வந்திருக்குஞ் செய்தியைத் தெரிவித்தார். பெருமானும் “நீ எதிர்த்துப் போர்செய். அவன் ஏதாவது மாயங்கள் செய்தால் நம் வேற்படை வந்து விடுவிக்கு”மென்றருள

விடைபெற்றுப் பூத சேனைகளோடும் படைத் தலைவர்களோடும் போருக்குப் புறப்பட்டார். நெடுநேரம் இரு திறத்தாரும் பற்பல படைக்கலங்களை விடுத்துப் போர் புரிந்தார்கள். இருதிறத்துச் சேனைகளில் கலைந்து ஓடினோர் பலர். உயிர் இழந்தார் பலர். கடைசியில் பானுகோபன் தனித்துப் போர்புரிய நேர்ந்தது. நேர் நின்று போர் செய்ய முடியாத நிலைமையில், அவன் ஒரு மாய மந்திரத்தால் எவரும் அறியாதபடி விண்ணில் மறைந்தான். மாலைவேளை நெருங்கியது. பானுகோபன் மறைந்தான் என்று நினைத்து வீரவாகு தேவரும் தம்பிமார்களும முருகப் பெருமானிடம் திரும்பக் கருதுஞ் செய்தியைப் பானுகோபன் அறிந்து மாயை கொடுத்த மாயப் படைக்கலத்தை வழிபட்டு, "வீரவாகு தேவரையும் மற்றுமுள்ள வீரர்களையும் நன்னீர்க்கடலில் சேர்க்கக் கடவை" யென்று விடுத்தான். அவ்வாறே அப்படைக்கலம் வீரவாகுதேவர் முதலிய வீரர்களின் அறிவை மயக்கி, அவர்களை விண் வழியாக நன்னீர்க் கடலிற் கொண்டு சேர்த்தது.

இவைகளை யறிந்த நாரதர் முதலிய தேவர்கள் முருகப்பெருமானிடம் நடந்த செய்தியைத் தெரிவித்து முறையிட்டார்கள். முருகப் பெருமான் வேற்படையை நோக்கி நன்னீர்க் கடலில் கிடக்கும் வீரவாகு தேவர் முதலியோரின் மயக்கத்தை ஒழித்து, அவர்களை இங்கு விரைந்து தருதி என்று விடுப்ப, வேற்படையும் அவ்வாறே அவர்களின் மயக்கத்தை யொழித்து அவர்களை முன்போல முருகப்பெருமான் திருமுன் கொணர்ந்து சேர்ப்பித்தது. வீரர்களும் முருகப் பெருமான் அருளை நினைந்து போற்றி நின்றார்கள்.

பானுகோபன் திரும்பி வந்து சூரனைக் கண்டு நடந்த செய்திகளைத் தெரிவித்தான். அவனும மகனைத் தழுவிப் பல நன்மொழி கூறி, மேல் நடக்க வேண்டியதைப் பற்றி ஆராயலானான்.

நன்னீர்க்கடலினின்றும் வந்தவீரவாகு தேவர் முதலியோர்; மகேந்திரபுரிக்குட்சென்று அதனை அழிக்க முயன்றார்கள். நகரத்தின் பல இடங்களில் எரியூட்டினார்கள். சூரபன்மன் ஏழு மேகங்களைக்கொண்டு அவைகளைத் தணித்தான். சூரனுக்கு இவர்கள் செய்கை அடங்காக் கோபம் மூட்டியது. அவர்களோடு போருக்குப் புறப்பட்டான். அவன் குமாரனாகிய இரணியன் முன் வந்து பல அறவுரைகளைக் கூறி, தேவர்களைச் சிவகுமாரன் விருப்பப்படி சிறையினின்றும் விடுப்பதே முறையென்று தெரிவித்தான். சூரன் அமைதியுறாது இரணியனைக் கோபித்தான்.

## இரணியன் போர்

இரணியன் தன் தகப்பன் மனோ நிலையைத் தெரிந்து போருக்குச் சென்றான். நெடுநேரம் பலவகையாலும் போர்புரிந்தான். அவன்மேல் பட்ட பாணங்களால் அவனுக்கு மயக்கந் தோன்றியது. அப்போது அவன் ஓதிய ஒரு மாய மந்திரத்தால் அவன் உருவம்போல் ஓர் உருவம் போர்க்களத்தில் தோன்றியது. பூதத்தலைவரெல்லோரும் அந்த உருவத்தோடு நெடுங்காலம் போர் புரிந்தனர். இரணியன் மயக்கந் தீர்ந்து எழுந்து நீலனைத் தாக்கி வீழ்த்தினான். பின் வீரவாகு தேவர் இரணியனைத் தாக்கினார். இரணியனுக்கு அவரோடு எதிர்த்துப் போர்புரிய முடியவில்லை. போர் முடியும்வரை தான் உயிரோடிருந்து நிகழும் செய்தியனைத்துங் காண வேண்டுமென்று ஆவல் உண்டாயிற்று. இந்த நிலையில், ஒரு மாய மந்திரத்தால் எவருக்குந் தெரியாவாறு விண்ணில் எழுந்து கடலில் ஒரு மீனுருவ மெடுத்து ஒளித்தான்.

## அக்கினிமுகன் போர்

இதனை யறிந்த அக்கினிமுகன் போருக்குப் புறப்பட்டான். இவனும் பூதர்கள் எல்லோரும் மதிக்கும்படி போர் புரிந்தான். வீரவாகு தேவரின் பின்னோர் எழுவரையுங்

கொன்றுவிட்டான். இதனை யறிந்த வீரவாகு தேவர் தாமே வந்து போர் புரிந்து அக்கினிமுகனை வென்றார். அக்கினிமுகன் தான் வழிபடும் காளியை நினைத்தான். அவளும் போர்க்களத்தில் தோன்றி வீரவாகு தேவரை எதிர்த்துச் சண்டை செய்தாள். வீரவாகு தேவருக்கு முருகப்பெருமான் அருள் இருந்தபடியால் காளிக்கு அவரை வெல்ல முடியவில்லை. காளி தன் தாழ்மையைக் கூறி மறைந்தாள். இதனை யறிந்த அக்கினிமுகன் தானே எதிர்த்தான். வீரவாகு தேவர் விடுத்த அம்பு பட்டு உயிர் நீங்கினான்.

அக்கினிமுகன் மாண்டதும் அவன் படைத்தலைவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் அவர்களும் புறங்காட்டிச் சிதறியோடினார்கள். அதன்பின் வீரவாகுதேவர், அக்கினி முகாசுரனால் இறந்த தம் தம்பிமார் எழுவர் மரணத்தையும் ஒரு பாணத்தால் இயமதேவனுக்குத் தெரிவித்து, அவ்வெழுவரையும் உயிர்ப்பித்தார்.

## மூவாயிரவர் போர்

அக்கினிமுகன் மாண்ட செய்தியைக் கேட்டுச் சூரன் மிக வருந்தினான். அவனைத்தேற்றி அவன் பிள்ளைகளாகிய மூவாயிரவர் போருக்குப் புறப்பட்டார்கள். வீரர் நூறாயிரவர்களும் அவர்களை எதிர்த்துப் போராடினார்கள். கடும் போர் நடந்ததில் வீரர் நூறாயிரவரில் பலர் கொல்லப்பட்டார்கள். கடைசியாக நின்ற விசயன் அவர்களை வந்து எதிர்த்துப் போர் செய்தான். பல பாணங்களைச் செலுத்தியும் அவர்களைக் கொல்ல முடியவில்லை. வெட்டுண்ட பாகங்கள் உடனே தோன்றிவிடுவதைக் கண்டான். என்ன செய்வதென்று தெரியவில்லை. முருகப்பெருமானை நினைத்தான். முருகப்பெருமான் தோன்றி அவர்கள் அழியும்படி வைரவப் படைக்கலத்தைக் கொடுத்தார். விசயன் வைரவப் படைக்கலத்தை விடுத்ததும் அது மூவாயிரவரையும் ஒவ்வொருவராகக் கொன்றுவிட்டது.

## தருமகோபன் போர்

மூவாயிரவர் மாண்ட செய்தி சூரனுக்கு எட்டியது. அவன் மந்திரியாகிய தருமகோபன் போருக்குப் புறப்பட்டுக் கடும்போர் புரிந்தான். அவனும் வீரவாகு தேவரால் கொல்லப்பட்டான்.

## பானுகோபன் இறுதிநாட் போர்

இச்செய்தியைக் கேட்ட பானுகோபன் சூரபன்மனை யணுகிப் பின் வருமாறு கூறினன். "நான் மாயைப்படையால் வீரவாகுதேவர் முதலியோரை நன்னீர்க் கடலில் உய்த்தேன். அவர்கள் மீண்டும் சிவகுமாரனுடைய வேற்படையால் கொண்டு வரப்பட்டார்களென்றால் அவர்களை வெல்வது எளிதன்று. சிவகுமாரனோடு போர்புரிந்த நீயே அவர் வலிமையை அறிவாய். முடியாத காரியத்தில் முயல்வது தகுதியன்று. சிவகுமாரன் விருப்பின்படி தேவர்களை விடுத்துப் பல்லாண்டு வாழ்வாய். நான் போருக்கு அஞ்சி இதை உனக்குச் சொல்லவில்லை. நீ பல நாட்கள் இருக்கவேண்டுமென்ற ஆசை விருப்பினல் மட்டுமே இவைகளைத் தெரிவித்தே" னென்றான். இவற்றைக் கேட்ட சூரபன்மன் "பிள்ளாய்! உன் சொல் மிக நன்று. இப்போழ்து நான் தேவர்களைச் சிறையினின்றும் விடுத்தால், யார் என்னை மன்னர் மன்னனென மதிப்பார்கள்? உலக வசை என்னை அடையாதா? கூன், குருடு, செவிடு, முடம் முதலிய உடம்பின் குறைகள் உடம்போடு அழிந்துவிடும். மானமும் வலியுமிழந்தால் அஃது உலகமுள்ளவரை நிற்காதா? அழகு, இளமை, செல்வம் முதலியவை நிலையுள்ளனவா? புகழையே மனத்திற் கொண்டேன். சிவகுமாரனால் உயிர்விடினும் தேவர்களைச் சிறையினின்றும் விடேன். மானம் வந்த இடத்தில் உயிர் பெரிதா? சூரன் என்று பெயர்பெற்ற யான் கொண்ட கொள்கையை விடேன். இன்னும் ஓர் ஊழிக்காலமிருப்பினும்

அழிவதுதானே முடிவு. நீ அஞ்சினால அரண்மனையி லிரு. நான் போருக்குப் போய் வருகிறேன்" என்றான்.

இச்சொற்களைக்கேட்ட பானுகோபன், போருக்குப் போக உடன்பட்டான். பின் வரப்போகிற செய்திகள் பற் பல அவன் மனதில் நிகழ்ந்தன. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு போர் முகத்தை யடைந்தான். பானுகோபனுக்கும் வீரவாகு தேவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. கண்டோர் திகைத்தார்கள். இதுவரை இவ்வகைப் போர் நிகழக் கண்டிலமென்றார்கள். வில் லாற் போர் தொடுத்தார்கள். பின் ஒருவரையொருவர் அணுகி வாட்போர் செய்தார்கள். இருதிறத்தாருக்கும் பற்பல காயங்கள் பட்டன. கடைசியாக வீரவாகுதேவர் பானுகோபன் வலக்கையை வெட்டிவிட்டார். பின் இடக்கையாற் போர் செய்தான். அதையும் வெட்டினார். இறுதியாக அவன் தலையைத் துணித்தார். பின் வீரவாகு தேவர் முருகப் பெருமானைக் கண்டு பானுகோபன் இறந் ததைத் தெரிவித்துப் பெருமான் அருண்மொழி பெற் றார். பானுகோபன் இறந்த செய்தியைச் சூரபன்மன் கேட்டு வருந்தினான். அவன் உடம்பை எண்ணெயிலிட் டுப் பேணக் கட்டளையிட்டான். பதுமகோமளையும் மற்றப் பெண்களும் இச்செய்தி கேட்டுப் பெரிதும் வருந் தினார்கள்.

சூரபன்மன் தன் தம்பி சிங்கமுகனுக்கு ஆள் அனுப் பினான். வடகடலில் 'ஆசுரம்' என்னும் பதியை ஆண்டு வரும் சிங்கமுகன் கோபமும், மானமும் துன்பமும் தன்னை வருத்த, உடன் தன்சேனைகளோடு விண் வழியாக மகேந்திரத்தை யடைந்தான். சூரபன்மனைத் தழுவி நிகழ்ந்த செய்திகளைக் கேட்டு வருந்தினான். பின் ஒரு வாறு தெளிந்து, சூரன் சிங்கமுகனை உடனே போருக்குப் போய்ச் சிவகுமாரனுடைய வலியைக் குறைத்து வரும் படி கூறினான். சிங்கமுகன் "சிவகுமாரனை வெல்லுவ தரிது. மற்றவர் வலியைக் குறைத்து வருவேன. கந்த

சுவாமியை வெல்ல முடிந்தால் உன்னை வந்து காண்பேன். இல்லையேல் உயிர் துறப்பேன்" என்று போருக்குப் புறப்பட்டான்.

## சிங்கமுகன் போர்

சிங்கமுகன் தன் சேனைகளும் தன் மைந்தர்களும் உடன்வரப் போர்முகத்தை யடைந்தான். இது செய்தி யறிந்து முருகப் பெருமான் போருக்குப் புறப்பட்டார். வீரவாகு தேவர் முதலிய வீரர்கள் தாங்களே போவதாக வணங்கிக் கேட்டார்கள். முருகக் கடவுள் புன்முறுவல் செய்து முன் செல்லும்படி விடை கொடுத்தார். வீரவாகு தேவர் முதலிய வீரர்கள் போர்முகத்தை யடைந்தார்கள். இரு திறத்துச் சேனைகளும் போர் தொடங்கிப் பலமாகப் போர் புரிந்தன. பூத சேனைகள் தன் சேனைகளை யழிப்பதைக் கண்டு சிங்கமுகன் முன்னணியில் வந்து போர் தொடங்கினன்.

சிங்கமுகன் மாயையிற் சிறந்தவன். ஒரு பெரிய பூதாகாரமான உடம்பை யெடுத்தான். பூத சேனைகளில் பலரை உயிரோடு விழுங்கிவிட்டான். வீரவாகு தேவரும் மற்றும் வீரர்களும் முன்னணியில் வந்து பலவகைத் தெய்வப் படைக்கலங்களை விடுத்துப் போர் புரிந்தார்கள். சிங்கமுகன் ஒரு மாயா பாசத்தை விடுத்து வீரவாகு தேவரையும் மற்றும் வீரர்களையும் உதயகிரியிற் கொண்டு போய் வைப்பாய் என்று விடுத்தான். உடனே அங்கு ஓர் இருள் மூடியது. மாயா பாசம் அவர்களை உதயகிரி கொண்டு சேர்த்தது. இதனை யறிந்த தேவர்கள் வாடினர். முருகப் பெருமானிடம் வந்து முறையிட்டனர். முருகப் பெருமானும், இந்திரன், சந்திர சூரியர், இயமன், குபேரன், வருணன் முதலிய தேவர்கள் சூழ்ந்துவரப் போர் முகத்தை யடைந்தார்.

சூரனுடைய தூதுவர்கள் ஓடி நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தார்கள். சூரனும் ஒரு மலைக்குவட்டின்மேலேறி நிகழும் செய்திகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

முருகப் பெருமான் வில்லின் நாணொலி செய்தார். பலர் மயங்கினார்கள்.

சிங்கமுகன் பெருமானை யணுகி, "சிவகுமாரனே! அரசர்கள் பகைவரை அடக்குதல் கடமையே; நாங்கள் தேவர்களைச் சிறையிலிட்டால் நீ வருவானேன். நீ அவர்களில் ஒருவனல்லன். இஃது உனக்குத் தகுதியன்று" என்றான். இதைக் கேட்ட பெருமான் "எளியாரை வலியார் தண்டித்தால் வலியாரை யடக்குதல் என் கடமையே" என்றார். இது கேட்டுச் சிங்கமுகன் போரைத் தொடங்கினான். பெருமான் ஒரு வில்லை நாணேற்றிச் சிங்கமுகன்மீது பாணத்தைச் செலுத்தினார். சிங்கமுகன் வயிற்றிற்படப், பூத சேனைகள் வெளிவந்தன. சிங்கமுகனும் பற்பல படைக்கலத்தால் எதிர்த்தான். சிங்கமுகன் சேனைகள் அனைத்தும் மாண்டன. சிங்கமுகன் தனித்தான். ஆயிரங் கைகளோடு தோன்றிப் பெருமானை எதிர்த்தான். முருகப் பெருமான் வாளால் அவன் கைகளைத் துணித்தார்; அவை திரும்பவும் முளைத்தன. முடிவில் ஒரு மந்திரத்தால் அவன் உண்மை உருவத்தையடையச் செய்து தன் குலிசப் படையால் அவனைக் கொன்றார்.

பின், முருகப் பெருமான் வீரவாகு தேவர் முதலிய வீரரை வரும்படி பணித்தார். எல்லோரும் ஆரவாரத்தோடு பாசறையை யடைந்தார்கள். சிங்கமுகன் மாண்ட செய்தியைக் கேட்டுச் சூரபன்மன் பெரிதும் வருந்தினான்; சோகம் தெளிந்துதானே போருக்குச் செல்லத் தீர்மானித்தான்.

## சூரன் கடைநாட் போர்

சூரபன்மன் பல அண்டங்களிலுமிருக்கிற அவுண சேனைகளை வரும்படி பணித்தான். அவர்களும் வந்துகூடினார்கள். சூரன் செல்லுவதற்கு உயர்ந்த ஒரு தேரைக் கொண்டு வந்தார்கள். சூரன் அத்தேரில் ஏறிக்கொண்டு

போர்க்கோலத்தோடு போர் முகத்தை யடைந்தான்.

முருகப் பெருமானும் போருக்கு ஆயத்தமானார். தம் படைகளாகிய மழு, குலிசம், சூலம், வேல், வாள, பரிசை, சக்கரம், தண்டு, எழு, வில், அம்பு, கைவேல் இவைகளைக்கொண்டு வீரவாகு தேவரும், இலக்கத்தெண்மரும் தம்மைச் சூழ்ந்து வரப் போர்முகத்தை யடைந்தார். பூத சேனைகள் போரைத் தொடங்கின.

பூதப் படைகளும், இலக்கம் வீரர்களும் அவுணர் சேனைகளை எதிர்த்துப் போர் புரிய முடியவில்லை. வீரவாகு தேவரும் சிறிது போர் செய்துவிட்டுப் போர்முகத்தில் நிற்கமுடியாது, முருகப் பெருமான் பக்கல் வந்தடைந்தார். முருகப் பெருமான் போர்முகத்தை யடைந்து தம் பாணங்களைத் தூண்டினார். அவுணப் படைகள் மாண்டு பிணக்குவியல்கள் நிரம்பின. அவைகளைக் கண்ணால் உற்று நோக்க அவைகள் வெந்து சாம்பலாயின. சூரன் போர்முகத்தில் தோன்றி, பூதப் படைகளையும் அழித்துப் பல அம்புகளால் முருகப் பெருமான் தேரில் கட்டிய கொடியையும் அறுத்து வெற்றிச் சங்கை ஊதினான். உடனே அக்கினி முன்போலக் கொடியாகத் தோன்றியது. பூதப் படைத் தலைவரில் ஒருவர் பாஞ்சசன்னிய மென்னும் சங்கை ஊதினார்.

சூரபன்மன் தேவர்களுடைய வலியைத் தொலைக்க வானத்தில் எழுந்தான். முருகப் பெருமானும் தம் தேரைச் செலுத்தினார். சூரன் பற்பல அண்டங்களிலுஞ் சென்று பற்பல உருவங்களெடுத்து முருகப் பெருமானோடு போர் புரிந்தான். கடைசியில் சூரன் தன் சேனைகள் எல்லாம் மாண்டு, தான் தனித்து நிற்பதைக் கண்டான். மாயையை நினைத்து வழிபட்டுத் தன் சேனைகளைத் திரும்ப வரும்படி செய்யவேண்டுமென்று வேண்டினான்.

அவள் "சஞ்சீவி மலை என்று ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டு வருவாயாயின் உன் சேனைகளும் தம்பியர்களும், பிள்ளைகளும் திரும்பி வருவார்கள்" என்றாள்.

சூரன் தன் இந்திரஞாலத் தேரை அனுப்பிச் சஞ்சீவி மலையைக் கொண்டுவரும்படி செய்தான். சேனைகளும், தம் தம்பிமார்களும், பிள்ளைகளும் பழையபடி தோன்றினர்கள். அவர்கள் யாவரும் பழையபடி முருகப் பெருமானை எதிர்த்தார்கள். இவர்களனைவரையும் உருத்திரப் படைக்கலத்தால் முருகப் பெருமான் அழித்துவிட்டார். அதுகண்ட சூரன் தனது இந்திரஞாலத் தேரை நோக்கி, "பூதப்படைகளையும் மற்ற வீரர்களையுங் கவர்ந்து அண்ட முகட்டின் கண்ணே வைத்துக்கொண்டு நீயும் அங்கேயே இருக்கக் கடவை" யென்று கட்டளையிட்டான். தேரும் அங்ஙனமே புரிந்து அவண் இருந்தது. சேனைகள் நீங்கத் தனித்து நின்ற முருகப் பெருமான் தம் சேனைகளைக் கொண்டுபோய் அண்ட கோளகையில் வைத்துள்ள சூரன் தேரைக் கொண்டுவரக்கடவாய்" என்று ஒரு பாணத்தை ஏவ அது சென்று தேருடன் சேனைகளையுங் கொண்டுவந்து முருகப் பெருமான் திருமுன் சேர்த்தது.

பின்னர்ச் சூரன் அண்டகோளம் வரை நிமிர்ந்த ஒரு பெரு வடிவு கொண்டும் பஞ்ச பூதம் முதலிய பல வுருக் கொண்டும் தோன்றினன். அவ்வுருவங்களை யெல்லாம் முருகப் பெருமான் பல பாணங்களால் அழிக்க, சூரன் தனியனாகி நின்றான்.

உடல்சின மோடுசூர னொருவனா யங்க ணின்றான்
அடல்வலி கொண்ட வாளி யந்தர நெறியான் மீண்டு
புடையுறு சரங்களோடு பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடுந் தனிவே லண்ணல் அவன்முக நோக்கிச்
[சொல்வான்.

வெம்புய லிடையிற் றோன்றி விளிந்திடு மின்னு வென்ன
இம்பரி லெமது முன்ன மெல்லியி லுருவங்கொண்டாய்
அம்பினி லவற்றை யெல்லா மட்டன மழிவி லாத
தம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்
[றான்.

கூறிமற் றினைய தம்மை குரைகட லுலகந்திக்கு
மாறிலாப் புவன மண்டம் வானவ ருயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளன் மேனியி லமைந்த தன்றி
வேறிலை யென்ன வாங்கோர் வியன்பெரு வடிவங்
[கொண்டான்

முருகப்பெருமான் தன் வியாபக வடிவைக் காட்ட சூரன் அவ்வடிவத்தைக் கண்டு வணங்கினன். வணங்கித் தன்வய மழிந்து பல வகையிலுந் துதிக்க லுற்றான்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி
[லேன்யான்
மாலயன் றனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி
[யன்றே. (1)

ஒற்றென முன்னம் வந்தோ னொருதனி வேலோன்
[றன்னைப்
பற்றுக லின்றி நின்ற பராபர முதல்வ னென்றே
சொற்றனன் சொற்ற வெல்லாந் துணிபெனக் கொண்டி
[லேனு
விற்றையிப் பொழுதி லீச னிவனெனுந் தன்மை கண்
[டேன். (2)

மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரத மம்மா மற்றியான் பெற்ற வண்டம்
ஆயவை முழுது மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்திற் றோன்றியே நின்ற
[மன்றே. (3)

அண்டர்கண் முனிவ ரேனோ ரகிலமுங் காட்டியண்ணல்
கொண்டிடு படிவ முற்றுங் குறித்தியார் தெரிதற்
[பாலார்
எண்டரு விழிகள் யாக்கை யெங்கணும் படைத்தோர்க்
[கேனுங்
கண்டிட வனந்தகோடி கற்பமுங் கடக்கு மன்றே (4)

சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
வர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையுமெழிலு மெல்லாம்
ஆர்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென் பார்வை
[தானும். (5)

பேரில னாகி யீண்டே நின்றிடு முதல்வ னீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதுமச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பா ரமமரரி லழிவி லாத
சீரிய வரங்கொண் டுள்ளே னாதலிற் றெரிகி ன்
[றேனல். (6)

ஆயிரகோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந்
[தன்னிற்
தூயநல் லெழிலுக் காற்று தென்றிடி னினைய
[தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வ
[லார். (7)

இங்கென துயிர்போ லுற்ற விளவலு மினைய சேயுஞ்
செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென்
[றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகு மென்றூர்
அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே யான
[தன்றே. (8)

அண்ணலரர் குமரன் மேனி யடிமுதன் முடிவின் காறும்
எண்ணிலா வூழி கால மெத்திற நோக்கி னாலுங்
கண்ணினு லடங்கா துன்னிற் கருத்தினு லடங்கா தென்
[பான்
நண்ணினு னமருக் கென்கை யருளென நாட்டலாமே(9)

திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவி னூக்கம்
அருகிய துரோமம் புள்ளி யாயின விழியிற் றாநீர்
பெருகிய திவன்பா லன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானும் உலைமெழு காகு மன்றே (10)

போயின வகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவன மெங்
[கும்
ஏயின பொருள்கண் முற்றும் வெளிப்படு கின்ற
[விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன ற்றவப் பயனீதன்றோ (11)

சூழுதல் வேண்டுந் தாள்க டொழுதிடல் வேண்டு
[ங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந்
[தாலு

வாழுதல் வேண்டுந் தீமை யகன்றுநா னிவற் ளாகி
வாழுதல் வேண்டு நெஞ்சந் தடுத்தது மான
[மொன்றே. (12)

ஒன்னலர் பொருட்டா லேகி யுறுசம ரிழைத்த
[செம்மல்
தன்னுரு வதனைக் காண்கின் முனிவதே தகுதி யாகும்
வன்னிகொள் வெண்ணெ யேபோல் வலியழிந் துருகிற்
[றென்றால்
என்னுடை வயத்த வன்றோ வுணர்ச்சியு மியாக்கை
[முற்றும். (13)

எட்வி முலங்கன் மார்ப என்னுடை னிந்நாள் காறு
நீடிய விகற்போ ராற்றி நீங்கலா னின்ற தெல்லாம்
ஆட்லி னியற்கை யென்றே யறிந்தன னஃதான்
[றன்னுன்
சாடிய வேண்டு மென்னின் யாரது தாங்கற்
[பாலார். (14)

ஏத மிலமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாந்
தீதென வுரைத்தார் பல்லோ ரன்னதன் செயற்கை
[யாலே
வேதமு மயனு மேனை விண்ணவர் பலருங் காணு
நாதனிங் கணுகப் பெற்றேன் நன்றதே யான
[தன்றே (15)

பின் சூரன் ஞானம் நீங்க, ஆணவமேற்கொண்டு சக்கரவாகப் பறவையின் வடிவாகி முருகப் பெருமானை எதிர்த்தான். முருகப்பெருமானும் ஒரு மயில் மேல் ஏறி எதிர்த்தார். கடைசியாகக் கடலில் மாமரமாக ஒளித்தான். பெருமான் தேர்ப்படையை விடுத்தார். அது கடலை வற்றச் செய்து மரத்தையும் இரண்டாக்கியது. பின் சூரன் தன் உண்மை உருவத்தைக் காட்டினான். அதையும் வேலாயுதம் இரண்டு பிளவாகச் செய்தது.

தாவடி நெடுவேன் மீளத் தற்பரன் வரத்தால் வீடாம்
ஏவல னெழுந்து மீட்டு மெய்பகி ரிரண்டு கூறுஞ்
சேவலு மயிலுமாகிச் சினங்கொடு தேவர் சேனை
காவலன் றன்னை நாடி யமர்த்தொழில் கருதி
[வந்தான். (16)

மணிகிளர் வரைய தொன்று மரகதப் பிறங்க
[லொன்றுந்
துணையடி சிறகர் பெற்றுச் சூர்புய லழிய ஆர்த்துத்
திணிநில விசும்பின் மாட்டே சென்றெனச் சேவலோடு
பிணிமுக வுருவாய் வந்து பெருந்தகை முன்னம்
[புக்கான். (17)

ஆட்படு நெறியிற் சேர்த்து மாதியி னூழ்தந் துய்க்கத்
தாட்படை மயூர மாகித் தன்னிக ரில்லாச் சூரன்
காட்படை யுளத்தனாகித் கடவுள ரிரியல் போக
ஞாட்பியல் செருக்கில் வந்தான் ஞானநா யகன்றன்
[முன்னம். (18)

மருள்கெழு புள்ளே போல வந்திடு சூர னெந்தை
அருள் கெழு நாட்டஞ் சேர்த்த வாங்கவ னிகலை நீங்கித்
தெருள்கெழு மனத்த னாகி நின்றனன் சிறந்தார்
[நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன் னாகிய வியற்கை
[யேபோல். (19)

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமு னுற்றாற்
றூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசம ரிந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா வருள்பெற் றுய்ந்
[தான். (20)

அந்த் இரண்டு பிளவுகளும் சேவலு மயிலுமாக முருகப்பெருமான் திருமுன் தோன்றிப் பகையை நீங்கி ஞானம் பெற்றுச் சேவல் கொடியாகவும், மயில் வாகனமாகவும் ஆயின. தேவர்கள் வாழ்த்தினார்கள். போர் முடிவுற்றது. போரில் இறந்த கணங்கள் பலவும் பெருமான் அருளால் வந்து கூடின. சயந்தன் முதலிய தேவர்களைச் சிறையினின்று விடுவிக்கும்படி வீரவாகு தேவருக்குப் பெருமான் பணித்தருளினார். அவ்வாறே வீரவாகு தேவர் சிறைக் கூடத்தை யடைந்து அவர்களை விடுவித்துப் பெருமான் முன் கொண்டுவந்து சேர்ப்பித்தார்.

இந்திரன் தன் மகனைக் கண்டதும் அவனைத் தழுவிப் பெருமானுடைய அருளை நினைந்து பலபடக் கொண்டாடினான். சயந்தன் முதலிய தேவர்களும் பெருமானைப் போற்றிக் கொண்டாடினார்கள்.

முருகப்பெருமான் வீரவாகு தேவர், பிரமா, விட்டுணு, நாரத முனிவர், மற்ற வீரர்கள், பூதகணங்கள் முதலிய யாவரும் மகேந்திர புரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். இவர்கள் அவ்வூரைவிட்டு நீங்கியதும், அது கடலுள் ஆழ்ந்து விட்டது. முருகப்பெருமானும் அவர் பரிவாரங்களும் திருச்செந்தூரை யடைந்து அங்கு, சிவபெருமானுக்குச் சிறப்புவிழா நடத்தினார்கள். பின்னர், அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பரங்குன்றத்தை யடைந்தார்கள்.

## 26. தெய்வயானை யம்மை திருமணம்

இந்திரன் தன் பகைவனாகிய சூரபன்மனைக் கொன்று தன் அரசாட்சியை மீட்டுக் கொடுத்தருளிய முருகக் கடவுளுக்குத் தன் மகள் தெய்வயானையை மணஞ்செய்து கொடுக்க விரும்பினான். இந்த எண்ணத்தைப் பிரமா விட்டுணு முதலியோருக்குத் தெரிவித்தான். அவர்கள் அச்செய்தியை முருகப்பெருமானுக்குத் தெரிவித்தார்கள். பெருமானும் தெய்வயானை தம்மை மணந்துகொள்ள வேண்டுமென்று தவஞ் செய்ததை நினைத்து இந்திரன் கருத்துக்கு இசைந்தார். முருகப்பெருமான் தன் கருத்துக்கிசையவே, இந்திரன் ஓர் ஒற்றனையனுப்பி மேருமலையிலிருக்கும் இந்திராணியைத் தன் மகளோடு வரும்படி தெரிவித்தான். செய்திகள் யாவுந் தெரிந்துகொண்ட இந்திராணியும் தன் மகளோடும் தேவர் குழுவோடும் திருப்பரங்கிரியை யடைந்து தன் மகனையும் கணவனையுங் கண்டு பெற்ற நாளிலும் பதின்மடங்கு அன்பும் களிப்புங்கொண்டாள். குருடன் கண் பெற்றது போலானாள். இந்திரன் பின்பு இந்திராணியும், தேவயானையும் வந்திருக்குஞ் செய்தியையும், தன்னுடைய விருப்பத்தையும் முருகப் பெருமானுக்குத் தெரிவித்தான். முருகப்பெருமானும் அவன் விருப்பத்துக்கு இணங்க இந்திரன் அளவு கடந்த களிப்புற்றுப் பலதூதுவர்களைக் கொண்டு பலமுனிவர்களுக்கும் முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய பல அரசர்களுக்கும் செய்தியனுப்பினான்.

செய்தி கேட்ட பல முனிவர்களும், அரசர்களும், முசுகுந்தச் சக்கரவர்த்தியும் திருப்பரங் குன்றத்தை வந் தடைந்தார்கள். இந்திரன் திருமணத்திற்கு வேண்டியபடி, திருமண மன்றத்தில் பல மண்டபங்களும் அமைத்து வைத்திருந்தான். வந்தவர்கள் அவரவர்களுக்கு அமைக் கப்பட்ட மண்டபங்களில் தங்கினார்கள்.

தேவயானை யம்மைக்குத் தோழிப்பெண்கள் இயற்கை யழகுடன் சிறிது செயற்கை யழகுஞ் செய்தார்கள். பல மலர்களைச் சூட்டி யணைப் பொருள்களைப் பூசி, பொன் னுடையுடுத்துப் பல அணிகளால் ஒப்பனை செய்தார்கள். இந்திரன் திருமணத்திற்கு வேண்டிய யாவும் நிறைவுற் றிருப்பதைப் பிரமாவுக்குத் தெரிவித்தான். பிரமன் முதலி யோர் தக்க நற்பொழுதைக் கணித்தார்கள். அந்தப் பொழுதே ஒப்பில்லாத நன் முழுத்தமா யிருப்பதைக் கண்டு, முருகப்பெருமானை யழைத்துவரப் பிரமாவும் விட் டுணுவும் இந்திரனோடு எழுந்து, முனிவர்களும் தேவர் களும் சூழ, முருகப்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோயி லுக்குப் போய்ப் பெருமானை வணங்கித் திருமணத்திற்கு எழுந்தருளும்படி வேண்டினார்கள். முருகப்பெருமான் மயில் ஊர்தியில் ஏறி வீரவாகு தேவர் முதலிய வீரர்களும் பூதப் படையுஞ் சூழ, மங்கலக் கோலத்தோடு புறப்பட் டார். புறப்பட்டு, இந்திரன் கோயிலை யடைந்தார்.

இந்திராணி அரம்பையர்களோடு எதிர்வந்து வணங்கித் திருவடிகளிற் பால் வார்த்து வழிபட்டு, பல திரிகள் ஏற் றிய ஆலாத்தியால் மும்முறை சுற்றி அழைத்துச் சென் றாள். முருகப்பெருமான் திருமணமன்றத்தை யடைந்து தனி இருக்கையில் அமர்ந்தார். மற்றத் தேவர்களும் தத் தமக்கு இடப்பட்ட இருக்கைகளில் அமர்ந்தார்கள். சிவபெருமானும் உமாதேவியோடு தோன்றினர். உடனே முருகப்பெருமான் எழுந்து வணங்கினார். உமாதேவியார் முருகப்பெருமானைத் தம் கரங்களாலெடுத்து மார்போ டணைத்து, உச்சி மோந்து அன்போடு அளவளாவி உவகை காட்டினர். சிவபெருமானும் உமாதேவியோடு உயரிய

...RAI UNIVERSITY LIBRA...

இருக்கையில் அமர்ந்தார். திருமணவிழா தொடங்கப் பெற்றது. கண்டோரனைவரும் வாழ்த்த, இந்திரன் தேவ யானை யம்மையாரை அழைத்து வந்தான். முருகக்கடவு ளும் தேவயானை யம்மையாரும் அரியணையில் வீற்றிருந் தார்கள். இந்திரன் இந்திராணியோடு நின்று தன் மகள் கையை முருகப்பெருமான் கைமேல் வைத்து, மந்திர விதிப்படி தன் மகளை நீர்வார்த்துக் கொடுத்தான். முருகப் பெருமான் அதனை யேற்றுத் தன் திருக்கையால் தேவ யானை யம்மையார் திருக்கழுத்தில் ஒரு மங்கல நாணைப் பூட்டினார். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் யாவருங் கண்டு மகிழ்ந்து வணங்கினார்கள். பின்னர், இந்திரன் திருமணத்திற்கு வந்தவர்களுக்கு ஒரு பெரு விருந்தளித் தான். வந்தவர்கள் யாவரும் உண்டு களித்து விடை பெற்று நீங்கினார்கள். முருகப்பெருமானும் தேவயானை யம்மையாரோடு தங்கோயிலை அடைந்தார்.

முருகப்பெருமான் சில காலம் திருப்பரங்கிரியில் தங்கிப், பின் தேவர்களோடு தேவ உலகத்திற்குச் சென் றார். தேவருலகம் சீர்குலைந்திருப்பதைக் கண்டு தேவ தச்சனைக் கொண்டு அதைப் புதுப்பித்து ஒரு நல்ல நாளில் இந்திரனுக்கு முடிசூட்டினார்.

சில நாட்கள் அங்குத் தங்கிவிட்டுப், பின் தம் பரிவா ரங்களோடு கைலையை யடைந்து சிவபெருமானையும் பார் வதிதேவியாரையும் அன்போடு வணங்கி, நடந்த செய்தி களைத் தெரிவித்துப் பெருமான் அருள் பெற்றுத் தம் பதி யாகிய கந்தமலையை யடைந்து தேவயானை யம்மையா ரோடு தன் கோயிலில் வீற்றிருந்தருளினார்.

சிலகாலஞ் சென்றதும், சுந்தரவல்லியின் பரிபக்குவத் தையும் அவள் அன்பையும் நினைத்து, அவளை ஆட்கொள் ளும் பொருட்டுத் திருத்தணிகை மலையை யடைந்தார். அங்கு நாரதர் முதலிய முனிவர்களும் தேவர்களும் நாடோறும் வந்து வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

# வள்ளியம்மை திருமணம்

தொண்டை நாட்டிலே மேற்பாடி என்னும் ஊருக்கு அருகில் பல வளங்களிலுஞ் சிறந்த வள்ளிமலை என்று ஒரு மலை யுள்ளது. அதன் சாரலில் உள்ள சிற்றூரில் வேடர்கள் வாழ்ந்து வந்தார்கள். வேடர்களில் தலைமை பெற்றவன் நம்பி யென்பான். அவன் மனைவி பேர் கொடிச்சி. இவர் கள் மகட்பேறில்லாமல் தங்குல தெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாள், நம்பிராசன் தன் மனைவியோடும் வேலை யாட்களோடும் தினைப்புனத் திற்குச் சென்றான். சென்ற பொழுது வள்ளிக்கிழங்குக் கொல்லையில் ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டுச் சென்று அங்கு ஒரு பெண் குழந்தையைக் கண்டு திடுக் கிட்டான்.

குழந்தையின் அழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. குழந்தையை எடுத்தான்; தன் உடையால் துடைத்தான்; முகத்தோடணைத்தான். பலதரம் மோந்து தன் மனைவி கையிற் கொடுத்தான். அவன் மனைவியும் குழந்தையை வாங்கினாள். மார்போடணைத்தாள்; பால் சுரந்தது; குழந் தைக்கு ஊட்டினாள். அவர்களுக்கும் பெண் குழந்தை யில் லாத கவலை நீங்கியது.

தங்கள் கூட்டத்தாரோடு மகிழ்வுடன் குழந்தையை வீட்டிற்குக் கொண்டு சென்றார்கள். தங்கள் குல தெய்வ மாகிய முருகக்கடவுளுக்கு வழிபாடு ஆற்றினார்கள். பல ருக்கும் வேண்டும் தானங்கள் கொடுத்துக், குழந்தை வள்ளிக் குழியில் தோன்றியதால் வள்ளி என்ற பெயரும் இட்டார்கள்.

குழந்தையை அன்போடு வளர்த்து வந்தார்கள். குழந்தையும் மலைச்சாரலில் உலாவி வளர்ந்து வந்தது.

இவ்வாறு வளர்ந்து வருங்கால் மணப் பருவங் கிட்டி யது. தங்கள் குல வழக்கப்படி வள்ளியைத் தினைப்புனத்

திற்குக் காவலாக வைத்தார்கள். வள்ளிநாயகியாரும் ஆலோலம் என்ற தொனியைச் செய்துகொண்டும், கவண் கல்லை வீசிக்கொண்டும் பறவைகளும் விலங்குகளும் தினைப் புனத்தை அழியாமல் காத்து வந்தார்.

அவ்வேளை நாரத முனிவர் அவ்வழி வந்தார். அவள் அழகைக் கண்டு அவளுடைய முன் வரலாற்றைக் கருதினார். திருமால் மகள் சுந்தரவல்லி வேடுவர் குடியில் வள்ளியாக வளருவதையறிந்து, அவளோடு சிலவார்த்தைகளாடி விட்டுத் திருத்தணிகையில் கோயில்கொண்டிருக்கும் முருகப்பெருமான் முன்னிலையிற் சென்றார். வள்ளி நாயகியைக் கண்டதையும், அவள் வரலாற்றையும் பெருமானுக்கு அறிவித்தார். அவளை மணந்து இருவரும் உடனிருந்து தமக்கு அருள் புரியவேண்டுமென்று முறையிட்டார். முருகப்பெருமானும் வள்ளி தம்மை அடையும்படி செய்த தவத்தையும் அவள் பரிபக்குவத்தையுங் கண்டார். நாரத முனிவர் வேண்டியவாறே அருள்புரிய இசைந்தார். வள்ளி நாயகி தன்னை முருகக்கடவுள் காதலித்து மணக்க வேண்டுமென்று தவம் புரிந்ததற்கு ஒப்ப, முருகக்கடவுள் ஒரு விரதங் கொண்ட வேட்டுவக் கோலத்தைக் கொண்டார். கையில் வில்லைத் தாங்கி ஒரு மானைத் தேடிச் செல்பவர்போல் வள்ளி நாயகி தங்கியிருக்கும் பரணையடைந்தார். வள்ளிநாயகியிடம் சென்று "பெண்ணே! உன் பெயர் யாது? உன் பெற்றோர் உன்னைத் தனியாக வைத்துப் போகலாமா?" என்று விரகங் கொண்டார் போலப்பல கேள்விகளைக் கேட்டும், வள்ளிநாயகி ஒன்றும் பேசாமை கண்டு "பெண்ணே! நீ என்னை நோக்காமலும் என்னோடு பேசாமலுமிருந்தால், உனக்குப் பழி வந்தடையும்" என்றார். இப்படிப் பல மொழிகளைப் பேசிப் பெரிதும் காமங் கொண்டவர் போல நடித்தார். அவர் செய்கை, அலையுள்ள தடாகத்தில் தோன்றும் சூரிய சந்திரரின் தோற்றத்தை ஒத்தது.

இவ்வாறு வள்ளி நாயகிமுன் முருகப் பெருமான் நின்றுகொண்டிருக்கும்பொழுது, வேடர் தலைவன் தன்

கூட்டத்தாரோடு அங்கு வந்தான். அப்பொழுது முருகக் கடவுள் ஒரு வேங்கை மரமாகி நின்றார். வேட்டுவத்தலைவன் தன் மகளுக்குத் தினைமா, தேன், பால், வள்ளிக் கிழங்கு மற்றுந் தின்பண்ட முதலியவை கொடுத்துவிட்டுத் திரும்புகிறபோது, புதிகாகத் தோன்றிய வேங்கை மரத்தைக் கண்டு வியப்புற்று வள்ளிநாயகியைக் கேட்டான். அவளும் ஒன்றுஞ் சொல்ல முடியாததைக் கண்டு, இதில் ஏதோ மாய மிருக்கலாமென்று நினைத்து வேலையாட்களைக் கொண்டு அதை வெட்ட முயற்சித்தான். பின் ஏதோ காரணத்தால் அம்மரத்தை வெட்ட வேண்டுமென்ற நினைப்பு மாறியது. இது நல்ல நிழலைத் தருகிறது. இதை வெட்டவேண்டாம் நிற்கட்டுமென்று சொல்லிப் போயினான்.

வேடர் தலைவன் சென்றதும், முருகக்கடவுள் வேங்கை மரவுருவம் நீங்கிப் பழைய வடிவத்தோடு வள்ளி நாயகி முன் தோன்றினார். முன்போலக் காதற் குறிப்பைக் காட்டக்கூடிய பல உரைகளைச் சொல்லி அவள் தம்மோடு வரும்படி வேண்டிக்கொண்டு நின்றார். அப்பொழுது வேடர் தலைவன் பழையபடி அங்குவந்தான். வள்ளி நாயகி பெருமானிடம் 'வேடுவர்கள் கொடியர்கள். நீர் இங்கு நிற்கலாகாது போய்விடும்' என்று வேண்டினாள். முருகக்கடவுள் ஒரு முதிய சிவனடியார் வேடத்தோடு வேடர் தலைவன் வரும்வழியில் தோன்றினார். வேடர் தலைவனும் சிவனடியாரை வணங்கினான். சிவனடியாரும் அரசனை வாழ்த்தி அருள்மொழிகூறித் திருநீறளித்தார். வேடர் தலைவன் அவர் வந்த காரணத்தையும் அவர் விருப்பத்தையும் வினவ, சிவனடியாரும் மூப்பும் மயக்கமும் நீங்கும்படி தாம் குமரியாடப் போவதாகத் தெரிவித்தார். வேடர் தலைவன் பெரியாரை அழைத்துக்கொண்டு தன் மகள் இருக்குமிடத்திற்குச் சென்று அவர் இளைப்பு நீங்க அங்குத் தங்கியிருக்கும்படி சொல்லிப் போயினான். தலைவன் சென்றதும், பெரியார் தமக்குப் பசி மிகுந்திருப்பதாகத் தெரிவித்தார். வள்ளி நாயகி தேனும் தினைமாவும்

பழங்களும் கொடுத்து உண்பித்தாள். பின் பெரியார் தமக்கு நீர் வேட்கை மிக்கிருப்பதாகத் தெரிவிக்க, அம்மையார் அம்மலைக்கு அருகில் ஒரு சுனை யிருப்பதாகவும், தண்ணீர் பருகி வரும்படியாகவும் தெரிவித்தாள். பெரியார் அம்மையாரைத் தாமே வந்து காட்டும்படி வேண்டினார். அம்மையார் முன் செல்ல, பெரியார் பின் சென்று சுனையையடைந்து விடாய் தணிப்பவர்போல மிகுந்த ஆவலோடு நீர் பருகிவிட்டுப் பின் அம்மையாரை அழைத்துப், "பெண்ணே! பசியைத் தணித்தாய், விடாயைத் தணித்தாய், மோகத்தைத் தணிக்கவில்லை" என்றார். இச்சொற்களைக் கேட்ட வள்ளிநாயகியாருக்குச் சினம் மிகுந்தது. பெரியாரைப் பல வகையிலும் கடிந்து பேசிவிட்டுப் "பெரியாரே! நடந்தருளும்" என்று சொல்லித் தினைப்புனம் நோக்கிப் புறப்பட்டாள்.

அப்பொழுது முருகப்பெருமான விநாயகக் கடவுளை வேண்டினார். விநாயகக் கடவுள் யானையாகி வள்ளிநாயகி முன்தோன்ற, அவள் அஞ்சிப் பெரியாருக்குப் பின்வந்து அபயமடைந்தாள். யானை தன் கொம்புகளால் பெரியாரையே தாக்குவது போல்வர, அம்மையார் பெரியாரிடம் "இந்த யானையினின்று காத்தருளும். நான் நீர் விரும்பியவாறு செய்வேன்" என்று சொல்ல, பெரியார் யானையைப் போகும்படி வேண்டிக்கொள்ள யானை போய்விட்டது. பின் இருவரும் கூடினார்கள். முருகப்பெருமான் தன் இயற்கை வடிவத்தைக் காட்ட வள்ளி நாயகியார் திடுக்கிட்டு நடுநடுங்கி வியர்த்து வணங்கி அடியேற்கு இத்திருவுருவத்தை முன்பே காட்டலாகாதா வென்று மயக்கத்தோடு நின்றார். முருகப்பெருமான் நான் காதலித்தது உன்னைக் கூடவேண்டுமென்று நீ செய்த தவத்திற்கிணங்க இவ்வாறு வந்து கூடினேன் என்றார். வள்ளி நாயகியார் விடை பெற்றுக்கொண்டு தினைப்புனத்தை யடைந்தார்.

அயல் புனத்திலிருந்த பாங்கி வந்து அம்மையாரை வணங்கி நின்றாள். அம்மையார் தோற்றத்தையும் செயல்

களையும் மாறுகக் கண்டாள். காரணத்தை வினவினாள். அம்மையாரும் தாம் சுனையாடப்போனதாகச் சொன்னார். பாங்கி, கண் சிவக்கவும், வாய் வெளுக்கவும், தனங்கள் விம்மவும், உடம்பு மெலியவுஞ் செய்கிற சுனை எங்கிருக்கிறதென்றாள். இப்படிப் பேசிய பாங்கியை வள்ளி நாயகியார் சினந்து "நீ என் உற்ற துணையல்ல'' என்றாள். முருகக்கடவுள் அப்பொழுது வளைத்த வில்லும் அம்புமாகத் தினைப்புனத்தை யணுகி, இவர்களை நோக்கி, யான் எய்த அம்புபட்டு வருந்தி ஓடிய யானையை நீங்கள் கண்டதுண்டோ வென்று கேட்டார். பாங்கி "உமது வலியை எங்களிடம் கேட்பதில் பயனென்ன? உம்மையொத்த வேடர்களிடம் அன்றோ கேட்க வேண்டும்' என்றாள். பின் வள்ளி நாயகியாரை நோக்கினாள். அவர்கள் இருவருடைய கண்களும் ஒருப்படுவதைக் கண்டாள். தான் ஒரு புறமாகச் சென்றாள். முருகக் கடவுள் பாங்கியை நோக்கித் தங்களோடு ஒத்திருக்கவேண்டுமென்று கேட்டார். பாங்கி, முதலில் மறுத்துப் பல அறவுரைகளைச் சொல்ல முற்பட்டாள். பின் இருவருடைய பெருங் காதலையும் வருத்தத்தையுங் கவனித்து அதற்கு இசைந்தாள். வள்ளி நாயகியாரும் பாங்கியும் ஒரு மாதவிச் சோலையைச் சுற்றி வருவதாகச் சென்றார்கள். பாங்கி, வள்ளிநாயகியாரை ஒரு புறமாக விட்டுவிட்டுத்தான், மலர் கொய்து வருவதாகச் சென்றாள். அவ்விடத்தில் முருகக்கடவுளும் வள்ளிநாயகியாருந் தனித்தார்கள். சிறிது பொழுதானதும் பாங்கி மலர் கொய்துகொண்டு வந்தாள். வேங்கை மரங்கள் பூத்தன. தினை விளைவுக்கு வந்து விட்டது. வேடர்கள் வந்து தினைப்புனத்தைச் சுற்றிப் பார்த்து அறுக்கத் தொடங்கினார்கள். காவல் செய்துகொண்டிருந்த பெண்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். வள்ளிநாயகியார் காதலரைக் காண முடியாததால் பெரிதும் வருந்தினார். தாய் அவள் வாட்டத்தைக்கண்டு வெறியாடுவாரைக்கொண்டு காரணம் கேட்டாள். அவர்கள் குலதெய்வம் தொட்டிருப்பதாகச் சொன்னார்கள். அன்றிரவு முருகக்கடவுள் பாங்கியை வந்து கண்டார்.

அவள் அங்கிருக்குஞ் செய்திகளைச் சொல்லித் தேவியாரை அழைத்துக்கொண்டு போய்விடுவதே தகுதியென்றாள். யாவரும் உறங்கும் நள்ளிரவில் முருகக்கடவுளும் வள்ளி நாயகியாரும் வீட்டை விட்டுப் புறப்பட்டு அருகிலுள்ள ஒரு காட்டை யடைந்தார்கள். தாய்மார் விழித்ததும் வள்ளிநாயகியாரைக் காணது வருந்திப் பாங்கியிடம் வினவினார்கள். அவளும் ஒன்று அறியாதவள்போல நடித்தனள். தாய் தன் கணவனுக்குத் தெரிவித்தாள். வீரர்களைக்கொண்டு பல இடங்களிலும் தேடினார்கள்.

வள்ளிநாயகியாரின் அடிச்சுவட்டைப் பற்றித் தொடர்ந்து சென்றார்கள். ஒரு சோலையில் வள்ளி நாயகியாரும் முருகக்கடவுளும் உடனிருப்பதைக் கண்டார்கள். சோலையை வளைந்துகொண்டு முருகக்கடவுள்மீது பல அம்புகளை எய்தார்கள். வள்ளிநாயகியார் பலவாறு புலம்பினார். அவர் மனம் பதைபதைத்தது. முருகக் கடவுளை எதிர்த்துப் போர் செய்யும்படி வேண்டினார். பெருமான் முன்னிருந்த சேவல் கூவியது. எதிர்த்துப் போர் செய்த வீரர்கள் அனைவரும் மாண்டுவிட்டனர். வள்ளிநாயகியார், மாண்ட கூட்டத்தை வந்து பார்க்கும் போது தம் தந்தையும் தமையனும் சுற்றத்தாரிற் பலரும் மாண்டு கிடப்பதைக்கண்டு பெரிதும் புலம்பி வருந்தினார். உடனே பெருமான் வழி நடப்பவரைப் போல, புறப்படு வதைக்கண்டு தாமும் ஒன்றும் பேசாது உடன் தொடர முயலுகையில், நாரத முனிவர் தோன்றி நடந்த செய்தி களை யெல்லாங் கேட்டு, இறந்தவர்களை மீண்டும் உயிர்ப் பிக்க வேண்டுமென்று வேண்டினார். பெருமான் அருள் செய்ய அவர்கள் துயின்று கண் விழிப்பவர் போல எழுந் தார்கள். பெருமானுடைய ஆறு திருமுகங்களையும், பன் னிரண்டு திருக்கைகளையும், வேல் முதலிய படைகளையும் கண்டு களித்தார்கள். தங்கள் குல தெய்வத்தின் அருளை நினைந்து பலவகையிலும் போற்றிப் பெருமானைத் தங்கள் ஊருக்கு வந்து தங்கள் குடியறிய வள்ளி நாயகியாரை மணந்துகொள்ளுமாறு வேண்டினார்கள். முருகப்பெரு

மான், வள்ளி நாயகியார், நாரத முனிவர் ஆகிய மூவரும் சிற்றூரை யடைந்தார்கள். முனிவரும் பெருமானும் ஒரு புலித்தோல் இருக்கையில் அமர்ந்தார்கள். வள்ளிநாயகி யாருக்குத் தம் வேட்டுவத் தோற்றம் நீங்கி ஒரு தெய்வப் பெண்ணின் உருவம் அமைந்தது. நம்பி ராசன் வள்ளி நாயகியாரின் கையைப் பெருமான் கைமேல் வைத்துத் தேவியாரை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினன். நாரத முனிவரும் திருமணத்தின் மற்றச் சடங்குகளைச் செய்து முடித்தார். தேவர்களும், திருமால், பிரமா, சிவபெரு மான் முதலியோரும் தங்கள் தேவியர்களோடு தோன்றி மகிழ்ந்து, பூமாரி பொழிந்தார்கள். வேட்டுவ மன்னனும் தன் சுற்றத்தாரோடும் மற்றும் சிற்றூரிலுள்ளாரோடும் தொழுது நின்றான். முருகப்பெருமான் எழுந்து நம்பி மன்னனை அவன் சிற்றூரை ஆண்டுகொண்டிருக்கும்படி அருள் புரிந்து தேவியாரோடும் திருத்தணிகை மலைக்குப் புறப்பட்டார்.

தேவியாரும் தாய், தந்தை, செவிலித்தாய், பாங்கி முதலியோரின் வாழ்த்துரைகளைப் பெற்றுப் பெருமா னுடன் சென்றார். திருத்தணிகை மலையில் பெருமானும், தேவியாரும் சில நாட்களிருந்தார்கள். அங்கு வள்ளி நாயகியார் சிவலிங்க வழிபாடு ஆற்றிக்கொண்டிருந்தார்.

பின், பெருமான் வள்ளிநாயகியாருடன் திருத் தணிகைவிட்டு நீங்கிக் கைலை மலையை யடைந்து அங்குள்ள கந்தமலையில் தம் கோயிலை யடைந்து தெய்வயானையம்மை யாரைக் கண்டார். தெய்வயானை யம்மையாரும் அரு ளோடும் அன்போடும் வள்ளிநாயகியாரை ஏற்றுக் கொண்டார்.

சிலநாட்கள் சென்றபின் தேவியாரிருவரும் தங்கள் முன் நிலையை வினவப், பெருமான் அவர்களிருவரும் திரு மாலின் புதல்விக ளென்றும், தம்மை மணக்கவிரும்பித் தவஞ் செய்தன ரென்றும், அவர்களைத் தெய்வப் பெண் ணாகவும் குறப் பெண்ணாகவும் தோன்றும்படி தாம் அருள்

செய்ததாகவும், அதன்படி அவர்கள் வளர்ந்து வந்ததாகவும், பெருமான் அவர்கள் விருப்பின்படியே ஏற்றுக் கொண்டதாகவுந் தெரிவித்தார். பெருமானுக்கு வேல் ஞானசத்தி. வள்ளி நாயகியாரும் தெய்வயானையம்மையாரும் இச்சாசத்தியும் கிரியாசத்தியு மாகின்றனர்.

"மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி,
ஏவருந் துதிக்க நின்ற வீராறு தோள் போற்றி, காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி, யன்னன்
சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல் போற்றி
போற்றி."

சூரனும் வேலனும்

முற்றும்.

# தக்கன் வரலாறு

## முன்னுரை

தேவலோகத்தை முன்போல அடைந்து வாழ்ந் திருக்கும் சயந்தன் ஒருநாள் வியாழ பகவானிடம் தங்க ளுக்கு நேர்ந்த துன்பங்களுக்குக் காரண மென்னவென்று வினவ, தக்கனுடைய புகழ், வீரம் முதலியவற்றையும் அவன் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து பல வரங்களைப் பெற்றுப் பின் அவரை மறந்து வேள்வி செய்ததையும், பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர் கள் அவ்வேள்வியிற் கலந்திருந்ததால் அவர்கள் இத் துன்பங்களையடைய நேர்ந்ததென்றும், தக்கனுடைய வரலாற்றைத் தொடக்கமுதல் முடிபுவரை சொல்லத் தொடங்கினர்.

## தக்கன் வரலாறு

பிரமாவின் புதல்வனுகிய தக்கன் ஒருநாள் தந்தையை யடைந்து கடவுளுண்மையைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டான். "சிவபெருமான் தன்னுடைய இடப் பாகத்தி லிருந்து விட்டுணுவையும், வலப்பாகத்திலிருந்து என்னையும் தோற்றுவித்து உயிர்க்குயிராய்த் தோன்ருத் துணையாக இருந்து எல்லாஞ் செய்துகொண்டிருக்கின்ருர். நம் மனத்திலிருந்து நம்மை நல்வழிப் படுத்துவார். மயங்குகிற பொழுது தெளிவிப்பார். உலக முழுதும் உள்ளும் புறம்பு மாக நிறைந்திருக்கிருர். எல்லாம் அவருடையன. எல்லாம் அவர் செயல். எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து அழித்து மீண்டும் படைப்பவரும் அவரே. சீவர்களை ஆண்டருளும் தலைவரும் அவர். முதலும் முடிவில்லதா வரும், அருவும் உருவும் ஒளியுமாக இருப்பவரும் அவர். அன்பர்களுக்கு அவர்கள் வேண்டியாங்கு வேண்டியவற்

றைக் கொடுப்பவரும் அவர். சாம்பல், எலும்பு முதலிய அணிகள் அவருடைய அழித்தல் படைத்தல் முதலிய செயல்களைக் குறிக்கின்றன. சிவபெருமானே பரம் பொருள். எங்களுடைய செயலும் பெருமையும் அவரை வழிபட்டமையாற் கிடைத்தன. அவர் அருளினாற் பெற முடியாத தொன்றுமில்லை. அவரே பதிப்பொருள். மற்றவைகள் அவருடைய ஆணையில் நிற்பன" என்று சொல்லி அவருடைய அருளைப் பெறுவதற்கு அவரை நோக்கித் தவஞ் செய்ய வேண்டுமென்றுஞ் சொன்னான்.

தந்தையின் விருப்பப்படி தக்கனானவன் மானச வாவியை யடைந்து அதன் ஒரு பக்கத்திலிருந்து மழை, வெயில், பனி, காற்று முதலிய இவைகளுக்கு வருந்தாமல் பிராண வாயுவை அடக்கி, முதுகை வளைக்காமல் நிமிர்ந்து யாகமுறைக்குத் தக்கபடி உட்கார்ந்துகொண்டு, கண்களைப் புருவத்தின் நடுவில் நிறுத்தி மனதை ஒருமைப் படுத்திச் சிவபெருமானை, மனத்தில் உருவகப் படுத்தி வழிபட்டு, ஐந்தெழுத்தை முறைப்படி ஓதி நெடுங்காலம் தவம் செய்தான்.

சிவபெருமான் பெற்ற மூர்ந்து வந்து அவன் முன் தோன்றினார். தக்கன் எழுந்து பலபல வகையில் போற்றினான். பெருமான் அவன் விருப்பத்தை வினவ, தக்கன் சிவபதத்தை யடையும்பேறு ஒன்றையும் விரும்பிக் கேளாமல், "எல்லா உலகத்திலும் என் ஆணை செல்ல வேண்டும். உம்மைத் தவிர எல்லோரும் எனக்கு அடங்கி நடக்கவேண்டும். நான் உமக்கு வணக்கஞ் செய்வதைத் தவிர வேறு எவருக்கும் வணக்கஞ் செய்யாதிருக்கவேண்டும். எனக்கு எண்ணிறந்த புதல்வர் புதல்வியர்களும் அருளவேண்டும். உமாதேவியை மகளாகப் பெற்றுஉமக்கு மணஞ் செய்துகொடுக்கவேண்டும்" என்ற வரங்களைக் கேட்டான். சிவபெருமான் அவ்வரங்களைக் கொடுத்து, "நீ நன்னெறியில் நின்றால் இவை நிலைபெற்றிருக்கு" மென்று சொல்லிமறைந்தருளினார். தக்கனும் மகிழ்ச்சி

யொடு தன் தந்தையாகிய பிரம்மாவை யடைந்து, தான் வரம் பெற்ற செய்தியைத் தெரிவித்தான். பிரம்மாவும் பின் நடக்கப்போவதை யறிந்து மனங்கலங்கினார்.

தக்கன் பூவுலகத்தில் தக்கபுரி என்ற நகரை யமைத்து சுக்கிராச்சாரியார், அசுர மன்னன் முதலியோர் துணையாக அதில் அமர்ந்தான். ஒரு வேதவல்லி என்ற பெண்ணை மணந்து பல பிள்ளைகளைப் பெற்று அப்பிள்ளைகளைத் தன்னைப்போற் படைத்தற்றொழிலைச் செய்துகொண்டிருக்க வரம் பெறுமாறு தவஞ் செய்ய அனுப்பினான். பிள்ளைகள் தகப்பன் ஆணைப்படி தவஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது நாரதமுனிவர் தோன்றி அவர்களை யாது காரியத்திற்காகத் தவஞ் செய்துகொண்டிருக்கிறீர்களென வினவ அவர்களும் தங்கள் தந்தையின் ஆணையைச் சொல்ல, நாரத முனிவர் அந்த விருப்பதை இகழ்ந்து வீடு பேற்றின் பெருமையைச் சொல்லி அதனை விரும்பித் தவஞ் செய்யும்படி சொல்ல, அவர்களும் அவர் காட்டிய வழியில் நடந்து வீடு பேறடைந்தார்கள்.

தக்கன் தன் பிள்ளைகள் வரம் பெற்று வராததையும் அவர்கள் நாரத முனிவரின் அருளுரையால் துறக்கம் புக்கதையுங் கண்டு, பின்னும் பல புதல்வர்களைப் பெற்றுத் "தவஞ்செய்து, படைத்தற்றொழில் கைவரப் பெற்று வாருங்கள்" என்று அனுப்பினான். அவர்களுக்கும் நாரத முனிவர் முன்போல அறிவுறுத்தி, வீடு பேறடையும்படி செய்தார். இச்செய்திகளை யறிந்த தக்கன் தன் பிள்ளைகளைத் தனக்கு உதவாதபடி செய்த நாரத முனிவரை "உலகமெங்கும் அலைந்து திரிவாய்" என்று வசவு கூறினான்.

பின் பெண்மக்களைப் பெற்றுத் தன் குடியைப் பெருக்கவேண்டுமென்று கருதி (1) சுபுத்தி (2) புத்தி (3) சிரசை (4) திருதி (5) துட்டை (6) கிரியை (7) கீர்த்தி

---

* வீடு பேறு - மோக்ஷம். 2. வரம் – பேறு, அருள்.

(8) சிரத்தை (9) இலச்சை (10) மேதா (11) அத்தி (12) சாந்தை (13) வடி (14) கியாதி (15) சம்பூதி (16) நாரிசன்னதி (17) மிருதி (18) பிருதி (19) ஊற்சை (20) அனசூசை (21) சுவா (22) கமை (23) சுவாதை என்னும் இருபத்து மூன்று பெண்களைத் தருமருக்கும், பத்துப் பெண்களைப் பிருகு, மரீசி, புலத்தியர், அங்கிரர், புலகர், வசிட்டர், அத்திரி, அக்கினி, சிரது, பிதரர் என்பவர்களுக்கும் மணஞ் செய்து கொடுத்தான். பின் நட்சத்திரங்கள் இருபத்தேழையும் பெற்றுச் சந்திரனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இவ்வாறு அவன் குடும்பம் பலவகையிலும் பெருகியது.

## உமையம்மையார் தக்கன் மகளானது

சிவபெருமான் உமைப் பிராட்டியாரோடு கைலாய மலையில் வீற்றிருக்கும்போது, ஒரு நாள் உமையம்மையார் நம் பெருமானை வணங்கி, "பெருமானே! உமது உண்மை நிலையை உணர்த்தவேண்டும்" என்று வேண்ட பெருமான் தாம் யாதொரு நிலைத்த குணமுமின்றி எங்கும் நிறைந்திருத்தலையும், முக்குணங்களின் வழிப்பட்ட போதே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களை நடாத்துதலையும் அக்குணங்களின் வழிப்பட்ட நிலையில் மும்மூர்த்தங்களாதலையும், உயிர்களின் பாசங்களை நீக்குமாறு திருவருளாற்றலால் எண்ணுதலையும், அவ்வுயிர்களின்பொருட்டு * ஐந்தொழில் நடாத்துதலையும், குடிலையினின்று தோன்றி நவந்தரு பேதங்களாதலையும், மும்மாயையினின்று முப்பத்தாறு தத்து

* ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியம்) - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்).

* குடிலை. பிரணவம். அது படைப்புக்கு முன்னுள்ள பிரணவத்தின் வேருகாத சோதி 'ஓம்' வடிவமுள்ளது. அகர உகர மகரச் சேர்க்கை. இதுவே பிரம, விட்டுணு, ருத்திரர்களாகப் பிரிந்தது.

* மும்மாயை. தூமாயை (சுத்த மாயை), தூவாமாயை (அசுத்த மாயை), பகுதிமாயை (பிரகிருதி மாயை).

வங்கள் தோன்றுமாறு செய்தலையும், விஞ்ஞானகலர் (ஒரு மலத்தர்), பிரளயாகலர் (இரு மலத்தர்), சகலர் (மூம் மலதகர்) ஆகிய ஆன்மாக்களையும் முப்பத்தாறு தத்துவங்களையும் தோன்றவைக்கு முறையே ஒடுங்கவைத்தலையும் கூறினர். அம்மையார் இவையனைத்தும் அருளாற்றலாகிய தம்மால் விளைவன வென்று நினைந்தனராக, அதனை புணர்ந்த பெருமான் அருளாற்றலாகிய இறைவியிடத்தும் தாம் கலந்து நின்றாலன்றி இவை நிகழாவென்பதை யுணர்த்தவேண்டி, இவற்றை உண்மைப்படுத்தச் சிறிது பொழுது தவ நிலையில் அமர்ந்தார். அமர்ந்ததும் உயிர்களெல்லாம் உணர்வற்று உயிரில் பொருள்களாயின. பின் இறைவியார் வேண்ட, பெருமான் தமதருள் பெற்ற பதினொரு உருத்திரர்களுக்கும் உணர்வு வரச் செய்தனர்.

அவர்கள் குண்டலம், மண்டலம், வேதிகை யென்று சொல்லப்படுகின்ற மூன்றனுள் மண்டல விதிப்படி பெருமானை எழுந்தருளச் செய்து 'ஐந்தெழுத்தோதி' பூதசுத்தி, அந்தரியாகம் செய்து மலர்களைத் தூவி அன்போடு வழிபட்டு உலகத்தைப் பழைய நிலைப் படுத்தினர்கள்.

இவ்வழிபாடு மாசித்திங்கள் தேய்பிறை (கிருட்டின பக்கம்) (பதினான்காம் நாள்) சதுர்த்தசியில் இரவு நான்கு யாமத்திலும் செய்யப்பட்டது. இங்ஙனம் ஆண்டுதோறும் அதே நாளில் சிவநேயர்கள் ஆண்டவனை வழிபட்டு வருகின்றார்கள். இந்நாளே சிவராத்திரி என்னும் நன்னாளாகும்.

தேவர்களும் உலகத்தாரும் மேற் சொல்லியபடி இறைவன் ஒருமை நிலையடைந்தபோது அறிவில்பொருளாகிக் கடவுளுணர்ச்சியின்றிப் போனதால் அவ்வுயிர்த்தொகுதிகளின் பாவங்களனைத்தும் உமாதேவியாரை யடைந்தன. அவை நீங்கும்வண்ணம் பெருமான் கட்டளைப்படி இறைவியார் பூமியில் வந்து, காளிந்தி (யமுனை) யாற்றில் ஒரு சங்கின் வடிவமாய் ஒரு பதுமாசனத்தில் வீற்றிருந்து தவஞ் செய்துகொண்டிருந்தனர்.

---

உயிரில் பொருள்—சடப்பொருள்

பிரமாவின் மகனாகிய தக்கன் அம்பிகையைப் பெண்ணாகப் பெற்றுச் சிவபிரானுக்கு மணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டியபதற் கிணங்கச் சங்குவடிவத்தோடு இருக்கும் உமையைக்கண்டான். சங்கு பெண்ணாக மாறியதையுங் கண்டான். அப்பெண்ணை எடுத்துத் தன் மனைவி வேதவல்லியிடங் கொடுத்து வளர்த்து வந்தான்.

குழந்தைக்கு ஐந்தாண்டு நிரம்பியதும், இறைவனை நோக்கித் தவஞ் செய்யும் பலவகை ஏற்பாடுகளும்அமைத்துத் தோழிப்பெண்கள் பலரோடு அனுப்பினன். உமைப்பிராட்டியும் இறைவனை நோக்கி நாடோறும் அன்போடு தவங்கிடந்தார். இறைவனும் உமையம்மையாரை அழைத்துக்கொள்ள மாறுவேடம் பூண்டு தக்கபுரிவந்து, கன்னிகா மாடத்தை யடைந்தார். அங்கு அம்மையார் தோழிப் பெண்களிடம் தம் வரவை அம்மையார்க்குத் தெரிவிக்கும்படி கூற அத்தோழிப் பெண்கள் அம்மையார்க்குத் தெரிவித்து விடைபெற்று வந்த பெரியவரை அம்மையார்பால் அழைத்துச் சென்றார்கள். அம்மையார் அப்பெரியவரைக் கண்டதும் வணங்கி நின்றார். வந்த பெரியவர், தம்மை மணந்துகொள்ள வேண்டுமென அம்மையாரைக் கேட்க, அம்மையார் அதைக்கேட்டதும் வருந்தித் தாம் சிவபெருமானையே மணந்துகொள்ளத் தவஞ் செய்துகொண்டிருப்பதாகவும், அவரை யன்றி வேறு எவரையும் மணப்பதில்லை யென்றுந் தெரிவித்தார். வந்தவர், “சிவபெருமான் உன்னை மணந்துகொள்ளமாட்டார்” என்றார். அம்மையார், அவர் வராதொழியின் தாம் உயிர் விடுவதாய்த் தெரிவித்தார். உடனே சிவபெருமான் தம் இயற்கை வடிவைக் காட்டினர்.

அதனைக் கண்ட அம்மையார் பெரிதும் மகிழ்ந்து வணங்கி நின்றார். தோழிப்பெண்கள் இச்செய்தியைத் தக்கனுக்குத் தெரிவித்தார்கள். பின் திருமணத்திற்கு வேண்டும் ஏற்பாடுகள் நடந்தன. ஒற்றர்கள் உலகமெங்கணுஞ்சென்று செய்தியைத் தெரிவித்தார்கள். திருமணத்

திற்கும் எல்லாரும் வந்து கூடினார்கள். மந்திர விதிப்படி திருமணம் நடந்தது. தக்கனும் வேதவல்லியும் உமா தேவியார் கையைச் சிவபெருமான் கைமேல் வைத்து நீர் வார்த்தார்கள். திருமணம் முடிந்ததும், சிவபிரான் ஒரு மாயஞ் செய்தார். உமையம்மையார் காணாதவாறு மறைந் தருளினார். சிவபிரான் மறைந்தருளவும் அம்மையார் பெரிதும் வருந்தினார். இதனைக் கண்ட தக்கனும், கடவு ளின் மாயச் செயலைக் கண்டு பலவாறு நினைத்து வருந்தி னான்.

அதன் பின்னும் அம்மையார் இறைவனை நோக்கித் தவங்கிடந்தார் சிவபெருமான், தக்கன் காணாதவாறு அம்மையார் முன் தோன்றி, அவரைத் தம்மோடு அழைத் துச் சென்றார். இதனை யறிந்த தக்கனுக்குச் சினம் மிகுந்தது. அதனால் நம் பெருமானை வெறுத்து அவரை நினைப்பதை விட்டு விட்டான். பிரமாவும் மற்றத் தேவர் களும் தக்கனைத் தேற்றித் திருக்கைலாயத்திற்குப் போய், இறைவனையும் உமைப்பிராட்டியையும் கண்டு வரும்படி வேண்டினார்கள். தக்கனும் போக உடன்பட்டுத் திருக்கைலாயத்திற்குச் சென்றான். திருநந்தி தேவரும் பூதகணங்களும் தக்கனை உள்ளே விடவில்லை. ஆதலால் தன்னை இன்னாரென்று தெரிவித்தான். பூதகணங்கள் அவனை வெறுத்துப் பேசி, அவன் சிவபெருமானை இகழ்ந்து பேசியதாகவும், அவன் அவரைக் காணத் தகுதி யற்றவனென்றும் சொன்னார்கள். தக்கன் மிகுந்த சினத் தோடு தன் நகர் திரும்பினான். அங்கு எவருஞ் சிவ வழிபாடு செய்யக்கூடாதென்று கட்டளையிட்டான். எவ ருந் தக்கன் கட்டளைக்கு அஞ்சி நடந்து வந்தார்கள்.

## பிரமன் வேள்வி

பிரமா ஒரு வேள்வி செய்தார். அதற்குப் பலரும் வந்திருந்தார்கள். திருநந்தி தேவரும் இறைவனுடைய வேள்வியுணவைப் (அவிர்ப்பாகத்தைப்) பெற்றுக்கொள்ள

வந்திருந்தார். தக்கன் அவரைப் பலவாறு இகழ்ந்து வேள்வியுணுக் கொடுக்க மறுத்துவிட்டான். ஆதலால் திருநந்தி தேவர் தக்கனைச் சபித்தார். சிவபெருமானை மறந்து வேள்வி செய்பவர்கள் கெட்டுப்போவார்கள் என்று, சினந்து கூறினர். இத்தீமொழியே (சாபமே) சூரன் தோற்றத்திற்கும் தேவர்கள் துன்புற்றதற்குங் காரணம்.

திருநந்தி தேவர் திருமொழிக்கும் ஆணைக்கும் அஞ்சிப் பலகாலம் எவருமே வேள்வி செய்யத் துணிந்திலர்.

## தக்கன் வேள்வி

பின் தக்கனே சிவபெருமானை நீக்கி ஒரு வேள்வி செய்ய ஏற்பாடுகள் செய்தான். கங்கைக்கரையில் கனகலம் என்னும் வனத்தில் ஒரு பெரிய வேள்விச் சாலையை அமைத்தான். சிவபெருமானையன்றித் தேவர்கள் பலரையும் அழைத்தான். உலகத்திலுள்ள அந்தணர் பலர் வந்து கூடினர்கள். அகத்தியர், சனகாதி முனிவர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாசர், பராசரர் இவர்கள் தவிர மற்றவர்கள் வேள்வியிற் கலந்து கொண்டார்கள்.

ததீசி முனிவர் அவ்வழி வரும்போது வேள்விச் சாலையைக் கண்டார். வேள்வியின் விவரத்தை விசாரித்தார். தக்கன், தான் சிவபெருமானை நீக்கி ஒரு வேள்வி செய்வதாகத் தெரிவித்தான்.

## ததீசி முனிவர் உபதேசம்

ததீசி முனிவர் தக்கனுக்குப் பல அறிவுரைகள் கூறினர். 'சிவபெருமானே வேள்வித்தலைவர், அவருக்கு 'அவிர்ப்பாகம்' வானேருணு உரித்து, அவரை நீக்கி வேள்வி செய்யக்கூடாது' என்று தடுத்தார். சிவபெருமானே உலகமாகியும் பிரம விட்டுணுக்களாகியும், பேதம்,

அபேதம், பேதாபேதமாகியும் நிற்குந் தன்மையைத் தெரிவித்தார். ஏகன், பிந்து, தேவதேவன் தோன்றாத் துணை முதலிய எல்லாம் அவரே யென்றுந் தெரிவித்தார். ஆயினும் தக்கன் சினம் தணியவில்லை.

பின்னும் ததீசி முனிவர், ஆணவ மலமே பிறவிக்குக் காரணம்; அஃது இறைவன் அருளால் அவரை வழிபட்டுத் திருநீறணிந்து ஐந்தெழுத்தோதினால் மட்டுமே நீங்கும் என்றார். தக்கன் மனதில் கொண்ட சினம் தணியவில்லை. பின்னும் அவர், விதி வலியையும் அழிவையுந் தெரிவித்தார்.

தக்கன் பின்னும் நகைத்துப் "பரம்பொருளோ எலும்பை அணியும், சாம்பலைப் பூசும், பன்றிக்கொம்பையும் ஆமையோட்டையுந் தரிக்கும், புலித்தோலை யுடுத்து யானைத் தோலைப் போர்த்திக்கொள்ளும், தீ, மான், மழு, சூலம் இவைகளை ஏந்தும், பூத சேனை சூழ எங்குந் திரியும், பிச்சை எடுக்கும், கூத்தாடும், வெண்டலையைத் தலையில் அணியும், ஆடையின்றித் திரியும், எருதில் ஏறும், நஞ்சையுண்ணும், சுடலையில் ஆடும், ஒரு பெண்ணைத் தலையிலும், மற்றொரு பெண்ணை இடப் பாகத்திலும் வைக்கும் என்று சொல்லி, அப்படிப்பட்ட சிவனுக்கு யான் செய்யும் வேள்வியில் முதன்மை கொடுத்து அவியுணவுங் கொடேன்" என்றான்.

பின்னும் ததீசி முனிவர் தக்கனைத் திருத்த முயன்றார். இறைவன் செயல்களை அவனுக்கு விரித்துச் சொன்னார்.

"இறைவன் பிரம விட்டுணுக்களைத் தோற்றுவித்து, அவர்களுக்கு உரிய தொழிலையுங் கொடுத்துப், பின் உயிர்களைப் படைத்தல் காத்தல்களைச் செய்தும், அவர்கள் வினைக்குத் தக்கவாறு வினைப்பயன்களை நுகர்விக்கச் செய்தும், மல பரிபாகம் வந்த உயிர்களுக்கு வீடுபேறு நல்கியும், மற்ற உயிர்களையும் உலகத்தையும் பின்னும்

அழித்தும், அதன்பின் பிரம விட்டுணுக்களை ஒடுக்கியும் தாமே தனியராக இருக்கிறார். இவ்வாறு இறைவன் ஐந் தொழில் புரிந்து வருகின்றார். இத்தகையர் அணி களையும், செய்கைகளையும் நாம் நினைக்கமுடியுமா? அவை கள் ஐந்தொழிற் கருவிக் காரணங்களாகும்.

முன்னொரு காலத்தில் இரணியாக்கன் (பொற் கண் ணன்) என்பவன் உலகத்திற்கும் தேவர்களுக்கும் துன்பஞ் செய்து கொண்டிருந்தான். விட்டுணு, பன்றி உருவ மெடுத்து அவனை அழித்துத் தாங் கொண்ட வெற்றியின் செருக்கால் மூடப்பட்டுத், தம் செயல் மறந்திருந்தார். அப்பொழுது இறைவன் அதன் கொம்பைப்பிடுங்க, விட்டுணு முன்னிலைமையைப் பெற்றார். இச்செயலின் அறிகுறியாக அக்கொம்பு இறைவனுக்கு அணியாக அமைந்திருக்கின்றது.

தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையை மத்தாக நாட்டிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது மந்தர மலை ஆழ்ந்துவிட்டது. விட்டுணு ஆமையுருவெடுத்து அதனைத் தாங்கினர். பின் கடைந்ததும் அமிர்தம் வந்தது. அவ்வமிர்தத்திற்காகத் தேவர்களும் அசுரர்களும் சண்டை செய்துகொண்டிருந்தனர். விட்டுணு ஆமை யுருவோடு தம்மை மறந்து செருக்குற்றுக் கடலில் உலா விக்கொண்டிருந்தார். அதுகாலை, இறைவன் ஆமையைக் கொன்று விட்டுணுவுக்குப் பழைய பதவி கொடுத்தார். இச்செயலின் குறிப்பாக இறைவன் ஆமையோட்டைக் கொண்டார் என்பது புலனாகின்றது.

ஒரு காலத்தில் தாருகா வனத்தில் முனிவர்கள் பலர் தவஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கடவுளின் நம்பிக்கை இல்லை. மனத்தைப் பொறிவழிச் செலுத்தாது நிறுத்தித் தவஞ் செய்வதே முத்தி கொடுக்குமென்று ஒழுகி, அரிய தவங்கள் புரிந்தார்கள். இவர்களை ஈடேற்ற வேண்டுமென்று இறைவன் நினைத்தார்.

தாம் ஒரு பிச்சை யெடுப்பவர் போலவும், திருமால் ஒரு பெண் போலவும் தாருகாவனத்தை யடைந்தார்கள். (இப்பெண் வடிவையே மோகினி என்பர்) மோகினி, முனிவர்கள் தவஞ் செய்துகொண்டிருக்கிற இடத்தை யடைந்தாள். பிச்சை யெடுப்போர் முனி பத்தினிகள் இருக்கும் வீதியை யடைந்தார். இவரைக் கண்டதும் அப்பெண்கள் இவர்மேற் காதல்கொண்டு இவர் பின் தொடர்ந்தார்கள். இவரும் அவர்களை மயக்கும் முறையில் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தார். முனிவர்களும் மோகினியைக் கண்டு மயங்கித் தங்கள் தவநிலை நீங்கி மோக வலையிற் சிக்குண்டு, அவள் பின் சென்றார்கள். தங்கள் மனைவிகள் ஒரு பிச்சை யெடுப்போனைப் பின்றொடர்ந்து வருவதைக் கண்டார்கள். அவர்களுக்குச் சினம் மிகுந்தது. பிச்சாடன மூர்த்தியைக் கொல்லவேண்டுமென்ற நினைப்பால் ஓர் அபிசார ஓமம் (ஒருவனை மந்திரத்தாற் கொல்லவேண்டிச் செய்கிற ஓமம்) செய்து, அதனினின்று ஒரு புலியைத் தோற்றுவித்துப் பிச்சை எடுப்போனை அழிக்கும்படி அனுப்பினார்கள். பிச்சைக்காரன் வேடங்கொண்ட இறைவன், அப்புலியைக் கொன்று அதன் தோலை உரித்து அணிந்துகொண்டார். பின் ஓமகுண்டத்தினின்றும் ஒரு முத்தலைச் சூலம் புறப்பட்டுப் பிச்சைக்காரனை எதிர்த்தது. அவர், தம்மை அஃது எதிர்க்காதபடி கையில் பற்றிக் கொண்டார். ஒரு மான் வெளிவந்து அவரை எதிர்த்தது. அதையும் அவர் பற்றிக்கொண்டார். பிறகு ஒரு வெண்தலை தோன்றிக் கொக்கரித்துக்கொண்டு பிச்சாடன மூர்த்தியை அணுகியது. அதையும் அவர் தம் தலைமேல் வைத்துக்கொண்டார். பின் ஒரு மனித உருவத்தைத் தோற்றுவித்து அவரை அழிக்கும்படி அனுப்பினார்கள். அந்த உருவத்தையே முயலகன் என்று சொல்லுகிறார்கள்.

இதையும் தம் திருவடியால் அழுத்தித் திருநடனம் புரிந்தார். இதனைக் கண்டாரெல்லாம் நடுங்கினார்கள். அவர்களின் அயர்வைக்கண்டதும், இறைவன்றம் திருக்கூத்தை நிறுத்தினார். முனிவர்களும் தங்கள் செயல்கள் பயனற்

றதை நினைத்து அயர்வுற்றூர்கள். பரத்தின் உண்மையை யுணர்ந்தார்கள். பிச்சாடனமூர்த்தியை வணங்கினர்கள். இவைகளே சிவபெருமான் உண்மையையும் உயர்வையுங் காட்டிக்கொண்டிருக்கிற அறிவிப்புக்கள்.

யானை வடிவத்தையுடைய கயாசுரன் என்பவன் பிரமதேவனை நோக்கித் தவங்கிடந்து தேவர்களையெல்லாம் வெற்றி பெற வரங் கேட்டுப் பெற்றான். அவ்வரங்களைத் தீயவழியிற் செலுத்தினன். முனிவர்கள் கண்டு அஞ்சி ஓடி, காசி விசுவநாதர் திருமுன் சென்று வணங்கிக் குறையிரந்தார்கள். பேரொளி பொருந்திய உருவமொன்று உக்கிர வடிவத்தோடு தோன்றிக் கயாசுரனைக் கொன்று அவன் தோலை உரித்துப் போர்த்தருளியது. அதுவே இறைவன் யானைத் தோலைப் போர்த்திய வரலாறு.

பிரமா ஒரு காலத்தில் செருக்குற்றதால் இறைவனிடத்திலிருந்து ஒரு வைரவ மூர்த்தி தோன்றி ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளிவிட்டார். பின், பிரமா செருக்கடங்கி உண்மை உணர்வு பெற்றார். அத்தலையோடே இறைவனிடததிலுள்ள பிரமகபாலம்.

முன்னொரு காலத்தில் தேவர்களும் அவுணர்களும் அமிர்தம் வேண்டுமென்று பாற்கடலைக் கடைந்தார்கள். அதனினின்றும் ஆலகால விடம் புறப்பட்டது. அதனைக் கண்டு தேவர்கள் முறையிடச் சிவபிரான் அதனை உண்டு, தம் கண்டத்தில் அடக்கி அவர்களைக் காத்தருளினர். இங்ஙனம் கறையுற்ற கண்டத்தைத் திருநீலகண்டம் என்பர்.

உமாதேவியிடமிருந்து ஊழிவெள்ளம், புறப்பட்டு உலகமெங்கும் பரந்ததை, அயன் முதலிய தேவர்கள் கண்டு அஞ்சி அதனைச் சிவபெருமானிடம் முறையிட அவர் அதனைத் துளியாக்கித் தம் சடையில் ஏற்றுக் கொண்டார். இச்செயலே சிவபெருமான் கங்கையைத் தரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இறைவனுடைய இடப்பாகத்திலிருந்து உமாதேவியார் தோன்றியருளினார். அவரை இடப்பாகத்தில் வைத்துக்கொண்டிருக்கும்போது விட்டுணுவும், பிரமாவும், 'தென்பாலுகந்தாடும்' சனகாதி நால்வருந் தோன்றியருளினார்கள். இறைவன், உமாதேவியாரோடு கூடியிருப்பதாலேயே உலகம் போகமனுபவிக்கிறது. இறைவன் தனித்திருப்பாரானால் உலகம் ஒடுங்கும் என்பதனை ;

> "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
> பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
> பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
> விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்னும் திருவாசகத்திலிருந்து இனிது புலப்படுகிறது. இச்செய்திகளை யெல்லாஞ் சொல்லியும் தக்கன் மனம் ஒடுங்கவில்லை. சிவபெருமான் தன்னை இகழ்ந்து விட்டதாகவே அவன் நினைத்தான். ததீசி முனிவர் சலந்தரன், கயமுகன் இவர்கள் வரலாற்றையும் கூறினார்.

## சலந்தரன் வரலாறு

இந்திரன் ஒரு நாள் சிவபெருமானை வணங்கக் கைலாய மலைக்குச் சென்றான். அப்பொழுது சிவபெருமான் வாயிலில் ஒரு பூத கணத் தோற்றத்தோடு நின்றார். இந்திரன் அவரைச் சில கேள்விகள் கேட்டான். அவர் ஒன்றும் விடை கூறாதிருந்தார். தனது வச்சிரப் படையை அவர்மேல் எறிந்தான். பூத கணத்திற்குச் சினம் மிகுந்து பொறிகள் வெளிவந்து கடலிற் கலந்து ஒரு குழந்தையாயின. அதைச் சலந்தரன் என்பார்கள். அவன் அசுர கூட்டத்தைச் சேர்ந்துகொண்டு சலந்தரபுரமென்னும் நகரத்தில் வசித்து வந்தான். பிருந்தை என்பாளை மணந்தான். தேவர்களை வென்றான். இறைவனையும் எதிர்க்கச் சென்றான். இறைவன் ஒரு முதியவரைப்போல இவன் முன் தோன்றினார். முதியவரிடம் இவன் இறைவனோடு

போர் புரியப் போவதாகக் கூறினன். முதியவர் பூமியில் ஒரு சக்கரம் வரைந்தார். அஃது ஒரு சக்கராயுதமாகியது இதை நீ தூக்க முடியுமாவென்று கேட்டார். அவன் வருத்தத்தோடு அதை எடுத்துத் தலைமேல் வைத்தான். அஃது அவன் உடலைக் கிழித்தது. உடனே அவன் மாண்டான்.

## கயமுகன் வரலாறு

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நடந்தது. அதில் அசுரர்கள் தோற்றார்கள். அசுர அரசன், சுக்கிராச்சாரியாரை அடைந்து தேவர்களை வெற்றி பெற வழி வகைகளைக் கேட்டான்.

சுக்கிராச்சாரியாரும், "மேருமலையின் தென் பக்கம் மரகத முனிவர் தவஞ் செய்துகொண்டிருக்கிறார். அவரிடம் ஒரு கன்னிகையை அனுப்பு. அவள் அவரோடு கூடினால் ஒரு புதல்வன் பிறந்து உன் கூட்டத்தை முன்னேற்றுவ'' னென்றார்.

இதைக் கேட்ட அசுர அரசன்; தன் குலத்திற் பிறந்த அழகுடைய பெண்ணை அவரிடம் அனுப்பினன். அவள் பேர் விபுதை. விபுதை அரசன் சொற்படி மரகத முனிவரை யடைந்தாள். அவர் கடுந் தவம் புரிந்துகொண்டிருந்தார். தன் செயலால் அவரை ஒன்றுஞ் செய்ய முடியாதென்று கண்டாள். அரசன் கட்டளையாதலால் தான் திரும்பிச் செல்லவும் அஞ்சினள். இந்த நிலைமையில் அந்த முனிவன் தன் கணவனாகும்படி சிவபெருமானை நோக்கித் தானும் தவமிருக்கத் தொடங்கினள். அவருடைய பார்வை தன்மேல் படும்படியான இடத்திலிருந்து கடுந் தவமியற்றினள். பல நாட்கள் சென்றன.

ஊழின் வலியால் மரகத முனிவர் கண்விழிக்கும்போது, ஓர் ஆண்யானை பெண்யானையைக் கூடுவதைக் கண்டார். வேட்கைநோய் கொண்டார். தவநிலை யழிந்தார்.

வேட்கை மீதூர்ந்தார். அப்போது தம் பக்கந் தவம் புரிந்துகொண்டிருந்த விபுதையைக் கண்டார். அவள் அழகு இவர் காமவிழைவினை மிகைப்படுத்தியது. அவளை யாரென்றுவினவினுர். அவளும் தன் விருப்பத்தைக் கூற இருவரும் இணங்கிக் கூடினுர்கள். விபுதை கருக் கொண்டு யானையின் தோற்றமுள்ள ஒரு ஆண் மகவைப் பெற்ருள்.

முனிவர் சிறிது பொழுது சென்றதும், தம் அறி யாமையால், தம் தவமுயற்சியை இழந்ததற்காகப் பெரி தும் வருந்தினுர். விபுதையைச் சினத்தோடு பார்த்தார். கடுஞ் சொற்கள் சில சொல்லியனுப்பிவிட்டுப் பழையபடி தம் தவமுயற்சியி லீடுபட்டார். விபுதை அசுர அரசனை யடைந்து நடந்ததை மொழிந்தாள். தன் புதல்வனுக்குக் கயமுகன் என்று பெயரிட்டாள். புதல்வனும் வளர்ந்து பல உயிர்களைக் கொன்று தின்றுவந்தான். ஒருநாள் சுக்கி ராச்சாரியார் அவனை யடைந்து, தம்மை அவன் குலகுரு வென்று தெரிவித்தார்.

கயமுகன் அவரை வணங்கி அறவுரை பெற்ருன். சுக் கிராச்சாரியார் கூறிய அறவுரையாவது:—

"கயமுகனே! பல நாட்களை நீ வீணே கழித்துவிட் டாய். இயமன் எப்படியாவது உயிரைக் கொண்டுபோய் விடுவான். உயிருடன் வாழுங் காலத்தில் பெருமை, வெற்றி, புகழ், ஞானம் இவைகளைப் பெறவேண்டாமா? தேவர்களாகிய உங்கள் பகைவர்கள் நிலைமையைக் கவ னித்தாயா? அவர்கள் உயர்வை எப்படியாவது குறைத்து விடவேண்டாமா? நீ இறைவனை நோக்கித் தவங்கிடந்து மந்திரம், மாயம், வரம், உபாயம், பெரியோர்கள் தரு கின்ற படைக்கலம் இவைகளைப் பெறவேண்டாமா? நீயும் உன் குலமும் விளங்கவேண்டுமானுல், நீ பரமசிவனை நோக்கித் தவமியற்றவேண்டும் என்ருர்.

இதனைக் கேட்ட கயமுகன் தவம் புரியத் துணிந் தான். மேருமலைச் சாரலையடைந்து குருவின் அருளுரைப்

படி ஐம்புலன்களையு மடக்கிக் காமவுணர்ச்சி சிறிதுமில்லாமல் ஐந்தெழுத்தை ஓங்காரத்தோடு உருவேற்றினன். பின் பல ஆண்டுகள் பிராணயாமஞ் செய்து, இறைவனை வணங்கி வழிபட்டான். பஞ்சாக்கினியிலிருந்து தவஞ் செய்தான். இவன் தவத்தைக் காணப் பரமசிவன் தோன்றியருளினர். அவரைக் கண்டதும், கயமுகன் தவத்தை விடுத்து அவரை வணங்கி வழிபட்டான். இறைவனும், "உனக்கு வேண்டும் வரம் யா"தென்று வினவ, கயமுகனும் தன்னை எவரும் வெல்ல முடியாதபடி வரம்தரல்வேண்டும் என்றும், தான் ஆயுதத்தால் அழியாதிருக்க வேண்டும் என்றும், ஒரு சமயம் இறந்தாலும் பிறவியுட் புகாதிருக்க வேண்டுமென்றும் கேட்டான்.

இறைவனும் அவன் வேண்டியபடி அத்துளி மறைந்தார். கயமுகனும் பல திசைகளிலுஞ் சென்று போர் புரிந்து வென்று, சம்புத்தீவின் தென்புறம் மதங்கபுரம் என்ற ஒரு நகர் அமைத்து, அதில் வாழ்ந்துவந்தான்.

கயமுகாசுரன் அரசு புரிந்து வருங்காலத்தில், தன்னைக் காணவரும் பலரும் கையால் மும்முறை தலையில் குட்டிக் காதுகளைப் பிடித்துத் தாழவேண்டுமென்று கட்டளையிட்டான். இந்திரன் முதலிய தேவர்களும் இப்படிச் செய்யவேண்டியதிருந்தது. இந்திரன் இப்படிச் செய்ய விருப்பமில்லாதவனய்த் தன் துன்பத்தை இறைவனுக்கு முறையிட்டான். சிவபிரான் உள்ளத்திலும் கயமுகாசுரன் எல்லாரையும் வருத்துவதாகத் தோன்றியது.

இதுநிற்க, ஒருகாலத்துச் சிவபெருமானும் உமாதேவியும் நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்துப் பின் கொலுமண்டபத்தை யடைந்தார்கள். அங்கு உமாதேவியார் இரண்டு யானைகள் கூடுவதுபோன்ற ஒரு செய்கையைக் கண்டார். அவ்விரண்டின் தோற்றமும் அம்மையாருக்கு ஓங்காரத்தை ஞாபகப்படுத்தியது. இதன் விவரத்தை இறைவனை வினவினர். இறைவனும் தேவியாரை அன்போடு நோக்க யானைமுகத்தோடு கூடிய ஒரு குழந்தை

தோன்றியது. அக்குழந்தை, பெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி நின்றது. சிவபெருமான் குழந்தையை நோக்கி உன்னை அன்போடு வணங்கி எச்செயல்களைச் செய்வோருக்கும் யாதொரு இடையூறுமின்றி அவைகளைச் செய்துவைக்க வேண்டுமென்று பணித்தார். அக்குழந்தைதான் விநாயகப் பெருமான். விநாயகப் பெருமானின் அவதாரத்தையறிந்த இந்திரன் முதலாயினோர்; அவரை வணங்கித் தங்கள் குறைகளைத் தெரிவித்தார்கள். விநாயகப்பெருமானும் கயமுகனைக் கொன்று அவர்கள் துன்பத்தை நீக்கித் தருவதாகச் சொல்லி, அசலன் என்பவனுடைய தோளின்மேல் ஏறிக் கயமுகனை நோக்கிச் சென்றார்.

கயமுகனும், விநாயகப் பெருமான் தன்னை எதிர்த்து வந்த செய்தியறிந்து, அவர்முன் தன் பெருமைகளைக் கூறி மமதையோடு எதிர்த்து நின்றான். பெருமானும் கயமுகன் வரங்களை நினைத்து, யாதொரு படைக்கலங்களாலும் அவனை எதிர்க்காமல் தன் கொம்பை யொடித்து அவன் மேல் வீசினார். அஃது அவன்மேல் பட்டதும், அவன் உடம்பிலிருந்து இரத்தம் ஒழுக மயங்கிப் பூமியில் விழுந்தான்.

இது நடந்த இடம் திருச்செங்கோடு என்று சொல்லப்படுகின்றது.

பின் கயமுகன் மயக்கம் நீங்கி ஒரு பெருச்சாளி போன்ற மாயாவடிவமெடுத்துப் பெருமானை எதிர்த்தான். பெருமான் அசலன் முதுகில் நின்று இறங்கி, அப்பெருச்சாளி முதுகில் ஏறிக்கொண்டார்.

இங்ஙனம் ஆணவத்தால் இறந்த பல அசுர சூரரின் வரலாறுகளைச் சொல்லியும், தக்கன் மனம் தணியவில்லை. சிவபெருமானை நீக்கியே தன் யாகத்தை முடிப்பதாகத் தெரிவித்தான்.

ததீசி முனிவர் இவன் மனோநிலையைக் கண்டு மிக்க வருத்தத்தோடு யாகசாலையை விட்டு நீங்கிவிட்டார். தக்கன் யாகத்தைத் தொடங்கினான். பல அபசகுனங்கள் தோன்றின. மூவகை அக்கினியை விதிப்படி வளர்த்துப் பன்னிரண்டு பேர்கள் வேள்வி முறைப்படி வேள்வியைத் தொடங்கினார்கள். இச்செய்தியை உமாதேவியார் கேள்விப்பட்டு இந்த யாகத்தைப் பார்த்துவர வேண்டுமென்று அவாவுற்றனர். இறைவனுக்குத் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். இறைவன் 'நீ போதல் தகாது. தக்கன் நம்மை மதியான்' என்றார். உமாதேவியாருக்குத் தம் தகப்பன் செய்யும் வேள்வியைப் பார்த்து வரவேண்டுமென்ற ஆவல் மிக்கு இருந்ததால், தக்கனை மன்னித்துத் தம்மை அனுப்பவேண்டுமென்று கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு கங்கைக்கரையில் அமைத்திருக்கும் யாகசாலையை யடைந்தார். தக்கன் அம்மையாரை மதிக்கவில்லை. சினக்குறியைக் காட்டி அம்மையாரைத் திரும்பிப் போய்விடலாமென்று கூறிவிட்டான்.

உமாதேவியார், மிகுந்த சினத்தோடு இறைவனையடைந்து தக்கன் தமக்குச் செய்த இழிவைத் தெரிவித்தார். இறைவன் பராமுகமாக இருப்பதைக் கண்டார்.

அம்மையார் தக்கன் யாகத்தை அழிக்கவேண்டுமென்று நெடுநேரம் பெருமானை வேண்டிநின்றார்.

இவ்வாறு உமாதேவியார் வேண்டி நிற்கும்பொழுது, சினஞ் சிந்துகின்ற ஆயிர முகத்தோடு கூடிய ஒரு பெரிய ஆண் உருவம் மிகுந்த ஒலி முழக்கத்தோடு தோன்றியது. இவ்வுருவையே வீரபத்திரர் என்கிறார்கள். பின் ஒரு பெண் உருவம் தோன்றியது. அதனைப் பத்திரகாளி என்கின்றார்கள். உமாதேவியார் விருப்பின்படி இவ்விரண்டு பேரும் யாகசாலையை நோக்கிச் சென்றார்கள்.

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியும் யாகசாலைக்குள் புகுதலும், அங்கிருந்த தேவர்கள் யாவரும் அஞ்சி

னார்கள். தக்கன் இறைவனை மதியாமலே வீரபத்திரரிடத்திலும் பேசினான். வீரபத்திரர் வெகுண்டு தன் தண்டாயுதத்தால் தாக்கினார். பலர் உறுப்புக்கள் சிதைந்தனர். பலர் மாண்டார்கள். பலர் பலவழியாகவும் தப்பியோடினார்கள். இச்செயலைக் கண்ட தக்கன் தன் குற்றத்தை உணர்ந்தான். ததீசி முனிவர் வார்த்தைகள் அவன் நினைவிற்கு வந்தன. தான் தன் மகளை அவமதித்துத் திரும்ப அனுப்பிவிட்டதை நினைத்து நினைத்து, வருந்தினான்.

இந்த நிலைமையில் வீரபத்திரர் அவன் தலையை வெட்டி, எரிந்துகொண்டிருக்கிற ஓம குண்டத்தில் எறிந்தார். இவ்வாறு யாகசாலை நிலைகுலைந்து நிற்கிற சமயம், சிவபெருமான் உமாதேவியாரோடு அங்கு வந்து தோன்றினார். வீரபத்திரரால் யாகசாலையிற் கொல்லப்பட்டுக் கிடக்கிற பிணக் குவியலைக் கண்டதும் தம் சினந் தணிந்து அவர்களை உயிர்ப்பிக்க வேண்டுமென்று உமாதேவியார் எம்பெருமானை மீட்டும் வணங்கினார். அவ்வுடல்கள் திருவருள் பெற்றதும், மீண்டு உயிர் பெற்றன. தக்கனுடைய தலை ஓமகுண்டத்தில் இடப்பட்டதால், ஓர் ஆட்டுத்தலையோடு மீண்டு அவன் எழுந்து தோன்றினான்.

எழுந்த யாவரும், திருவருளை நினைந்து வணங்கி நின்றார்கள். தக்கனும் தன் தவற்றை நினைந்து கங்கா நதிக் கரையை அடைந்து, ஓர் ஆலயம் அமைத்துப் பலகாலும் சிவபெருமானை அன்போடு பூசித்துச் சிவகணத்தைச் சேர்ந்தான்.

ஸ்ரீ கந்தவேள் திருவடிகளுக் கபயம்

திருச்சிற்றம்பலம்

## கந்த விரதம்

வெள்ளிக்கிழமையில் முருகப்பெருமானை நோக்கி விரதமிருத்தல், அவருடைய அருளைப் பெறுதற்கு உரிய வழி. இதை யனுட்டிப்போர் வியாழக்கிழமையிலும் சனிக்கிழமையிலும் ஒரு பொழுதுண்டு, வெள்ளிக்கிழமையில் உண்ணாமல் மூன்று வருட காலம் அவரைத் தியானித்து வருகிறார்கள்.

ஐப்பசி மாதம் சுக்கில பக்கப் [illegible] முதல் ஆறு நாட்களும் முருகப் பெருமானை உபாசித்து, ஏழாவது நாளில் விசேட பூசை செய்து வந்தால், முருகப் பெருமானுக்குப் பெரிதும் உவப்புண்டாகும்.

கார்த்திகை நட்சத்திரத் தினங்கள்தோறும் உண்ணாமலிருந்து, பன்னிரண்டு வருட காலம் முருகப் பெருமானை அன்போடு தியானித்து வந்தவர்கள், அவர் அருளும் பெற்று நினைத்தவைகளையும் அடைவார்கள்.

**ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க, வெற்பைக்**
**கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, அன்னான்**
**ஏறிய மஞ்ஞை வாழ்க, யானைதன் அணங்கு வாழ்க,**
**மாறிலா வள்ளி வாழ்க, வாழ்கசீர் அடியா ரெல்லாம்.**

**நூல் முற்றிற்று.**

MADURAI UNIVERSITY LIBRARY
12 DEC 197
MADURAI-2.

Book supplied by the University
central Co-op Stores, Madurai.